பக்கங்கள்: 30 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 28 ஞாயிற்றுக்கிழமை 14.11.2021 கதிர் 08

## இது ரகசியம் அல்ல!

நேற்று முன்தினம் நாடாளு மன்றில் வரவு - செலவுத் திட்ட உரையை ஆற்றிய புதிய நிதிய மைச்சர் பஸில் ராஜபக்ஷ அதனை ஆற்றி முடிப்பதற்குள் திக்குமுக் காடிப் போய்விட்டார்.

அவரது மூத்த சகோதரர் பிர தமர் மஹிந்த பக்கம்02

# ஒப்பரேசன் வெற்றி; நோயாளி மரணம்!

## கோட்டா அரசின் 'பட்ஜட்' குறித்து கூட்டமைப்பு கடும் விமர்சனம்



(ந.லோகதயாளன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அரசின், நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் சமர்ப்பிக்கப்பட்ட 2022ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத்திட்டம் ''சத்திரசிகிச்சை வெற்றி - நோயாளர் மரணம்'' என்பதைப் போன்றது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப் பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார். 2

## மேலும் 22 பேர் மரணம்

இலங்கையில் மேலும் 22 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இவ்வாறு சாவடைந்தவர்களில் 18 பேர் ஆண்களும், 4 பெண்களும் அடங்குகின்றனர். 2

## 716 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் நேற்று 716 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 49 ஆயிரத்து 500 ஆக எகிறியுள்ளது. 2

# இலங்கையில் மற்றுமொரு கொரோனாக் கொத்தணி!

## தடுப்பதற்கான பரிந்துரை அடங்கிய கடிதம் ஜனாதிபதிக்கு அவசரமாக அனுப்பிவைப்பு

நாட்டில் அமுல்படுத்தப்பட்டிருந்த பயணத் தடை நீக்கப்பட்டதன் காரணமாக மிக விரைவில் மேலுமொரு கொரோனா அலை உருவாகுவதற்கான அபாய நிலை உருவாகியுள்ளது என இலங்கை வைத்தியர் சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது. 2

## 'ஒரே நாடு – ஒரே சட்டம்' செயலணிக்கு மக்களிடமும் கருத்துப் பெறத் தீர்மானம்



'ஒரே நாடு ஒரே சட்டம்' செயலணியில் பொதுமக்களின் கருத்துக்களையும் உள்வாங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது எனச் செயலணியின் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

'ஒரே நாடு ஒரே சட்டம்' என்ற ஜனாதிபதி செயலணியை 2

## போராட்டங்களால் கொரோனா தீவிரம்

### வைத்திய நிபுணர் சுட்டுக்காட்டு



நாட்டில் அமுலில் இருந்த பயணக்கட்டுப்பாடு மற்றும் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் தளர்த்தப்பட்டதன் பின்னரான காலப்பகுதியில் கொரோனாவைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்திருக்கின்றது. இவ்வாறானதொரு சூழ்நிலையில் மக்கள் பெருமளவில் ஒன்றுகூடுவதற்கு வாய்ப்பேற்படுத்தும் போராட்டங்களால் 2

## வவுனியாவில் 47 பேருக்கு கொரோனா

### 17 பேர் மாணவர்கள்

(வவுனியா நிருபர்)

வவுனியாவில் 17 மாணவர்கள் உட்பட 47 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் இனங் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களுடன் 23

## அரசின் திட்டத்தை முறியடிக்க தீவிர முயற்சியில் பங்காளிகள்

### கம்மன்பிலவின் வீட்டில் இரகசிய சந்திப்பு

கெரவலப்பிட்டிய 'யுகதனவி' மின் உற்பத்தி நிலையத்தின் 40 வீத பங்குகளை அமெரிக்க நிறுவனத்துக்கு வழங்குவதற்கு எதிராக போர்க்கொடி தூக்கியுள்ள 23

## மன்னார் பழைய நீர்த்தாங்கி நாளை குண்டுவைத்து அழிப்பு



(ந.லோகதயாளன்)

மன்னார் மாவட்டத்தில் 1985 ஆம் ஆண்டு துறைமுகங்கள் கூட்டுத்தாபனத்தால் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கி ஒன்று நாளை இராணுவத்தினரால் குண்டு வைத்து அழிக்கப்படவுள்ளது.

மன்னார் மாவட்டம், உப்புக் குளம் கிராமத்தில் துறைமுகம் மற்றும் அபிவிருத்தியை 23

# 2 வருடங்களுக்குப் பின்னர் யாழ். மண்ணில் களைகட்டிய பாடசாலைக் கிரிக்கெட் போட்டி



யாழ். இந்து – கொழும்பு றோயல் அணிகள் மோதல்

(இ.கலையமுதன்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, கொழும்பு றோயல் கல்லூரி அணிகள் மோதிய 19 வயதுக்குட்பட்டோருக்கான 30 ஓவர்கள் கொண்ட சிநேகபூர்வ அழைப்பு கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் மேம்படுத்தப்பட்ட மைதானத்தில் நேற்று நடைபெற்றது. 23

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .............

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ராஜபக்ஷ முன்னர் ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் பத்துத் தடவைகளும், பின்பு பிரதமராக இருக்கும் போது ஒரு தடவையும் நிதியமைச்சராக வரவு - செலவுத் திட்ட உரைகளை ஆற்றியிருக்கின்றார்.

கடைசித் தடவையாக கடந்த வருடம் அந்த உரையை ஆற்றும்போதுதான் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சற்றுச் சிரமப் பட்டார். அதுவும் எழுந்து நின்று - தொடர்ந்து நின்றபடி - ஆற்றுவதற்கு அவரது வயோதிபம் - மூப்பு - இடம் கொடுக்கவில்லை. அதனால் சபாநாயகரின் அனுமதியுடன் அவர் அமர்ந்தபடியே உரையாற்றி முடித்தார்.

ஆனால், புதிய நிதியமைச்சர் பஸில் ராஜபக்ஷவுக்கு இது கன்னி வரவு - செலவுத் திட்ட உரை. ஆக இரண்டரை மணி நேரப் பேச்சுக்குத் தயாரிக்கப்பட்ட ஸ்கிரிப்ட் தான். இதிலும் விட பல மணி நேர நீண்ட உரைகளை முன்னைய நிதி அமைச்சர்களும் பிற பிரமுகர்களும் நாடாளுமன்றங்களிலும் நீதிமன்றங்களிலும் தொடர்ந்து நின்றபடி ஆற்றியிருக்கின்றார்கள்.

பஸில் ராஜபக்ஷவை அமர்ந்திருந்து பேசுவதற்கு சபாநாயகர் இடமளித்தும் கூட அவரால் தொடர முடியவில்லை. அதனால் சபையை வழமைக்கு மாறாக, சபாநாயகர் இடையில் ஒத்திவைத்தார். சுமார் பதினைந்து நிமிட நேரம் இடைவெளி கொடுத்தார்.

அச்சமயம் ஜனாதிபதியின் விசேட அறையில் ஓய்வு எடுத்த நிதி அமைச்சரை விசேட மருத்துவர்கள் சோதித்தனர் என்றும் தெரிகின்றது. பிறகு மீண்டும் சபை ஆரம்பமாகி அவர் தொடர்ந்து உரையாற்றினார். இடை நடுவில் படைக்கல சேவிதர் மாத்திரை கொண்டு வந்து கொடுத்தார். அதனை உள்ளெடுத்தவாறு உரையைத் தொடர்ந்தார் நிதி அமைச்சர்.

"நிதி அமைச்சருக்கு திடீரென 'பிரஷர்'. இரத்த அழுத்தம். அதுதான் உரையை வாசிக்க அவர் சிரமப்பட்டார்." - என்றார் ஆளும் தரப்பு விசுவாசி ஒருவர்.

"நாட்டின் பொருளாதார நெருக்கடியின் முழு அழுத்தமும் அவர் மீதுதானே. அதனால்தான் அவருக்குப் பிரஷர்" என்று தொடர்ந்து தமக்குத் தாமே சமாதானம் கூறுவது போல அவர் குறிப்பிட்டார்.

"ஆமாம். நாட்டின் பொருளாதாரத்தை சமாளிப்பது மாத்திரமல்ல, அதைச் சமாளிப்பதற்கான மாய்மாலங்கள் அடங்கிய தமது அறிக்கையை வாசித்து முடிப்பது கூட அழுத்தங்கள் நிறைந்த விடயம்தான் என்பதை இப்போது அவர் நேரடியாகப் புரிந்து கொண்டிருப்பார்" - என்றேன் நான்.

என்ன வாசகர்களே, எனது பதில் சரிதானே...?

*******

தமிழகத்தில் ஆட்சியாளர்கள் குறித்து ஒரு பேச்சு மொழி உண்டு.

புதிதாக வருகின்ற முதல்வர், அதுவரை பதவியில் இருந்த முதல்வர் எவ்வளவோ தேவலை என்று எண்ண வைத்து விடுவார் - என்பதுதான் அந்தப் பேச்சுமொழி.

புதிதாக வரும் முதல்வரின் அலப்பறைகள், எடுப்புகள் அப்படி இருக்கும்.

வடக்கு ஆளுநர் விவகாரமும் அப்படித்தான் போலும். குறுகிய ஓரிரு வருடங்களில் அடிக்கடி ஆளுநர்கள் மாறும் அசாதரணப் போக்கைக் காண்கிறோம். ஒவ்வொரு தடவையும் புதிய ஆளுநர் வரும்போது, இவராது நின்று பிடிப்பாரா, நல்லது செய்வாரா என்று வடக்கு மக்கள் ஏங்கும் - எதிர்பார்க்கும் - நிலைமை.

முன்னைய ஆளுநர் சாள்ஸ் அம்மையார் இருந்தபோது ஒரு முறைப்பாடு வந்தது - மன்னார் பிரதேச சபை முதல்வராக இருந்தவருக்கு எதிராக.

அனுமதியின்றி, களவாக மாடு ஏற்றிச் சென்ற டிராக்டர் ஒன்றை மடக்கினர் பொலிஸார். யுத்தத்தின் முடிவில் இடம்பெயர்ந்தோர் நலனுக்குப் பயன்படுத்த என்ற பெயரில் மீள்குடியேற்ற அமைச்சினால் கொள்வனவு செய்யப்பட்ட அந்த டிராக்டரை அந்த அமைச்சைக் கையாண்ட அரசியல்வாதிக்கு நெருக்கமானவர் ஒருவர் தன் சொந்த பாவிப்பில் வைத்திருந்திருக்கின்றார் - அச்சமயத்தில்.

அந்த அரசியல்வாதியின் வழிகாட்டலில் என்னவோ, அவரின் கையாளான மேற்படி பிரதேச சபையின் தவிசாளர், அந்த டிராக்டர் தமது பிரதேச சபைக்குச் சொந்தமானது எனத் தவறாக நீதிமன்றில் கடிதம் சமர்ப்பித்து, நீதிமன்றைப் பிழையாக வழி நடத்தி, டிராக்டரை விடுவிக்கச் செய்தார்.

இது பற்றிய முறைப்பாடு அப்போதைய ஆளுநருக்கு வந்தது. அவர் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை உள்ளூராட்சிச் சட்டப்படி விசாரணையாளராக நியமித்து விசாரணை நடத்தினார். அந்த விசாரணையாளரின் பரிந்துரைக்கு அமைய சம்பந்தப்பட்ட தவிசாளரை, மேற்படி தவிசாளர் பதவியில் இருந்தும், சபையின் உறுப்பினர் பதவியில் இருந்தும் விலக்குவதாக வர்த்தமானி மூலம் அறிவித்தார் ஆளுநர் சாள்ஸ்.

தவிசாளர் பதவி இழந்தமையால், புதிய தவிசாளர் தேர்வு நடைபெற்றது.

ஆனால் அதற்கிடையில் பதவியிழந்த தவிசாளர் நீதிமன்றுக்குச் சென்றார். அதனால் புதிதாகத் தெரிவு செய்யப்பட்டவரைத் தவிசாளராக நியமிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்தது. விடயம் நீதிமன்ற விசாரணையில் நிலுவையில் உள்ளது.

இதற்கிடையில் சம்பந்தப்பட்ட அரசியல்வாதி, புதிய ஆளுநரைச் சந்தித்து, பதவி விலக்கப்பட்ட தமது ஆளுக்காகப் பரிந்து பேசினார் என்றும் -

ஆளுநரும் காமராஜர் பாணியில் 'ஆகட்டும் பார்க்கலாம்' என்று பதிலளித்தார் என்றும் -

சில வாரங்களுக்கு முன்னர் இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது, மேற்படி தவிசாளரைப் பதவி விலக்கிய வர்த்தமானி அறிவித்தலை கைவாங்கும் விடயம் அடங்கிய கடிதத்தை புதிய ஆளுநர் சட்டமா அதிபருக்கு அனுப்பியிருக்கின்றார் என்று உள்வீட்டுத் தகவல் கசிந்துள்ளது.

இரண்டு விடயங்கள்.

ஒன்று - புதிய ஆளுநர் நேர்மையான், திறமையான, ஒழுங்கான நிர்வாகம் ஒன்று தமது தலைமையில் வடக்கில் கட்டவிழ்கின்றது என்று காட்ட விழைகின்றார். அதற்காக தமக்குக் கீழ் உள்ள மாவட்ட அரச அதிபர், முக்கிய அதிகாரிகள் மற்றும் சமூகத்தின் முக்கிய பிரமுகர்கள் அடங்கிய 'வாட்ஸ் அப்' குழு ஒன்றை உருவாக்கி, மக்களின் முக்கிய முறைப்பாடுகளை அதனூடாகப் பெற்று, உடனுக்குடன் தீர்வு காணும் ஒரு பொறிமுறையை ஏற்படுத்துவது உட்பட பல ஆக்கபூர்வமான எத்தனங்களை மேற்கொள்கின்றார். அத்தகைய முயற்சிகள் 'புதுத் தும்புக்கட்டை நன்றாகக் கூட்டும்' என்ற கதை மாதிரி அடங்கிவிடக்கூடாது. அத்தகைய அவரது முயற்சிகளுக்கு இப்படி ஒரு தலைப்பட்சமாக வர்த்தமானி அறிவித்தலைக் கைவாங்கும் நடவடிக்கை போன்றவை பெரும் பின்னடைவையும் கெட்ட பெயரையும் வாங்கித் தந்து விடும்.

அடுத்தது - ஓய்வு பெற்ற நீதிபதி ஒருவர் மூலம் விசாரணை நடத்தி அந்தப் பரிந்துரை மூலமே முன்னைய ஆளுநர் நடவடிக்கை எடுத்துள்ளார். அந்த முடிவை ஒரு தலைப்பட்சமாகக் கைவாங்கும் தற்றுணிவு அதிகாரம் புதிய ஆளுநருக்கு இருந்தாலும் கூட, உரிய முறையில் அதை அவர் கையாள்வதே பொருந்தமானதும் சரியானதுமாகும்.

'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமல்ல, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்.'

மேற்படி பதவியிழந்த தவிசாளர் நீதிமன்றுக்கு, தம்பாட்டில் ஒரு கடிதத்தை சமர்ப்பித்து, முறையற்ற விதத்தில் டிராக்டரை விடுவித்தமை போன்று, ஆளுநர் நடந்து கொள்ள முடியாது; நடந்து கொள்ளக் கூடாது.

முன்னைய ஆளுநரின் முடிவினால் யாருக்கேனும் அநீதி இழைக்கப்பட்டிருக்கும் என புதிய ஆளுநர் கருதுவாரேயானால் -

அல்லது முன்னைய ஆளுநரின் நடவடிக்கையில் துறைசார் தவறுகள் இருக்கும் என புதிய ஆளுநருக்குத் தோன்றுமானால் -

முன்னையவரைப்போல, உள்ளூராட்சி சபைகள் நிர்வாகச் சட்டங்களின்படி உரிய விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பத்திலிருந்து மேற்கொண்டு, அதன் பின்னர் நீதியான ஒரு முடிவை எடுப்பதே பொருத்தமானதாக இருக்கும்.

மீண்டும் சுட்டுகின்றோம் - 'நீதி நிலைநாட்டப்படுவது மட்டுமன்றி, நிலைநாட்டப்படுவது போல காட்டப்படவும் வேண்டும்....!'

- மின்னல் -

## மேலும் 22 பேர் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இவர்களில் 17 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் இந்தத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 972 ஆக அதிகரித்துள்ளது.

## 716 பேருக்கு ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 381 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 23 ஆயிரத்து 503 ஆக அதிகரித்துள்ளது.

## ஒப்பரேசன் வெற்றி; ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வரவு - செலவுத் திட்டத்தினூடாக சொல்லப்படுகின்ற திட்டங்கள், அறிவிக்கப்பட்டுள்ள செலவீனங்கள் தொடர்பில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

ஆனால், இவற்றை எந்த வருமானத்தில் இறுதியில் கையாளப்போகின்றீர்கள்? இந்த அரசு அதிகமான கடன்களையும் கடனுக்கான வட்டியையும் செலுத்த வேண்டியுள்ளது.

ஆகவே, கடனும் வட்டியும் செலுத்த வேண்டிய அரசால் 2022ஆம் ஆண்டிலே எவ்வாறு அபிவிருத்திப் பணிகளை செம்மையாக மேற்கொள்ள முடியும்?

குறிப்பாக 80 ஆண்டுகளுக்கு மேலாக இலங்கையின் தலா வருமானம், தனிநபர் வருமானமெல்லாம் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளை விடவும் உயர்ந்த நிலையிலேயே இருந்தது. ஆனால், இன்று இலங்கையில் தனிநபர் வருமானங்கள் எவ்வளவு தூரத்துக்குக் கீழ் நிலைக்கு வந்துள்ளன என்பதை அவதானிக்க முடியும்.

சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளில் இவை மேல் நிலைக்கு வந்துள்ளன என்றால் அந்த நாடுகளில் வாழ்கின்ற மக்களுக்கிடையில் இருந்த ஒற்றுமை உணர்வுகளும் அங்கு கட்டி வளர்க்கப்பட்ட இனசௌஜன்யமுமே காரணம்.

ஆனால், இலங்கையில் 70 ஆண்டுகளுக்கு மேல் போரும் இனவாதமும் கைகூடியிருந்த காரணத்தால் இங்கு சரியான பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பி இன ஒற்றுமையோடு இந்த நாட்டைக் கட்டியெழுப்பக்கூடிய தலைவர்கள் உருவாக்கப்படாமை இந்த நாட்டின் மிகப்பெரும் துர்ப்பாக்கிய நிலை.

இனியும் இந்தச் சந்தர்ப்பத்தை இந்த நாடு இழக்கப் போகின்றதா? அல்லது சரி செய்யப்போகின்றதா? என்பதனை காலம் தான் தீர்மானிக்க வேண்டும். இப்போது கூட ஒரு காலம் கனிந்திருக்கின்றது.

தமிழ்த் தேசிய இனத்தை சிங்கள தேசிய இனத்துடன் இணைத்து தமிழ் மக்களுக்கான உரித்துக்களை வழங்கி பொருளாதாரத்தைக் கட்டி வளர்க்க முடியும் என்பதனை நீங்கள் மறந்து விடக்கூடாது.

ஆனால், அவ்வாறில்லாமல் இங்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள கோட்டாபய ராஜபக்ஷ அரசின் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவின் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் "சத்திரசிகிச்சை வெற்றி - நோயாளர் மரணம்" என்பதாகவே உள்ளது - என்றார்.

## இலங்கையில் மற்றுமொரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதைத் தடுப்பதற்கான பரிந்துரைகளை உள்ளடக்கிய கடிதம் அந்தச் சங்கத்தால் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு நடவடிக்கைகளின் அடிப்படையில் தற்போதைய சட்டம் மற்றும் வரையறைகளைக் கடுமையாக்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் பரிந்துரைத்துள்ளது.

அதன்போது சுகாதார நடைமுறைகள் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்பதை முழுமையாகக் கண்காணித்தல் மற்றும் சான்றுப்படுத்தல் கட்டாயமானது என்றும் அந்தச் சங்கம் குறிப்பிட்டுள்ளது. அதேபோன்று முக்கிய தரப்பினருக்கு மூன்றாம் கட்ட தடுப்பூசியாக பைசர் தடுப்பூசியைச் செலுத்துவது அவசியம் என்றும், கொரானாத் தொற்று பரவலடையும் எச்சரிக்கை தன்மையை தற்போதைய நிலையில் கவனத்தில்கொள்ள வேண்டிய கட்டாயம் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதற்கமைய, 60 வயதுக்கு மேற்பட்டவர்கள், மறுவாழ்வாக்கப்பட வேண்டிய 60 வயதுக்குக் குறைவான நோயாளர்கள் மற்றும் சகல சுகாதார சேவையாளர்களுக்கும் மூன்றாம் கட்டமாக பைசர் தடுப்பூசி வழங்க வேண்டும் என்றும் அந்தச் சங்கம் தெரிவித்துள்ளது. கட்டடங்களில் இடம்பெறும் திருமண நிகழ்வுகள், சமய நிகழ்வுகள், மரணச்சடங்குகள், இசைநிகழ்ச்சிகள், பொதுக்கூட்டங்கள் ஆகிய நிகழ்வுகளில் பங்குபற்றுவோரின் எண்ணிக்கையை வரையறுக்குமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

## 'ஒரே நாடு - ஒரே சட்டம்' .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடைமுறைப்படுத்துவது தொடர்பாக பல்வேறு தரப்பினரின் கருத்துக்களையும் கேட்டறியும் இந்தச் சந்தர்ப்பத்தில், பொது மக்களின் கருத்துக்களையும் உள்வாங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, நிறுவனங்கள், குழுக்கள் மற்றும் தனிநபர்களிடமிருந்து யோசனைகள், ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளன எனவும் தேரர் குறிப்பிட்டார்.

பொதுமக்கள் தமது கருத்துக்களை ocol.consultationsgmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது ஒரே நாடு, ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணி, செயலாளர், தபால் பெட்டி - 504, கொழும்பு என்ற முகவரிக்கோ எதிர்வரும் 30ஆம் திகதிக்குள் அனுப்பலாம் எனவும் அவர் மேலும் கூறினார்.

## போராட்டங்களால் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொற்றுப்பரவல் அச்சுறுத்தல் மேலும் அதிகரிக்கும். ஆகவே, போராட்டங்கள் மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடும்போது உரிய சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்கள் முழுமையாகப் பின்பற்றப்படுவது மிகவும் அவசியமாகும்.

- இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் செயற்குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் வைத்திய நிபுணர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அண்மைக்காலத்தில் டெங்குப் பரவலும் தீவிரமடைந்து வருகின்றது எனச் சுட்டிக்காட்டிய அவர், கொரோனா வைரஸ் தொற்று மற்றும் டெங்கு நோய் ஆகிய இரண்டினதும் அறிகுறிகள் பெருமளவுக்கு ஒத்தவையாக இருப்பதனால் மக்கள் அவதானத்துடன் செயற்படவேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

நாடளாவிய ரீதியில் நாளாந்தம் அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்களவிலான வீழ்ச்சி அவதானிக்கப்படாத நிலையில், பொது இடங்களில் இடம்பெறும் ஒன்றுகூடல்களின் போது பின்பற்றப்பட வேண்டிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் அடங்கிய வர்த்தமானி அறிவித்தலொன்று சுகாதார அமைச்சரால் வெளியிடப்பட்டுள்ளது. அதேவேளை, மறுபுறம் அரசுக்கு எதிராக தொழிற்சங்கங்கள் மற்றும் பல்வேறு துறையினரால் முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்கள், மக்கள் போராட்டங்களின் எண்ணிக்கையும் நாளுக்குநாள் அதிகரித்து வருகின்றது.

எனவே, கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடிக்கு மத்தியில் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுப்பதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் தொடர்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

# அடிப்படைப் பிரச்சினைகளுக்கு பாதீடு திட்டம் தீர்வு தரவில்லை

## எரான் விக்ரமரத்ன கூறுகின்றார்

2022 வரவு செலவுத் திட்டம் அடிப்படைப் பிரச்சினைகளிற்கு தீர்வை காணவில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவித்துள்ளார்.

நாட்டு மக்கள் எதிர்கொண்டுள்ள அடிப்படைப் பிரச்சினைகளிற்கான தீர்வை வரவு செலவுத்திட்டம் காணவில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்ட பற்றாக்குறை மற்றும் அந்நிய செலாவணி நெருக்கடி ஆகியவற்றுக்குத் தீர்வைக் காண்பதற்கு வரவு செலவுத் திட்டம் தவறியுள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் ஏற்றுமதி அதிகரித்தால் மாத்திரமே அந்நிய செலாவணி நாட்டுக்குள் வரும் எனக் குறிப்பிட்ட அவர், ஏற்றுமதியாளர்களை வலுப்படுத்த வேண்டிய விடயங்கள் எவையும் இல்லை என்றும் தெரிவித்துள்ளார்.


ஆசிரியர் அதிபர் சம்பள நெருக்கடிக்கு தீர்வை காண்பதற்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ளதை வரவேற்றுள்ள எரான் விக்ரமரத்ன, ஒதுக்கப்பட்ட நிதி போதுமானதா என உறுதியாக தெரிவிக்க முடியாது எனக் குறிப்பிட்டுள்ளார்.

# நாட்டில் உயர்தர மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு திட்டம்

மருந்துப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகளை மேலும் ஊக்குவிப்பதுடன், சர்வதேச சந்தையை இலக்காகக் கொண்டு இலங்கையில் உயர்தர மருந்துகளை உற்பத்தி செய்வதற்கு சர்வதேச அங்கீகாரம் பெற்ற நிறுவனங்களுடன் கைகோர்த்து தனியார் துறையை ஊக்குவிக்க நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ முன்மொழிந்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்ட உரையை சமர்ப்பித்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மருந்துகளின் விலையை சீராக வைத்திருக்க பொருத்தமான விலை நிர்ணய பொறிமுறையை முன்வைக்க ஏற்கனவே முன்மொழிவுகளை சமர்ப்பித்துள்ள அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய குழுவின் பரிந்துரைகளை விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் கூறினார்.

மாங்கல்யா
லக்ஷ்மி நாராயணா
திருமண சேவை
இல:- 266 பலாலி வீதி,
கந்தர்மடம் யாழ்ப்பாணம்.
077 197 1667
077 316 4796

மணமகன் விவரம்

பிறந்த திகதி - 30.04.1992 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - உத்தரட்டாதி
கி.பா - 33 செவ் - 2 இல்
தகைமை - Electronic Eng.
தொழில் - விரிவுரையாளர்
எதிர்பார்ப்பு - பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி -12.08.1992 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 27 செவ் - 7இல்
தகைமை - BSc தொழில் - Sureyor
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 25.03.1993 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - அச்சுவினி
கி.பா - 46 செவ் - 8 இல்
தகைமை - IT Diploma தொழில் - Station master
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

பிறந்த திகதி - 28.01.1991 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 31 செவ் -1 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor, Eng., Banker பட்டதாரி மணமகள்

பிறந்த திகதி - 09.10.1991 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - சித்திரை 3
கி.பா - 19 செவ் 12 இல்
தகைமை - G.C.E A/L தொழில் -Management அரச சேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகள். விவாகரத்து ஆனவர்களும் தொடர்பு கொள்ளலாம்

பிறந்த திகதி - 04.06.1987 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம் 2
கி.பா - 50 செவ் - 8 இல்
தகைமை - B.Com HNDA தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரசசேவை மணமகள்

பிறந்த திகதி - 28.01.1991 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - திருவாதிரை
கி.பா - 31 செவ் - 1 இல்
தகைமை - MBBS தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor & Eng மணமகள்

பிறந்த திகதி -01.04.1991 மதம் - இந்து
ஜாதி - V ஆண் நட்சத்திரம் - பூரம்
கி.பா - 16 செவ் /சூரி 5இல்
தகைமை - B.Sc தொழில்- TO அரச சேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகள்

மணமகள் விவரம்

பிறந்த திகதி - 31.07.1995 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - பூரம் 4
கி.பா - 35 செவ் 12 இல்
தகைமை - Occupational Therapist
தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - Doctor or Eng. மணமகன்

பிறந்த திகதி - 27.10.1990 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருவோணம்
கி.பா - 30 செவ் 7 இல்
தகைமை - BA தொழில் - D.O அரசசேவை
எதிர்பார்ப்பு - அரசசேவை மணமகன்

பிறந்த திகதி - 04.08.1992 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - சித்திரை 2
கி.பா - 3 செவ் - 9 இல்
தகைமை - BA தொழில் -
எதிர்பார்ப்பு - அரச சேவை மணமகன்

பிறந்த திகதி - 28.09.1991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 2
கி.பா - 18 செவ்/ சூரி 10 இல்
தகைமை - B.Com தொழில் - Company
எதிர்பார்ப்பு - வெளிநாடு Canada, Australia மணமகன்

பிறந்த திகதி - 28.09.1991 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கார்த்திகை 2
கி.பா - 18 செவ் /சூரி 5இல்
தகைமை -B.Com, AAT தொழில் - Company
எதிர்பார்ப்பு - Australia, Canada பட்டதாரி மணமகன்

பிறந்த திகதி - 19.03.1990 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - கேட்டை
கி.பா - 17 செவ் - 10 இல்
தகைமை - BSc, Civil Eng. தொழில் - அரச சேவை
எதிர்பார்ப்பு - பட்டதாரி அரச சேவை மணமகன்

பிறந்த திகதி -12.02.1996 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - விசாகம் 4
கி.பா - 26 செவ் - 9 இல்
தகைமை - BSc, Civil Eng. தொழில் - Australia PR
எதிர்பார்ப்பு - Eng Accountan இலங்கை, அவுஸ்ரேலியா மணமகன்

பிறந்த திகதி - 30.08.1993 மதம் - இந்து
ஜாதி - V பெண் நட்சத்திரம் - திருகோணம்
கி.பா - 39 செவ் - 11 இல்
தகைமை - பட்டதாரி தொழில் - Canada PR
எதிர்பார்ப்பு - இலங்கை, கனடா பட்டதாரி
(காரைநகர் மண மகனுக்கு முன்னுரிமை)

Australia, Canada, UK, USA,Swiss, Germany, Italy, France, Newzeland இந்த நாடுகளில் Visa உள்ளவர்கள் இல்லாதவர்கள் மணமகன் மணமகள் விவரம் தந்தால் திருமணம் நிறைவேற்றித் தருவோம்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் வெளிவரும் இம் மாங்கல்யா பகுதியில் மணமக்கள் விவரங்கள் பிரசுரிக்க விரும்பின்
காலைக்கதிர்


# மதுபானங்களின் விலை வெள்ளியே அதிகரித்தது

வரவு செலவுத்திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரிகளைத் தொடர்ந்து மதுபானங்களின் விலையில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை நள்ளிரவு முதல் அமுலுக்கு வரும் வகையில் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவால் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

# பொதுப் பிரச்சினைகளுக்கு விடையளித்துள்ளது பாதீடு

## ஆளும்தரப்பு புகழாரம்

*2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் நாடு எதிர்நோக்கும் மற்றும் பொருளாதாரம் தொடர்பான பிரச்சினைகளுக்கு விடைகளை வழங்கியுள்ளதாக ஆளும்தரப்பு உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.*

*இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் தொடர்பாக அமைச்சர்களான கெஹலிய ரம்புக்வெல, எஸ்.எம்.சந்திரசேன, இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர ஆகியோர் கருத்து வெளியிட்டிருந்தனர்.*

*கொரோனா நெருக்கடியால் பாதிக்கப்பட்ட துறைகளுக்கு நிவாரணம் வழங்குவதில் 2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் கவனம் செலுத்தியுள்ளதாக சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.*

*தேவை ஏற்படின் 2022 வரவு செலவுத் திட்டத்தில் திருத்தங்களைச் செய்யலாம் என்றும் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல உறுதியளித்தார்.*

*இதேவேளை பொது மக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தாத வகையில் வரி விதிப்பதற்கு இந்த வரவு செலவுத் திட்டம் கவனம் செலுத்தியுள்ளது என அமைச்சர் எஸ்.எம்.சந்திரசேன தெரிவித்துள்ளார்.*

*எதிர்க்கட்சிகளின் கருத்துக்கள் அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் வெற்றியை உறுதிப் படுத்தியதாக அவர் மேலும் கூறினார்.*

*அதேநேரம் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் அமுல்படுத்தப்பட்டால் கடன் சுமையிலிருந்து நாட்டைக் காப்பாற்றி பொருளாதார வளர்ச்சியை உறுதிப்படுத்தும் என அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.*

*மேலும் வெற்றிகரமான வரவு செலவுத் திட்டத்தை சமர்ப்பித்தமைக்கு நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ஷவிற்கு இராஜாங்க அமைச்சர் தயாசிறி ஜயசேகர பாராட்டுக்களைத் தெரிவித்தார்.*

# மதுபோதையில் மாமியாரை தாக்கிய மருமகன் கைது

## திருமலையில் சம்பவம்

மதுபோதையில் மாமியாரை தாக்கி காயப்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் மருமகனை கைது செய்துள்ளோம் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந்தச் சம்பவம் வெள்ளிக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர் திருகோணமலை, கோமரங்கடவல அடம்பன் பகுதியைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு உத்தியோகத்தர் எனத் தெரியவருகிறது.

ஒரே வீட்டில் மாமி மற்றும் அவரது மனைவி, பிள்ளைகள் வசித்து வந்துள்ளனர். வெள்ளி இரவு மது போதையில் வந்து மனைவியை தாக்கிய போது மாமியார் குறுக்கே வந்து மருமகனை தாக்குவதற்கு முற்பட்டுள்ளார்.

இந்நிலையில் கோபம் கொண்ட மருமகன் தனது மாமியாரை தடியால் சராமரியாக தாக்கினார் எனவும், இதனையடுத்து மாமியார் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் குறித்த மருமகன் கைது செய்யப்பட்டார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட நபரை திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்,

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com

## தீவிரமடையும் நெருக்கடிகள்

இப்போது நாட்டில் நிலவும் எல்லாப் பிரச்சினைகளுக்கும் சமாளிப்பாக ஒரு விடயம் ஆளும் தரப்பினால் சமாதானமாக முன் வைக்கப்படுகின்றது.

அது – கொவிட் 19 தொற்றால் ஏற்பட்ட பொருளாதாரப் பின்னடைவு அல்லது பாதிப்பு.

அதுதான் இவ்வளவு பிரச்சினைகளுக்கும் பாதிப்புகளுக்கும் காரணம், அந்த நெருக்கடி வந்திருக்காவிட்டால் இலங்கையை வளம் கொழிக்கும் பூமியாக மாற்றியிருப்போம் என்றெல்லாம் சாட்டுச் சொல்லப்படுகின்றது.

உண்மைதான். இலங்கையில் மட்டும்தான் என்றல்ல. உலக நாடுகள் முழுவதிலும் – செல்வந்த நாடுகள், வல்லரசு நாடுகள், வறிய தேசங்கள் எல்லாவற்றிலுமே – கொரோனாத் தொற்று நெருக்கடி பாரிய விளைவுகளையும், நினைத்துப் பார்க்க முடியாத பாதிப்புக்களையும் தந்து நிற்பது உண்மைதான்.

ஆனால் அந்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் இப்போது பாரிய வித்தியாசம் ஒன்று உண்டு. கொவிட் தொற்றைக் காட்டி பொறுப்பைத் தட்டி கழித்துச் சமாளிக்கும் நமது ஆட்சியாளர்கள், அந்த நாடுகளுக்கும் இலங்கைக்கும் இடையில் இப்போது நிலவும் இந்த முக்கிய வேறுபாட்டை தமது சௌகரியத்துக்காக மறந்து விடுகின்றனர்.

கொரோனாத் தொற்றினால் ஏற்பட்ட பெரும் பொருளாதாரப் பின்னடைவுகளிலும், சரிவுகளிலும் இருந்து அந்த நாடுகள் கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு முன்னேறிக் கொண்டிருக்கின்றன.

கொரோனாத் தடுப்பூசிகள், தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகள் போன்றவற்றின் காரணமாக அந்த நுண்ணுயிரியின் கொடூரப் பிடியிலிருந்து கொஞ்சம் கொஞ்சமாக விடுபட்டு, இயல்பு நிலைக்குத் திரும்பும் அந்த நாடுகள் எல்லாம், இழந்த பொருளாதாரப் பின்னடைவுகளில் இருந்தும் மெல்ல மெல்லத் தேறி வருகின்றன. அவற்றின் பொருளாதார நிலைமை கொஞ்சம் கொஞ்சமாக மேம்பட்டு வருகின்றது. நமது அயல் நாடான இந்தியா உட்பட பல நாடுகள் இந்தத் தேறுதலை – மேம்பாட்டை – வெளிப்படுத்தி வருகின்றன.

ஆனால் இலங்கையின் நிலைமை அப்படியல்ல. கொரோனாத் தொற்றின் நெருக்குவாரம் கொஞ்சம் தணிந்த பின்னரும் கூட பொருளாதார நிலைமை மேம்படுவதாக இல்லை. அது இன்னும் இன்னும் மோசமான கட்டத்தை நோக்கி – அதலபாதாளத்துக்கு – சரிந்து வருகின்றது.

மேலும் கொஞ்சம் விளக்கமாகச் சொல்வதானால் கொரோனாவின் கோரப் பிடி கொஞ்சம் தளரத் தொடங்கிய பின்னர்தான் பொருளாதார நிலைமை மோசமாகும் போக்கு இங்கு வேகம் எடுத்திருக்கின்றது. அத்தியாவசியப் பொருள்கள் உட்பட அனைத்தினதும் விலைகள் கன்மூடித்தனமாக எகிறுகின்றன. விலைவாசி உயர்வின் தீவிரம் உச்சமடைந்துள்ளது. ஏனைய நெருக்கடிகளும் மோசமடையத் தொடங்கியுள்ளன.

பெரும் போகம் ஆரம்பித்து வாரங்கள் கடந்து விட்டன. விவசாயிகளோ வீதியில் – சாகுபடி செய்வதா என்பது குறித்தும் இன்னும் கூட முடிவு செய்ய முடியாத இக்கட்டு. ஒவ்வொரு நாளும் நாட்டின் ஒவ்வொரு பகுதியில் மக்களின் அதிருப்தியின் வெளிப்பாடு போராட்டமாக வெடிக்கின்றது என ஊடகங்கள் கட்டிக் காட்டுகின்றன.

ஆக, அதிபர் – ஆசிரியர்கள் சம்பள முரண்பாட்டுப் போராட்டங்களுக்கு மட்டும், அப்பிரச்சினையைச் சமாளிப்பதற்கு இந்த வரவு – செலவுத் திட்டத்தில் மூவாயிரம் கோடி ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக அறிவித்து, தற்காலிகச் சமாளிப்பு மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

பொருளாதாரம், சுகாதாரம், அரசியல் என மும்முனைகளில் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருக்கும் இலங்கைத் தீவு இந்தச் சிக்கல்களில் இருந்து மீளுவதற்கான நிலையான வழிகளை இன்னும் கண்டு பிடிக்கவேயில்லை என்பதுதான் யதார்த்த உண்மையாகும்.

# பணத்தை எவ்வாறு செலவழிக்க முடியும் என்று கூறுவதே வரவு - செலவுத் திட்டம்



சாணக்கியன் கருத்து

2022 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டம் பணத்தை எவ்வாறு செலவழிக்க முடியும் என்பதில் மட்டுமே அக்கறை கொண்டுள்ளது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதிருப்தி வெளியிட்டுள்ளது.

அரசாங்கத்தால் முன்வைக்கப்பட்ட வரவு – செலவுத் திட்டம் தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும்போதே அந்தக் கட்சியின் நாடாளுமன்றஉறுப்பினர்இரா.சாணக்கியன் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாட்டு முதலீடுகள் மூலமே வருவாயை ஈட்டுவதற்கான ஒரே வழியாக இருக்கும் நிலையில் 2022 வரவு செலவுத் திட்டத்தில் இதற்கு தீர்வு காணப்படவில்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

மேலும் வற் மற்றும் வரி விதிப்பு முறை மாற்றப்பட்டாலும், தற்போதைய பொருளாதார நிலையில் இருந்து நாட்டை மீட்டெடுக்க அது போதுமானதாக இருக்காது என இரா.சாணக்கியன் கூறினார். கடனை அடைப்பதற்கும் கையிருப்பில் டொலர்களை வைத்திருப்பதற்குமான எந்தவிதத்திட்டங்களும் இந்த வரவு – செலவுத் திட்டத்தில் இல்லை என அவர் குற்றம் சாட்டியுள்ளார்.

# வாகனங்களின் விலைகள் மீண்டும் எகிறும் சாத்தியம்

## இறக்குமதியாளர் சங்கம் தெரிவிப்பு

இம்முறை வரவு – செலவுத் திட்டத்தின் ஊடாக வாகனங்கள் தொடர்பில் எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்பதால் மீண்டும் வாகனங்களின் விலை அதிகரிக்கும் என எதிர்பார்ப்பதாக வாகன இறக்குமதியாளர்களின் சங்கம் தெரிவித்துள்ளது.

வாகன வரி அல்லது இறக்குமதி தொடர்பில் இம்முறை வரவு – செலவுத் திட்டம் மூலம் எவ்வித தளர்வுகளும் இல்லாமையால் இந்த நிலைமை ஏற்படும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட வாகன இறக்குமதியாளர்கள் சங்கத்தின் தலைவர் இந்திக்க சம்பத், வரவு – செலவுத் திட்டம் தொடர்பில் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படவில்லை.

சந்தையில் உள்ள வாகனங்களும் விற்பனை செய்ய முடியாத நிலைமை ஏற்படும் நிலை காணப்படுகின்றது.

அந்நிய செலாவணி அதிகரிக்கும் வரை வாகனங்கள் தொடர்பில் எவ்வித தீர்மானங்களும் மேற்கொள்ளப்படாதென்றே தோன்றுகின்றது. இவ்வாறான நிலைமைக்கு மத்தியில் வாகனங்களின் விலை மேலும் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றதென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# யாழ். மானிப்பாய், பொன்னாலை வீதிப் புனரமைப்பின் போது பாலங்கள், மதகுகள் சீராக புனரமைப்பதை உறுதிப்படுத்துக!

## வடக்கு ஆளுநருக்கு வலி.மேற்கு பிரதேசசபை கோரிக்கை

யாழ். மானிப்பாய், பொன்னாலை வீதிப் புனரமைப்பின் போது வலி.மேற்கு பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பாலங்கள் மற்றும் மதகுகளை சீராக புனரமைப்பதை உறுதிப்படுத்துமாறு வலி.மேற்கு பிரதேச சபை வடக்கு மாகாண ஆளுநரிடம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பொறியியலாளர், யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் வலி.மேற்கு பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் வலி.மேற்கு பிரதேச சபை கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

மேற்படி வீதி புனரமைப்பின் போது மானிப்பாய்க்கும் சங்கானைக்கும் இடையே பெரியதும் சிறியதுமாக ஆறு வரையான மதகுகள் புனரமைக்கப்படாமல் காப்பெட் இடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்த மதகுகள் அடுத்து வரும் சில ஆண்டுகளிலேயே இடிந்து விழும் அபாயம் காணப்படுவதால் அவற்றைப் புனரமைக்குமாறு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்து வருகின்றனர்.

இந்நிலையில், குறித்த வீதிப் புனரமைப்பின் போது வலி.மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட அனைத்து மதகுகளும் புனரமைக்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு சபை உறுப்பினர் ந.பொன்ராசா பிரதேச சபைத் தவிசாளர் மற்றும் செயலாளர் ஆகியோரைக் கடிதம் மூலம் கோரியிருந்தார்.

இதையடுத்தே, வலி.மேற்கு பிரதேச சபை வடக்கு மாகாண ஆளுநர் உள்ளிட்டவர்களுக்கு கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

## வடமாகாண மரநடுகை மாதம் கார்த்திகை - 2021

"சாகுமுன் உன் பாட்டன் நாட்டிய பழமரங்களைக் கேட்டுப்பார், உனது பரம்பரையின் கனவுகளை இன்னமும் அது வைத்திருக்கக் கூடும் "

- வ.ஐ.ச.ஜெயபாலன்
(கவிஞர்)



# எழில் கதிர்





## கால் அழகு பேணல்



கால்களுக்கான பாராமரிப்பு - கால்களில் அனைவருக்கும் வரும் பெரிய தொல்லையே வெடிப்புகள்தான். பித்தவெடிப்பு என்றால் தோல் காய்ந்துபோதல் என்றே சொல்வார்கள். எதுவாக இருந்தாலும் இது போக்க முடியாத விடயமில்லை. வீட்டில் செருப்பு அணிய பிடிக்காதவர்கள், அதிக எடை உள்ளவர்கள், காய்ந்த தோல் உள்ளவர்கள் , அதிக அழுக்கான இடங்களில் நடப்பவர்கள், தோட்ட வேலை செய்பவர்கள் என்று எல்லோருக்குமே இது பொது சொத்தாக இருக்கிறது.

முதலில் இந்த வெடிப்புகளை எப்படி நீக்குவது என்பதை பார்க்கலாம். தொடர்ச்சியான மிக அவசியம். சுத்தம் செய்ய ஆரம்பிக்கும் முன்பே எப்போதும் கால் நகங்களை சீர் செய்து விடுவது நல்லது. நம் ஊரில் பலரும் ஒட்ட வெட்டிவிடுவதுதான் வழி வழியாக செய்வது. ஆனால் காலில் நகங்கள் வளர்த்தால் அழகாக இருக்கும். காலில் நகங்கள் வளர்க்கும்போது எப்போதும் சதுர வடிவிலேயே கடைப்பிடித்தால் நன்றாக இருக்கும்.

பீர்க்கை நாரிலிருந்து, ப்யூமிஸ் கல்லு வரை பாட்டி காலங்களிலிருந்து சீர் செய்யவென்றே உபயோகப் படுத்தியிருக்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால், அந்தக் காலத்து குளியலறைகளில் கால்களை தேய்க்கவென்றே சின்னதாக சொர சொரப்பான கல் வைத்து கட்டியிருப்பார்கள். இந்த கல்லிற்கு பதிலாக நாம் ஸ்க்ரப்பர் உபயோகிக்கிறோம். அவ்வளவே. கால்களுக்கு இப்படி சீரான உராய்வு, மாய்ச்சுரைசிங் (அந்த காலத்தில் தேங்காய் எண்ணெய்) செய்வதன் மூலம் பித்த வெடிப்புகளை நீக்கிவிடலாம்.

முதலில் நாகா சாயத்தை அகற்றி, நகங்களை வெட்டி கொள்ள வேண்டும். கால்கள் அதிக நேரம் தண்ணீரில் ஊறினால் தான் ஸ்க்ரப்பிங் செய்வது எளிது. கடினமான தோல்களை எளிதில் நீக்கலாம். அந்த காலம் போல இப்போது நம்மால் அதிக நேரம் செலவழித்து, துணியெல்லாம் துவைத்துப் பிறகு குளிப்பதற்கு நேரம் இல்லை. அவசியமும் இல்லை. அதனால் கால்கள் நெடு நேரம் தண்ணீரில் ஊறுவதற்கு வாய்ப்பில்லை. இதற்கு மாற்றாகத் தான் பெடிக்யூர் என்ற பெயரில் கால்களை நெடுநேரம் சுடுதண்ணீரில் ஊறவைத்து பிறகு தேய்க்கிறார்கள். அதனால் வீட்டிலேயே பெடிக்யூர் செய்ய நினைப்பவர்கள், அதற்காக தலைகுளிக்கும் நாளை தேர்ந்தெடுத்தால் நல்லது. நாம் குளித்துமுடிக்கும் போது நமது கால்கள் தண்ணீரில் நன்றாக ஊறியிருக்கும். சளித் தொந்தரவு, சைனஸ் உள்ளவர்கள் ஒரு பக்கெட் சுடு தண்ணீரில் திரவ சவர்க்காரம் ஊற்றி அதில் கால்களை ஊறவைக்கலாம்.

கால்களை தேய்க்கவென்றே கடைகளில் இரும்பில் செய்த கைப்பிடி உள்ள **Foot Scrubber** விற்கிறார்கள். இதனைக் கொண்டு இறந்த செல்களையும், வெடிப்புகளையும் எளிதாக நீக்கலாம். எங்கெங்கு வெடிப்பு, அழுக்கு இருக்கிறதோ, அங்கேயெல்லாம் இந்த ஸ்க்ரப்பரால் நன்றாக ஸ்க்ரப் செய்யுங்கள். அதிக வெடிப்பு உள்ளவர்களுக்கு இதுவே சிறந்தது. ஆனால் ஈரமான கால்களுக்கு சரிவராது.

மிகவும் கடினமாக அங்கங்கே முடிச்சு போல சிலருக்கு தோல் கடினத்தன்மையுடன் இருக்கும். அந்த தோல்களை சீவிவிடலாம். பிறகு பெடிக்யூர் கிட் அல்லது நக கட்டரிலேயே (கொக்கிபோன்று வளைந்திருக்கும், முனை கொஞ்சம் கூராக இருக்கும்) இதனால் நக இடுக்குகளில் உள்ள அழுக்கினை நீக்க வேண்டும். பிறகு கால்களில் சவர்க்காரம் தேய்த்து, கால்தேய்க்க வென்றே கடைகளில் விற்கும் பிரஷினைக் கொண்டு நன்றாக தேய்க்க வேண்டும். இப்போது கால்களை நன்றாக துடைத்துவிட்டு, மாய்ச்சுரைசிங் க்றீமை கால், விரல் இடுக்கு என்று எல்லா இடங்களிலும் மசாஜ் செய்வது போல் தடவுங்கள். பிறகு கால்கள் உலர்ந்ததும், கைகளுக்கு சொன்ன அதே முறையில் நகச்சாயம் போடுங்கள்.

கால்களில் அதிகமான வெடிப்பு உள்ளவர்கள், வெடிப்பு நீக்க கிறீம் உபயோகிக்கும்போது, இரவு தூங்கும்போது நன்றாக கால் வெடிப்புகளில் அந்த மருந்துகளை தடவி, ஒரு சாக்ஸ் அணிந்து கொண்டு உறங்க சென்றால் சிறந்த பலன் கிடைக்கும். இல்லாவிட்டால் தேய்க்கும் அத்தனை மருந்தும் படுக்கையில் பட்டு பாழாவதோடு, கால்கள் சரியாகவும் நாளாகும். கை, கால்களின் பராமரிப்பினை மாதம் இரண்டு முறை செய்து கொண்டால் போதும். எப்போதும் அழகான தோற்றத்தில் இருக்க முகம் மட்டுமல்ல, கை கால்களும் நல்ல பராமரிப்பில் இருப்பது அவசியம்.

உடைகளும் கூட கை, கால்களின் தோற்றத்தை பொறுத்துதான் தேர்ந்தெடுக்க வேண்டும். கை குண்டாக இருப்பவர்கள் அரை கைகளை தவிர்ப்பதும், கால் மிக குண்டாக அல்லது மிக ஒல்லியா இருப்பவர்கள் மினி தவிர்ப்பதும் நல்லது. கால்களில் நிற வேறுபாடு அல்லது அதிகமான கரும்புள்ளி இருப்பவர்கள் சிறிய பாவாடையை அணியும்போது ஸ்டாக்கிங் போட்டுக் கொண்டால் கால்களின் குறைபாடு தெரியாது. கைகளுக்கும் கூட நிற வேறுபாடு இருந்தால் ஸ்ப்ரே பவுண்டேன் அல்லது சாதாரண பவுண்டேன் உபயோகிக்கலாம். அதிக நேரம் தரையில் உட்கார நேர்ந்தால் கால் முட்டி தரையில் படாமல் துணியினை விரித்து அதில் உட்காரலாம். இதனால் நிறம் மாறாமல் இருக்கும். கைகளை மேசையில் வைத்துக் கொண்டு நெடுநேரம் கணனி முன்பு இருப்பது கூட கை முட்டியின் நிறத்தை பாதிக்கும். இதனைப் போக்க பட்டர் அல்லது கோக்கோ பட்டரை தினமும் தடவலாம். நல்ல பலன் இருக்கும்.

கால்கள் குட்டையாக இருப்பவர்கள் நீளப்பாவாடை போடலாம் அல்லது புடைவை கட்டும்போது நல்ல இறக்கமாக கட்டலாம். இது கால்களின் உயரத்தை அதிகமாக்கி காட்டும். கால்களுக்கு செருப்பினை தேர்ந்தெடுக்கும்போதும் மிகுந்த கவனம் தேவை. அதிகமான உயரமுள்ள செருப்புகள் அணிய விருப்பமுள்ளவர்கள், அணியும் நேரத்தையாவது குறைந்த நேரமே இருக்குமாறு பார்த்துக் கொள்ள வேண்டும்.

உயரமான பென்சில் குதி செருப்பு உபயோகிக்கும் முன்பு நமது கால்கள் எம் எடையை நன்கு சமப்படுத்தும் என்று பார்த்துவிட்டு வாங்குங்கள். ஜாகிங், வாக்கிங் செய்ய நல்ல தரமான ஷூக்களையே வாங்குங்கள். செருப்புகள் அணிந்து வாக்கிங் போவதைக் காட்டிலும், ஷூ அணிவதால் உடல் சமநிலை நன்கு இருக்கும். காற்றோட்டமுள்ள ஷூக்கள் அணிவது கால் தொற்றுநோய்களைத் தடுக்கும். ஜிம்முக்கு செல்லும் பழக்கமுள்ளவர்கள் எக்காரணம் கொண்டும் அங்கே குளிக்கும்போது பாத்ரூம் ஸ்லிப்பர் இல்லாமல் குளிக்காதீர்கள். அதிகமாக தொற்று நோய் பரவும் இடங்கள் இவை. இப்படி கை,கால்களை கவனித்துக் கொண்டால் அழகாக மட்டுமல்ல, ஆரோக்கியமாகவும் இருக்கலாம்.

## நகங்களை பராமரித்தல்

பெண்களுக்கு எப்பொழுதுமே நகங்களை பராமரிப்பதில் ஆர்வம் உண்டு. அதிலும் நகங்களை நீளமாக வளர்ப்பதில் மிகவும் ஆர்வம் கொண்டவர். மேலும் நகங்களை தூய்மையாகவும் பிரகாசமாகவும் வைத்துக் கொள்ள விரும்புவர்.

விரல் நகங்கள் அல்லது கால் நகங்கள் எதுவாக இருந்தாலும் அதை தடுப்பதற்கு தங்களால் முடிந்த அனைத்து முயற்சிகளையும் செய்யவேண்டும். ஏனெனில் இது நோய்களுக்கு வழிவகுக்கும்.

நகம் பிட்டிங் என்பது நகங்கள் மீது உருவாகும் செறிவுகள், அவை சிறியதாக இருந்தாலும், மிக மோசமான மற்றும் அழுக்காக தோற்றமளிக்கும். 3 நபர்களில் 2 பேர் பிணைக்கப்பட்ட நகங்களால் பாதிக்கப்பட்டுள்ளனர், மேலும் இதனால் அவர்களுக்கு கடுமையான நோய்கள் ஏற்பட்டுள்ளன. பெண்கள் மட்டுமல்ல ஆண்கள் கூட பிட்டிங் நகங்கள் வருவதில் எரிச்சல் அடைகின்றனர்.

சொரியாடிக் நகம் நோய்: இது நகத்தை மஞ்சள் அல்லது பழுப்பு நிறத்தில் மாற்றிவிடும். இது உங்கள் தோலை பாதிக்கக்கூடியது.

நகம் சீர்குலைவது:- உங்கள் நகத்தின் வடிவம் படிப்படியாக மாறும். மேலும் இது நன்றாக சிதைக்கப் பட்டதாக காணப்படும்.

நகங்கள் சிவப்பு நிறமாக மாறி மற்றும் நகங்களின் மேற்பரப்பில் வீக்கம் ஏற்படுகிறது. நகங்களின் மேற்பரப்பு உடைந்து மற்றும் உலர்ந்து வருவதை நாம் கவனிக்கலாம். வீக்கத்துடன் சேர்ந்து நகங்களின் மேற்பரப்பில் முழுவதும் சுற்றி ஏற்படும் அரிப்பை எதிர்கொள்ளும் மக்களும் உள்ளனர். நகங்கள் கடினமானதாக இருக்கலாம் மற்றும் சிலவிதமான வீக்கத்தையும் நீங்கள் காணலாம். நகங்களை நன்றாக கவனித்துக்கொள்ள மற்றும் எந்த வகை நோய்களையும் தடுக்க, நாம் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். நகங்களைப் போன்ற பிரச்சினைகளை சரிசெய்ய, நகங்களை நன்கு பராமரித்தல் அவசியம். நகங்களை ட்ரிம் செய்து பெடிகியூர் மற்றும் மனிகியூர் செய்து அழகுபடுத்துவது நல்லது.



உங்கள் நகங்களை ஈரப்பதமாக வைத்துக்கொள்வது எந்த நோய்களையோ அல்லது நகங்கள் சம்பந்தமான பிரச்சினையையோ வராமல் தடுக்கும். ஆனால் சந்தையில் இருந்து இரசாயன மாய்ஸ்சரைசர்களை வாங்குவதற்கு பதிலாக நீங்கள் ஒரு இயற்கை மாய்ஸ்சரைசரை முயற்சி செய்யலாம். இறந்த தோல் மற்றும் தொற்றுக்களை அகற்றுவதற்காக தினசரி உங்கள் நகங்களை தேங்காய் எண்ணெய் மசாஜ் கொண்டு செய்யவும்.

உங்கள் நகங்களின் மேற்பரப்பில் விரிசல் ஏற்பட்டிருந்தால் அதை நிரப்ப அலோ வேரா மிகவும் பயன்படுகிறது. அலோ வேரா இலையில் இருந்து ரா அலோ வேரா ஜெல்லை எடுத்து அதை உங்கள் நகத்தில் அப்ளை செய்ய வேண்டும். பிறகு நமது சிக்கினால் அந்த ஜெல் உறிஞ்சு போனதும் நன்கு கழுவவும்.

# விருந்துக்கதிர்






## முசுட்டை கீரை சூப் செய்முறை

**தேவையான பொருள்கள்**

முசுட்டை கீரை1 கட்டு
சோம்பு1 டீஸ்பூன்
தேங்காய் துருவல்அரை கப்
தனியாதூள்1 டேபிள் ஸ்பூன்
சின்ன வெங்காயம் 6
மிளகு1 டீஸ்பூன்
எண்ணெய் தேவைக்கேற்ப
உப்பு தேவைக்கேற்ப
கடலைப்பருப்பு2 டீஸ்பூன்
பச்சைமிளகாய் 3

**செய்முறை**

அரிசி கழுவிய நீரைக் கொதிக்கவிட்டு, கீரையை அதில் சேர்த்து வேகவிட வேண்டும். தேங்காய் துருவல், சோம்பு மற்றும் தனியா சேர்த்து அரைத்து உப்பு மற்றும் அரைத்த விழுதினை அதில் ஊற்ற வேண்டும்.

கடாயில் எண்ணெய் ஊற்றி சோம்பு மற்றும் வெங்காயம் பாதியளவு சேர்த்து, வதக்கி சூப்பில் போட வேண்டும்.

கடலைப் பருப்பை எண்ணெயில் வறுத்து அதனுடன் மிளகு, வெங்காயம், பச்சைமிளகாய் வைத்து தட்டி சூப்பில் போட்டு கொதிக்க விடவும். இப்போது சூடான முசுட்டை சூப் தயார்.

## தேங்காய் பால் அப்பம்



அப்பம் இலங்கையில் இருக்கும் தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் மத்தியில் பிரபலமாக இருக்கும் ஒரு காலை நேர உணவு வகை. குறிப்பாக வடக்கில் இவை மிகவும் பிரபலமான மற்றும் ஒரு பாரம்பரியமான உணவு வகை. அப்பத்தில் பல வகை உண்டு. அதில் வெள்ளை அப்பம், தேங்காய் பால் அப்பம், முட்டை அப்பம், அச்சா அப்பம், மற்றும் நெய் அப்பம் என்பன குறிப்பிடத்தக்கவை. அதில் நாம் இன்று இங்கு காண இருப்பது தேங்காய் பால் அப்பம்.

தேங்காய் பால் அப்பத்தின் விசேடம் என்னவென்றால் இதை பலரும் நினைப்பதை விட வெகு சுலபமாக நாம் செய்து விடமுடியும். தற்போது இருக்கும் இயந்திரமய மான உலகில் தயாரான நிலையில் கடைகளில் கிடைக்கும் மாவுகளை பயன்படுத்த தான் மக்கள் அதிக ஆர்வம்காட்டுகிறார்கள். அந்தவகையில்பெரும்பாலானோர் நாம் அப்பம் செய்ய பயன்படுத்தும் அப்பம் மாவையும் கடையில் வாங்கி தான் பயன்படுத்துகிறார்கள். ஆனால் இதை அதிக வேலையின்றி நம் வீட்டிலேயே வெகு சுலபமாக தயார் செய்து விடலாம். அது மட்டுமன்றி தேங்காய் பால் அப்பம் உடம்பிற்கு மிகவும் நல்லதும் கூட.

உடம்பு சரியில்லாதவர்களுக்கு மருத்துவர்களே தேங்காய் பால் அப்பம் அல்லது இடியப்பத்தை உண்ண பரிந்துரைப்பது வழக்கம். ஏனெனில் தேங்காய் பால் அப்பம் வயிற்றுக்கு மிகவும் உகந்தது. மேலும் தேங்காய் பால் உடம்புக்கு மிகவும் நல்லது. குறிப்பாக இதற்கு வயிற்றுப் புண்ணை ஆற்றும் தன்மையுண்டு. அதனாலேயே அப்பம் பெரும்பாலும் தேங்காய் பாலுடன் தான் பரிமாறப்படுகிறது.

இப்பொழுது கீழே தேங்காய் பால் அப்பம் செய்வதற்கு தேவையான பொருள்கள் மற்றும் எளிமையான செய்முறை விளக்கத்தையும் காண்போம்.

### தேங்காய் பால் அப்பம் செய்முறை

**செய்ய தேவையான பொருள்கள்**

1 கப் இட்லி அரிசி
2 கப் பச்சரிசி
1 கப் துருவிய தேங்காய்
1 தேங்காய்
1 மேசைக்கரண்டி உளுத்தம் பருப்பு
½ மேசைக்கரண்டி வெந்தயம்
½ மேசைக்கரண்டி ஏலக்காய் தூள்
½ மேசைக்கரண்டி சர்க்கரை
தேவையான அளவு உப்பு

### தேங்காய் பால் அப்பம் செய்முறை

அப்பம் செய்வதற்கு முந்தைய நாளில் இட்லி அரிசி, பச்சரிசி, உளுத்தம் பருப்பு, மற்றும் வெந்தயத்தை நன்கு சுத்தம் செய்து கழுவி அதை சுமார் 4 மணி நேரம் வரை ஊற விட்டு பின்பு அவை அனைத்தையும் ஒரு மிக்ஸி ஜாரிலோ அல்லது கிரைண்டரிலோ போட்டு நன்கு நைஸாக அரைத்துக் கொள்ளவும்.

இப்பொழுது தேங்காய் பால் செய்வதற்கு தேங்காயைதுருவி பாழாய் பிழிந்து எடுத்து அதனுடன் அரை மேசைக்கரண்டி அளவு ஏலக்காய் தூளையும் சேர்த்து நன்கு கலக்கி கொள்ளவும்.

அடுத்து இந்த தேங்காய் பாலை ஒரு கிண்ணத்தில் வைத்து கொள்ளவும்.

பிறகு நாம் அரைத்த மாவை ஒரு பாத்திரத்திற்கு மாற்றி அதில் சர்க்கரை, சிறிதளவு உப்பு, மற்றும் நாம் செய்து வைத்திருக்கும் தேங்காய் பாலை கொஞ்சம் கொஞ்சமாக அதில் ஊற்றி அதை தோசை மாவை விட சிறிதளவு கெட்டியான பதத்திற்கு கொண்டு வரவும். (மாவு அதிகம் கெட்டியாக இருந்தால் அது சீக்கிரமாக புளிக்காது.)

பின்னர் மாவு இருக்கும் பாத்திரத்தில் ஒரு மூடியை போட்டு அதை அப்படியே வைத்து சுமார் 6 இலிருந்து 8 மணி நேரம் வரை புளிக்க விடவும்.

8 மணி நேரத்திற்கு பிறகு மூடியை திறந்து பார்த்தால் மாவு நன்கு பொங்கி வந்திருக்கும்.

இப்பொழுது ஒரு தாச்சியை மிதமான சூட்டில் அடுப்பில் வைத்து அதில் எண்ணெய்யை தடவி அதை சுட வைக்கவும்.

தாச்சி சிறிது சூடானதும் அதில் ஒரு கரண்டி அளவு மாவை எடுத்து ஊற்றி ஒரு இடுக்கியின் மூலமோ அல்லது ஒரு துணியின் மூலமோ பிடித்து பக்குவமாக சுற்றி மாவை பரப்பி விடவும்.

பிறகு ஒரு மூடியை போட்டு அதை சுமார் 1லிருந்து 2 நிமிடம் வரை வேக விடவும்.

ஒரு நிமிடத்திற்கு பிறகு தேங்காய் பால் சேர்த்து அப்பத்தை ஒரு தட்டில் எடுத்து வைத்து அதில் தேங்காய் பாலை ஊற்றி அதை சுட சுட பரிமாறவும்.

# ஊறுகாய் செய்வோம்







ஊறுகாய் என்றதுமே பலருக்கும் நாக்கு ஊறும் புளிப்பு, காரம், எண்ணெய் இவற்றையெல்லாம் சரியான விகிதத்தில் பக்குவமாகக் கலப்பதன் மூலம், அமிர்தமாக ருசிக்கும் ஊறுகாய்க்கு அடிமையாகாதவர்கள் இல்லை ‘மாதா ஊட்டாத சோற்றை மாங்காய் ஊட்டிவிடும்’ என்பார்கள். மாங்காய் ஊறுகாய்தான் என்றில்லை அது என்ன ‘ஊறுகாய்’ என்றாலும், சத்தம் இல்லாமல் சாப்பாடு உள்ளே இறங்கும்.

தேவையானவை :– சிறிய வெங்காயம் – 8, துருவிய தேங்காய் – அரை கப், நல்லெண்ணெய் – ஒன்றரை கப், மிளகாய்த்தூள் – 3 தேக்கரண்டி, கறிவேப்பிலை – 5 – 7 இலைகள், கடுகு – ஒரு தேக்கரண்டி, எலுமிச்சைச் சாறு – ஒரு தேக்கரண்டி, உப்பு – தேவையான அளவு.

செய்முறை :– கடாயில் எண்ணெய் விட்டு, கடுகு தாளித்து, வெங்காயத்தைப் போட்டு பொன்னிறமாக வதக்கவும். கறிவேப்பிலை சேர்த்து, தேங்காய் துருவல், மிளகாய்த்தூள் போட்டு 5 நிமிடம் வதக்கி, இறக்கும்போது எலுமிச்சைச் சாறு சேர்த்து ஒரு முறை கிளறவும். சாதத்துடன் பிசைந்து சாப்பிட நன்றாக இருக்கும்.

குறிப்பு: இதை ப்ரிட்ஜில் வைத்து 5 நாள்கள் வரை பயன்படுத்தலாம்.

# மருத்துவக் கதிர்

## அல்சர் குணமாவதற்கான வீட்டு வைத்தியம்

இப்பொழுது உள்ள வாழ்க்கை முறை காரணமாகவும் ஒழுங்கற்ற உணவுமுறை காரணமாகவும் சிறியவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் சந்திக்கின்ற பிரச்சினைகளில் ஒன்று தான் அல்சர். இந்த அல்சர் பிரச்சினையை நாம் மருந்துகளினால் மட்டுமே குணப்படுத்த முடியும் என்று நினைப்பது மிகவும் தவறாகும். இந்த பிரச்சினையை நாம் தினந்தோறும் சாப்பிடும் உணவுகள் மூலமாகவும் எளிதாக குணப்படுத்த முடியும், அந்த வகையில் இந்த பதிவில்



அல்சர் குணமாக நாம் என்னென்ன உணவுகளை சாப்பிடலாம்..? அல்சர் வர என்ன காரணம் என்பதைப் பற்றி பார்ப்போம்.

**அல்சர் வருவதற்கான காரணங்கள்**

இந்த அல்சர் நோய் வருவதற்கு முதல் காரணம் என்னவென்றால் காலதாமதமாக உணவருந்து தல், முறையற்ற உணவுமுறை, கடைகளில் விற்கப்படும் ரெடிமேட் உணவுகளை அதிகளவு உட்கொள்வது போன்ற காரணங்களால் இந்த அல்சர் பிரச்சினை ஏற்படுகிறது.

**அல்சர் குணமாக என்ன செய்ய வேண்டும்..?**

சாப்பிடும் உணவு முறைகளில் அதிகவனம் செலுத்த வேண்டும். காலை, மதியம், இரவு இந்த மூன்று வேளையும் சரியான நேரத்துக்கு உணவு அருந்த வேண்டும். பொதுவாக நமது மனம் ஆரோக்கியமாக இருந்தாலே நம் உடலும் ஆரோக்கியமாக இருக்கும். எனவே மனதை எப்பொழுதும் மகிழ்ச்சியாக வைத்துக் கொள்ளுங்கள். மனம் மகிழ்ச்சியாக இருந்தால் இந்த அல்சர் பிரச்சினை என்ன? நம் உடலில் எந்தப் பிரச்சினையும் ஏற்படாது.

அல்சர் நோயால் அவதிப்படுவோர் எண்ணிக்கை இன்றும் அதிகரித்து கொண்டுதான் இருக்கிறது. உடலில் அல்சர் வருவதற்கான அறிகுறிகள் என்னென்ன என்பதை பற்றி தெரிந்து கொள்ளுவோம்.

அடிவயிற்று வலி, குமட்டல், திடீர் எடை குறைவு, இரத்த வாந்தி, ஏப்பம், வயிற்று உப்புசம், கறுப்பு நிற மலம்.

அல்சர் குணமாக வீட்டு வைத்தியத்தில் வாரத்தில் மூன்று முறையாவது இந்த மணத்தக்காளி கீரையை சூப்பாகவோ அல்லது பொரியலாகவோ உட்கொண்டு வந்தால் குடல் புண், வயிற்றுபுண், அல்சர் மற்றும் வாய்புண் போன்றவற்றை சரி செய்யும்.

பச்சை வாழைப்பழத்தை தினமும் உட்கொண்டு வர, வயிறு குடல்களில் பழுதுபட்ட மெல்லிய ஜவ்வு தோல்களை வளர செய்யும், இதனால் அல்சர் நோயை சரி செய்ய உதவுகிறது.

தேங்காய்ப் பாலை உணவில் சேர்த்துக் கொள்ளலாம் அல்லது தேங்காய் பாலை மட்டும் அருந்தி வர வயிற்றுப்புண், குடல் புண், வாய் புண் மற்றும் அல்சர் போன்ற பிரச்சினைகளை சரி செய்ய மிக வும் உதவுகிறது.

பழுத்த பாகற்காயை தினமும் சமைத்து உண்டு வர, வயிற்றில் உள்ள கிருமிகளை சுத்தம் செய்வதுடன், குடலுக்கு வலிமை அளிக்கிறது. மேலும் பித்தத்தையும் தணிக்கிறது.

தினமும் காலையில் வெறும் வயிற்றில் சிறிதளவு வேப்பிலையை சாப்பிட்டு வர, அல்சரை சரி செய்வதுடன், வயிற்றில் ஏற்படும் அனைத்து பிரச்சினைகளையும் சரி செய்ய உதவுகிறது.

## உடல் சூட்டை எப்படி தணிக்கலாம்



கோடைக்காலத்தில் உடலில் உஷ்ணம் அதிகரிக்கும் பொழுது உஷ்ணம் சார்ந்த பல நோய்கள் உண்டாகின்றன. சிறுநீர் எரிச்சல், கண் எரிச்சல், மலவாயில் எரிச்சல் போன்ற எரிச்சல்படுத்தும் பல சங்கடங்கள் கோடைக் காலத்தில் அணிவகுக்க ஆரம்பித்துவிடும்.

என்னதான் அதிகளவு நீர் அருந்தினாலும், பழங்களை உட்கொண்டாலும் சிலருக்கு மலவாயிலில் தோன்றும் எரிச்சல் தொடர்ந்து கொண்டே இருக்கும். ஏனெனில் கோடைக்காலத்தில் உடலில் நீர்ச்சத்து குறைவதால் குடற்பகுதிகளில் வறட்சி ஏற்பட்டு, மலம் இறங்கும் தன்மை குறைந்து, மலவாயில் இறுக்கம் உண்டாகி, மலம் கழிக்கும் பொழுது வெடிப்புகள் ஏற்பட்டு, அந்த வெடிப்புகளில் வலியும், எரிச்சலும் தோன்றி, சில நேரங்களில் ரத்தக்கசிவும் உண்டாக ஆரம்பிக்கும்.

மூலநோயின் ஆரம்பமாகவும், ஆசனவாயின் வெடிப்பாகவும், சிறு, சிறு குருக்களாகவும், மலப்பகுதியில் தோன்றும் இந்நோயானது நாள்கள் செல்லச் செல்ல ரத்த மூலமாகவும், வெடிப்பு மூலமாகவும் மாறி, மூலம் முற்றி விட வாய்ப்புண்டு.

கோடைக் காலத்தில் உடல் உஷ்ணத்தை அதிகரிக்கக்கூடிய காரஉணவுகளையும், கொழுப்புச்சத்து நிறைந்த அசைவ உணவுகளையும் தவிர்க்க வேண்டும். மேலும் நீர்ச்சத்து மற்றும் நார்ச்சத்து நிறைந்த பழங்களையும், காய்கறிகளையும் உட்கொள்வதுடன், ஒரே இடத்தில் நீண்ட நேரம் அமர்வதை தவிர்த்து, போதுமான அளவு நீரை அருந்தி வந்தால் மூலநோயின் தாக்கத்திலிருந்து நம்மை காத்துக்கொள்ளலாம்.

எண்ணெயில் வறுத்த உணவுப் பண்டங்களையும், கிழங்குகளையும் உட்கொள்வதுடன், இரவில் செரிக்க கடினமான பொருள்களை உட்கொண்டு, அதனால் தோன்றிய மலச்சிக்கல், பல நாள்கள் நீடிக்கும் பொழுது, மூலமாக மாறி விட வாய்ப்புண்டு.

மேலும் மலம் மற்றும் அபானவாயுவை அடக்குவதற்காக ஆசனவாயை நாம் இறுக்கமாக வைத்துக்கொள்வதாலும் மலவாய் சுருங்கி, மூலநோய் ஏற்படுகிறது.

மூலநோயால் ஏற்படும் மலவாய்ப்புண்கள் மற்றும் வெடிப்பு நீங்க அவ்விடங்களில் நெய்ப்பு தன்மையுடைய களிம்புகளை தடவுவதுடன், மூல நோயின் தீவிர நிலையில் வழுவழுப்பான திரவத்தை கொண்டு பீச்சு என்னும் எனிமா செய்யவேண்டும்.

மலச்சிக்கல் இல்லாமல் கவனமாக பார்த்துக் கொள்வதுடன், இரவில் விரைவில் தூங்கி, அதிகாலையில் எழுந்து சர்வாங்காசனம், விபரீதகரணி போன்ற ஆசனங்களை செய்து வந்தால் மூலநோயிலிருந்து தப்பிக்கலாம். மூல நோய் நம்மை அணுகாமலிருக்கவும், அதனால் தோன்றும் மலவாய் புண்களை ஆற்றவும் பயன்படும் அற்புத மூலிகை முசுட்டை.

'ரைவியா ஆர்னேட்டா' என்ற தாவரவியல் பெயர் கொண்ட கன்வாலவுலேசியே என்ற குடும்பத்தைச் சார்ந்த முசுட்டை கொடியின் இலையில் எர்ஜின், ஐசோஎர்ஜின் போன்ற பொருள்கள் காணப்படுகின்றன.

இவை மலக்குடலை சுருங்கி விரியச் செய்து மலத்தை எளிதாக கழியச் செய்வதுடன் மலவாயிலுள்ள புண்களை ஆற்றி ரத்தக்கசிவை தடுக்கின்றன.

முசுட்டை கொடியின் இலைகளை நிழலில் உலர்த்திப் பொடித்து ஒரு கிராமளவு சாப்பிட மூலநோயினை தொடர்ந்த மலச்சிக்கல் நீங்கும்.

மேலும் 10 கிராம் உலர்ந்த முசுட்டை கொடியை 500 மில்லி நீரில் போட்டு கொதிக்க வைத்து, 125 மில்லியாக சுண்டிய பின் வடிகட்டி அதிகாலை வெறும் வயிற்றில் குடிக்க மூலச்சூடு தணியும், மலம் இளகும்.

முசுட்டை இலையை இடித்து சாறெடுத்து, சமஅளவு நல்லெண்ணெயுடன் கலந்து, காய்ச்சி, மலவாயிலில் ஏற்படும் புண்கள், வெடிப்பு ஆகியவற்றின் மேல் தடவி வர புண்கள் ஆறும்.

## மழைக்கால நோய்கள்



மழைக்கால நோய்கள் குறித்தும் அதன் தன்மை குறித்தும் அறிந்து கொண்டால் நோய்கள் வரும் முன் தடுக்கலாம், நாம் மழைக்காலத்தில் வரும் நோய்கள் பற்றியும் அதை வராமல் எப்படி தடுக்கலாம் என்பது பற்றியும் பார்ப்போம்.

மழைக்காலம் ஆரம்பித்துவிட்டாலே, சாதாரண சளி, காய்ச்சல் முதல் டெங்கு , தொற்றுநோய்கள் வரை படையெடுக்க ஆரம்பித்துவிடும். நோய்க் கிருமிகள் பரவ, மிகவும் சாதகமாக இருக்கும் குளிர்ச்சியான மற்றும் ஈரப்பதமான சூழ்நிலையும் தான் இதற்குக் காரணம்.

ஆங்காங்கே நீர் தேங்குவதால், நுளம்பு மற்றும் ஈக்கள் மூலம் பரவும் பாதிப்புகளும் அதிகரித்துவிடுகின்றன. மழைக்காலப் பாதிப்பில் இருந்து தப்புவது கடினம்.

ஆஸ்துமா, நாள்பட்ட மூச்சுக்குழாய் அடைப்பு நோய் போன்றவற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மூச்சுவிட மிகவும் சிரமமாக இருக்கும். நெற்றி மற்றும் கன்னங்களில் இருக்கும் சைனஸ் அறைகள், தொற்று காரணமாக பாதிக்கப்படும் வாய்ப்பு அதிகம். இதனால், சைனஸ் தலைவலி வரலாம்.

மழைக்காலம் என்றாலே பெரிதும் பரவும் நோய் மலேரியா. இந்த வகை நுளம்புகள் தண்ணீர் தேங்கும் இடத்தில் இனப்பெருக்கமாகின்றன. மலேரியாவுக்கு அடுத்தபடியாக, டெங்குவைப் பரப்பும் 'ஏடிஸ் எஜிப்டி'. இந்தக் கொசு, அசுத்தமான நீர் நிலைகளில் வாழாது. இதனால் வீட்டை சுற்றி தேங்கும் நீர்களை முற்றிலுமாக அகற்ற வேண்டும்.

சிக்குன்குனியா காய்ச்சல் வருவதற்கும் ஏடிஸ் ஏஜிப்டி வகை கொசுதான் காரணமாக இருக்கிறது. சிக்குன்குனியா வந்தால், காய்ச்சல் மற்றும் உடலில் உள்ள மூட்டு இணைப்புகளில் கடுமையான வலி போன்றவை ஏற்படும்.

எலியின் சிறுநீர் வழியாக எலிக்காய்ச்சல் பரவுகிறது. இந்தக் கிருமித்தொற்று உள்ள சிறுநீர், மழை நீரில் கலக்கும்போது, அது மனிதர்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்திவிடும்.

**செய்ய வேண்டியவை**

மழைக்காலத்தில் டான்சில் மற்றும் சைனஸ்



நோய்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு அதிக பாதிப்புகள் ஏற்படும். இவர்கள் தினமும் உப்பு கலந்த நீரால் தொண்டை வரை கொப்பளிக்க வேண்டும்.

வீட்டை விட்டு வெளியே சென்று வீடு திரும்பியதும், வெதுவெதுப்பான நீரில் கால்களை நன்கு கழுவ வேண்டும். வீட்டைச் சுற்றி நடப்பதாக இருந்தாலும், காலணி அணியாமல் செல்லக் கூடாது.

தெருவில் விற்கும் உணவுகள், நீண்ட நாள்கள் ஆன திண்பண்டங்கள் முதலியவற்றை தவிர்ப்பது நல்லது.

இந்தப் பிரச்சினைகள் வராமல் இருக்க, வெளி இடங்களில் சுகாதாரமற்ற தண்ணீர் மற்றும் குளிர்பானங்கள் அருந்துவதையும் ஐஸ்கிறீம் சாப் பிடுவதையும் தவிர்க்க வேண்டும்.

அடிக்கடி ஆவி பிடிப்பது, மூச்சுப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் சளி, இருமல் பிரச்சினைகளில் இருந்து தப்பிக்கலாம்.

தண்ணீரை கொதிக்க வைத்து பருகி, சுத்தமான, ஆரோக்கியமான உணவை எடுத்துக் கொண்டு, சுகாதாரமான சுற்றுச்சூழலில் வாழ்ந்தால் பெரும்பாலான நோய்களை தடுத்துவிடலாம்.

நிலவேம்பு, பப்பாளி இலைச்சாறு, ஆடாதொடை போன்ற சித்தமருத்துவ மருந்துகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.



# பாட்டியம்மா

பாட்டியம்மா கடையிலே
பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயில
பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயில
நரி அண்ணா வந்தாராம்
பாட்டுப்பாட சொன்னாராம்
நரி அண்ணா வந்தாராம்
பாட்டுப்பாட சொன்னாராம்
வடை கீழ விழுந்ததாம்
நரி தூக்கி சென்றதாம்
பாட்டியம்மா கடையிலே
பருப்பு வட சுடையில
காகம் வந்தது இடையில
கௌவிச் சென்றது வாயில



# தோட்டம்

தோட்டத்து மண்ணிலே
வட்டமான மெத்தையிலே
சொகுசா தூங்குரா
சின்ன அவரை பாப்பா
சொட்டு சொட்டாய் மழை பெய்யுது
தட்டி தட்டி எழுப்புது
விழிச்சி விழிச்சி பாக்குரா
நெலிஞ்சு நெலிஞ்சு வலையூரா
வானம் பார்த்து சிரிக்கிரா
சின்ன அவரை பாப்பா




# தந்தையை திருத்திய மகன்

ஒரு தந்தை தனது மகனிடமிருந்து ஒரு பாடம் கற்றுக்கொள்கிறார் என்பது எல்லா மக்களுக்கும் மிகவும் சுவாரஸ்யமானது. இந்தக் கதையைப் படித்து மகிழுங்கள்.

கண்ணன் ஒரு தச்சன். அவர் ஒரு கிராமத்தில் வசித்து வந்தார். அவரது தாயார் நீண்ட காலத்திற்கு முன்பே இறந்துவிடுகிறார். இவரது வயதான தந்தை குப்பன் கண்ணாவுடன் வசித்து வந்தார். குப்பன் மிகவும் பலவீனமாக இருந்தார். அவனால் நன்றாக நடக்கக்கூட முடியவில்லை. அவர் மிகவும் பலவீனமாக இருந்தார். கண்ணன் அவருக்கு போதுமான உணவு கொடுக்கவில்லை என்பதே அதற்குக் காரணம். அவர் தனது தந்தைக்கு ஒரு சிறிய மண் தட்டு கொடுத்திருந்தார். தட்டில் ஒரு சிறிய அளவு அரிசி கூட அதிகமாக இருந்தது. கண்ணன் ஒரு கெட்டவன். அவரும் குடிகாரன். பானங்களை எடுத்துக் கொண்ட பிறகு, அவர் தனது தந்தையை மோசமாக துஷ்பிரயோகம் செய்தார். கண்ண னுக்கு ஒரு மகன் இருந்தான். அவன் பெயர் வினோத். வினோத்துக்கு வெறும் பத்து வயது. அவர் ஒரு நல்ல பையன். அவர் தனது தாத்தாவை நேசித் தார். அவர் தனது தாத்தா மீது மிகுந்த மரியாதை வைத்திருந்தார். அவர் தனது தந்தையின் அணுகுமுறையையும் தன்மையையும் விரும்பவில்லை, ஏனெனில் அவரது தந்தை தனது தாத்தாவைக் கொடூரமாக நடத்தினார்.

ஒரு நாள் குப்பன் தனது மகன் கொடுத்த மண் தட்டில் இருந்து தனது உணவை சாப்பிட்டுக் கொண்டிருந்தான். மண் தட்டு கீழே விழுந்தது. தட்டு துண்டுகளாக உடைந்தது. உணவும் தரையில் விழுந்தது. கண்ணன் அறையின் மறு முனையில் வேலை செய்து கொண்டிருந்தான். உடைந்த தட்டைப் பார்த்தார். அவர் தனது தந்தையின் மீது மிகுந்த கோபத்தில் இருந்தார், மேலும் தனது தந்தையை துஷ்பிரயோகம் செய்ய மிகவும் கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தினார். வயதானவர் என்ன நடந்தது என்று மோசமாக உணர்ந்தார். அவர் செய்த தவறுக்கு வருந்தினார். கண்ணனின் வார்த்தைகள் அவரை மிகவும் ஆழமாக காயப்படுத்தின.

கண்ணனின் மகன் வினோத் இதைப் பார்த்தான். அவர் தனது தந்தையை விரும்பவில்லை. அவரது தந்தை தனது தாத்தாவிடம் மோசமாக நடந்து கொண்டார். அவர் தனது தந்தைக்கு எதிராக பேச பயந்தார். அவர் தனது தாத்தாவைப் பற்றி வருத்தப்பட்டார். ஆனால் அவர் தனது தாத்தாவுக்கு ஆதரவாக நிற்க சக்திவாய்ந்தவராக இருக்கவில்லை. அடுத்த நாள் வினோத் தனது தந்தையின் சில தச்சு கருவிகளையும் ஒரு மரக்கட்டையையும் எடுத்துக் கொண்டார். அவர் ஒரு மரத்தகடு செய்ய கருவிகளுடன் பணியாற்றினார். அவன் வேலை செய்வதை அவன் தந்தை பார்த்தார்.



வினோத் என்ன செய்கிறாய்? என்று கேட்டார்.

நான் ஒரு மரத் தகடு செய்கிறேன்! என்று வினோத் பதிலளித்தார்.

ஒரு மரத் தட்டு! எதற்காக? என்று அவரது தந்தை கேட்டார்.

நான் அதை உங்களுக்காக உருவாக்குகிறேன், அப்பா.

நீங்கள் வயதாகும்போது, என் தாத்தாவைப் போல, உங்களுக்கு உணவுக்கு ஒரு தட்டு தேவைப்படும். பூமி பாயிலிருந்து தயாரிக்கப்பட்ட ஒரு தட்டு மிக எளிதாக உடைகிறது. நான் உன்னை கடுமையாக திட்டலாம். எனவே, நான் உங்களுக்கு ஒரு மரத் தகடு கொடுக்க விரும்புகிறேன். அது அவ்வளவு எளிதில் உடைந்து போகாமல் போகலாம். இதைக் கேட்டு தச்சன் அதிர்ச்சியடைந்தான். இப்போதுதான் அவர் தனது தவறை உணர்ந்தார். அவரது தந்தை கண்ணனிடம் கருணை காட்டினார் அவர் கண்ணனை நன்றாக கவனித்து வந்தார். இப்போது, அவர் வயதாகிவிட்டார். கண்ணன் தனது தந்தைக்கு கடுமையாக சிகிச்சை அளித்து வந்தான்.

கண்ணன் இப்போது தனது சொந்த நடத்தை குறித்து மிகவும் சோகமாக இருந்தார். அவர் தனது தவறுகளை உணர்ந்தார். பின்னர் அவர் வேறு நபராக ஆனார். அன்றிலிருந்து கண்ணன் தனது தந்தையிடம் மிகுந்த மரியாதையுடன் நடந்து கொண்டார். குடிப்பழக்கத்தையும் கைவிட்டார். கண்ணன் தனது சொந்த மகனிடமிருந்து ஒரு பாடம் கற்றுக்கொண்டார். நீங்கள் எல்லா நேரங்களிலும் உங்கள் பெற்றோரை மதிக்க வேண்டும். அது உங்கள் கடமை. அது அவர்களின் ஆசீர்வாதங்களை உங்களுக்குக் கொண்டுவருகிறது.

# சிறந்த வர்ணத்துக்கு பரிசு தரும் எண்ணம்




கீழ்வரும் ஓவியத்துக்கு பொருத்தமாக வர்ணம் தீட்டி அனுப்புங்கள் சிறந்த வர்ணம் தீட்டலுக்கு பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.

**முகவரி - காலைக்கதிர், சிறுவர் பகுதி, இல - 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்**

(ஒவ்வொரு வாரமும் உங்கள் படைப்புகளை அனுப்பி பெறுமதியான பரிசுகளை வெல்லுங்கள்.)

சிறுவர் ஆக்கங்களையும் மேலுள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள். சிறந்த ஆக்கங்களுக்கு பரிசுகளை நீங்கள் வெல்லலாம்.






# உக்கிரம் அடையும் உரப்பிரச்சினை

'என்ன வளம் இல்லை இந்த திருநாட்டில் ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்ற கவிஞர் மருதகாசியின் பாடல் வரிகளில் உயிர்ப்புக்கள் இன்று எம்மை அவ்வழியில் நடத்துவது போலாயிற்று. எத்தனையோ அளப்பரிய வளங்கள் இருந்தும் அவற்றின் பயன்பாட்டை நம்மவர் சமுதாயம் இன்றும் ஏனைய நாடுகளிடம் கையேந்தி நிற்பது கவலைக்குரிய விடயமாகும்.

நமது நாட்டுக்கு இரசாயன உரத்தைக் கொண்டுவந்து 60 வருடங்களுக்கும் மேலாகின்றது. 1960 களிலேயே இரசாயன உரப் பயன்பாடு அறிமுகமானது. அதற்கு முன்பு இரசாயன உரம் என்றால் என்னவென்று தெரியாத நிலைமையே காணப்பட்டது. நமது நாட்டில் சேதனப்பசளையைக் கூட வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யும் அளவிற்கு மாறிவிட்டது மிகப்பெரிய துரதிஷ்டம் என்று தான் கூறவேண்டும்.

காலங்காலமாக நம் மண்ணையே நம்பியிருந்த விவசாயிகளின் நிலை தான் என்ன? என்றதொரு கேள்வி நம் அனைவரிடமும் எழுந்துள்ளது. நம் நாட்டிற்கு உணவளிக்கும் அம்மகான்களின் நிலை தான் என்ன? வீதிதோறும் ஆர்ப்பாட்டங்களும், நிலையில்லாக் கண்ணீர்த் துளிகளும் ஏன் எதற்காகவென்று சிந்தித்தால் உரப் பிரச்சினையின் உக்கிரம் என்பதே அதன் அடித்தளமாக உள்ளது.





சுற்றுச்சூழலும் அதனோடு இணைந்த நம் வாழ்க்கையும், அசேதனப் பசளைக்குப் பழக்கப்பட்டது உண்மைதான். விஷமென தெரிந்தும் இரசாயன உரத்தைப் பயன்படுத்தி உற்பத்தியாகும் உணவுகளுக்கும் அடிமையானது பழக்கமாகிவிட்டது.

நாடு முழுவதும் விவசாயிகள், தோட்டத்தொழில் புரிபவர்கள் எதிர்கொள்ளும் மிகப்பெரிய பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர். குறிப்பாக இரசாயன உரம் இறக்குமதியை அரசாங்கம் தடை செய்துள்ள நிலையில் இயற்கை உரம் மூலமாக பயிர்ச்செய்கை செய்வதற்கான எவ்வித ஆயத்தமும் இல்லாது திடீரென இரசாயன உரத்தை நிறுத்தியதன் காரணமாக விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

விதையை விதைத்து குறுகிய காலத்திலேயே கிருமிநாசினிகள் தெளிக்க வேண்டும். இல்லையேல் அந்த பயிர்கள் நாசமாகிவிடும், இதற்காகவே அரசாங்கம் இரசாயன உரத்தை வழங்க வேண்டும் என்ற கோஷம் எழுந்துள்ளது. இதன் விளைவாகவே விவசாயத்துறை அமைச்சரின் கொடும்பாவி எரிக்கப்பட்டது நாம் காணமுடிந்தது.

இலங்கையில் 16 லட்சம் ஹெக்டேயர் விவசாய நிலங்கள் காணப்படுவதுடன் தற்போது பயன்படுத்தப்படும் இரசாயன உரத்தில் 95 சதவீதம் இறக்குமதி செய்யப்படுவதுடன், கடந்த ஆண்டு 25கோடி டொலர் செலவிடப்பட்டுள்ளது. இவ்வாறிருக்க இரசாயன உரத்தை நம்பிய விவசாயிகளின் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறுமா? என்ற ஐயப்பாடு நம்மிடம் எழவே செய்கின்றது.

மலையக விவசாயிகளும் உரத்தட்டுப்பாட்டில் பெரிதும் பாதிக்கப்பட்டு வருகின்றனர். மலையகப் பகுதிகளில் உயர்மட்ட விளைச்சலை பெறும் நோக்கில் பயிரிடப்பட்ட போதும் உரத்தட்டுப்பாட்டால் கதிகலங்கி போயுள்ள அவ்விவசாயிகள் தேயிலை இறப்பருக்கும் மாத்திரமன்றி காய்கறி விளைச்சல் நிலங்களை முன்னெடுக்கும் தோட்டத் தொழிலாளர்களுக்கும் தோட்ட நிலங்கள் நிறுவனங்களுக்கும் இடையில் மோதல்கள் ஏற்பட்டுள்ளன.

இலங்கையில் சிறுநீரக நோயாளர்கள் அதிகரிக்கக் காரணம் இரசாயன உரத்தின் பயன்பாட்டிலான உணவுகளை உட்கொள்வதே ஆகும். இதனாலேயே சேதனப் பசளையை பயன்படுத்தி விவசாய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் ஜனாதிபதி அறிவித்தார்

எது எவ்வாறாயினும் இவ்வளவு காலமும் விவசாயிகளின் விளை நிலங்களுக்கு தாக்குப் பிடித்தது அசேதனப்பசளையே. இருப்பினும் துரதிஷ்டவசமாக இரசாயன பசளையின் தடை விதிப்பின் பின் சேதனப்பசளையின் தாக்குதிறன் நிலத்திற்கும் பயிர்களுக்கும் எவ்வளவு தூரம் ஈடுகொடுக்கும் என்பது தொடர்பில் திட்டவட்டமாகக் கூறமுடியாதுள்ளது. மறுபுறம் ஆரோக்கியத்திற்கு உகந்தது என்ற ஒரு காரணத்தைச் சுட்டிக்காட்டி சேதனப்பசளைக்கு பழகுவதிலும் எவ்வித தயக்கமும் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை என்றே கூற வேண்டும்.

இலங்கையானது மறுபுறத்தில் கழிவு தொட்டியாக மாறி வரும் நிலைமையும் மறைமுகமாக நடந்தேறி வருகின்றது. சீனாவின் நகரக் கழிவுகள் சேதனப்பசளைகளாக இலங்கைக்கு அறிமுகம் செய்யப்பட்டு இறக்குமதி செய்வதற்கான நடவடிக்கையும் எடுக்கப்பட்டு வருகின்றது. தேர்ந்தெடுக்கப்பட்ட சில மாதிரிகளில் அர்வீனியா எனப்படும் நுண்ணுயிர் இருப்பது உறுதியாகியுள்ளது.

இந்நிலையில் இரசாயன உர இறக்குமதிக்காக வருடந்தோறும் பெருந்தொகைப் பணத்தைச் செலவு செய்ய அரசுக்கு நேர்ந்துள்ளது. இதேபோன்று நீண்ட கால அடிப்படையில் உணவுப் பயிர்ச்செய்கைக்கு இரசாயன உரத்தை மட்டும் இட்டு வந்தால் மண்வளம் குறைவதுடன் பயிர்ப்பெருக்கம் குறைவதற்கும் நிலக்கீழ் நீர் மாசடைவதற்கு காரணமாய் அமைந்துள்ளது.

இவ்வாறான இரசாயன உரப் பிரச்சினைகள் இருந்தாலும் முதற்தடவையாக லிதுவேனியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சேதனப்பசளையை பயன்படுத்தி பெரும்போகத்துக்கான பயிர்ச்செய்கை 8 லட்சம் ஹெக்டேயரில் ஆரம்பித்து வைக்கப்பட்ட நிலையில் பல காலமாக அசேதனப்பசளைக்கு பழக்கப்பட்ட எம்மவர் விவசாய நிலங்களில் சேதனப் பசளை பயன்பாட்டிற்கு உரிய முறையில் பின்பற்றாவிட்டால் பாரிய பிரச்சினைகள் ஏற்படலாம் என இலங்கை மணல் ஆய்வு சங்கம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

எனவே மக்கள் அசேதனப் பசளை பாவனை காரணமாக எதிர்நோக்கி வருகின்ற பிரச்சினைகளையும் அதனால் ஏற்படக்கூடிய தாக்கங்களை குறைப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கை சேதனப் பசளை பாவனை எனில் விவசாயிகளுக்கு முறையான திட்டமிடல் ஊடாக விழிப்புணர்வு திட்டங்களை ஏற்படுத்தி அசேதனப் பசளையில் ஏற்படும் பாதிப்புகளை தெரியப்படுத்தல் முக்கியமானது.



எது எவ்வாறாயினும் நம் நாட்டு விவசாயம் முடங்கிப் போகும் நிலைமைக்கு உரம் ஒரு பிரச்சினையா? என்பதை உணர்ந்து செயற்படுவோமாக!

**செ. ரமேஸ் மதுசங்க**
**ஊடக கற்கைகள் துறை**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**




# கன்று வளர்ப்பு



விலங்கு வேளாண்மையில் மிகவும் பயன்தரும் விலங்கு பசு ஆகும். அவற்றைப் பாதுகாப்பதும் முறையாக பராமரிப்பதும் பண்ணையாளர்களின் கடமையாகின்றது. 'இன்றைய பசுக்கன்றுகள் நாளைய பசுக்கள்' என்ற கூற்றுக்கு இணங்க பிறந்த கன்றை முறையாக பராமரிக்க வேண்டும். மாடு வளர்ப்பின் போது பிறந்த வேளை தொடக்கம் ஒரு வருட வயதை அடையும் வரையிலான விலங்குகள் பசுக் கன்றுகள் எனப்படும்.

### கன்றுகளை முறையாக பராமரிப்பதன் முக்கியத்துவம்

பிறந்து முதல் இரண்டு வாரங்களில் நிகழத்தக்க இறப்புக்களை குறைக்க முடிதல், ஆரோக்கியமான, வயதுக்கேற்ற நிறையுள்ள, பாலியல் முதிர்ச்சியடைந்த பசுக்கன்றுகளை பெறல், வீரியமுள்ள சார்பளவில் நீண்ட ஆயுள்காலம் கொண்ட பசுக்கள் கிடைத்தல், உரிய காலத்தில் சினைப்படுத்த தக்க (2 - 2.5 வருட வயதில் முதலாவது கன்று கிடைத்தல்), கன்று ஈனுவதில் இடர்பாடுகளற்ற பசுக்கள் கிடைத்தல், அதிக பாலுற்பத்தி கிடைத்தல்,

முறையற்ற பராமரிப்பினால் தொப்பிள் கொடி நோய், சுவாச நோய் மூட்டுவாதம் வயிற்றோட்டம், குறைவான வளர்ச்சி, பாலியல் முதிர்ச்சி தாமதமடைதல் போன்ற பிரச்சினைகள் ஏற்படும்.

### பிறந்த உடனான கன்று பராமரிப்பு

பிறந்த கன்றை உடனடியாக சுத்தம் செய்ய வேண்டும். இதற்கு காய்ந்த வைக்கோலையோ அல்லது சுத்தமான பழைய துணியையோ பயன்படுத்தலாம். சவர்க்காரம் பயன்படுத்தக் கூடாது. கன்றை சுத்தம் செய்ய தாய்ப்பசுவை அனுமதிப்பதே சிறந்தது. மூக்கு துவாரத்தை சுத்தம் செய்து கன்றின் சுவாசத்தை சீராக்க வேண்டும். (மூக்கினுள் யாதேனும் ஒரு பொருளை உட்செலுத்தி தும்ம செய்தல்) பிறந்த கன்று சுவாசிக்கவில்லை எனில் மூக்கு துவாரத்தை சுத்தம் செய்து கன்றின் பின்னங்காலை பிடித்து தலைகீழாக தூக்கி நெஞ்சுப்பகுதியில் தட்டிவிடுதல் வேண்டும். தொப்பிள் கொடியை அகற்றி அவ்விடத்தில் 7% டின்சர்அயடின் **(90ml** அயடின் **10ml** எதனோல்**)** கிருமி கொல்லியை தடவுதல். பிறப்பு நிறையை அளந்து பதிவு செய்து கொள்ளல். பிறந்து 12 மணித்தியாலங்களுக்குள் கன்றை பால் குடிக்க விட வேண்டும். அல்லது தாய்ப்பசுவிடமிருந்து கறந்து எடுத்த கடும்பு பால் 2l இணை சில தடவைகளில் ஊட்டுதல். முதல் மூன்று தொடக்கம் நான்கு நாள்களுக்கு தொடர்ச்சியாக கடும்பு பால் குடிப்பதற்கு அனுமதியளிக்க வேண்டும். (1 - 3 மணித்தியால இடைவெளியில்)

### கடும்புப்பாலின் முக்கியத்துவம்

பசுக்கன்றுக்கு போசாக்கு, நோய்களுக்கு எதிரான நிர்ப்பீடனத்திற்கு துணையாக இருத்தல். முதல் தடவையாக மலம் வெளியேற்றலை இலகுவாக்கல் போன்றவற்றிற்கு கடும்புப்பால் அவசியமானது.

தாய்ப்பசு மரணித்தல் அல்லது வேறு காரணத்தினால் கன்றுக்கு கடும்புப்பால் பருகும் வாய்ப்பு கிடைக்காத சந்தர்ப்பத்தில் செயற்கை கடும்புப்பால் தயாரித்து ஊட்டல் வேண்டும்.

### கன்று பராமரிப்பின் போது கையாளப்பட வேண்டிய பராமரிப்பு கருமங்கள்

* காதுக்கு குண்டலமிடல்
* கொம்பு நீக்கல்
* புழு நீக்கம்
* நலமடித்தல்
* மூக்கு வளையமிடல் (நாம்பன் கன்றுகளுக்கு)

### பராமரிப்பு முறை

கன்று பிறந்து நான்காம் நாள் கன்றுத்தீவனம் கொடுக்கலாம். நாள் முழுவதும் கட்டுப்பாடு இன்றி சுத்தமான நீர் வழங்குதல். கன்று ஒன்றிற்கு அதன் பிறப்பு நிறையின் 10 % உணவு வழங்க வேண்டும். 10ஆம் நாள் பால், கன்றுத்தீன், வைக்கோல் கொடுக்கலாம். பிறப்பு நிறையின் 10% பால் வழங்க வேண்டும். (காலை 5% மாலை 5%) பச்சைப்புல் பசுந்தவனம் கொடுத்தல் கூடாது. அவ்வாறு பசும்புல் கொடுப்பதால் இரைப்பையின் வளர்ச்சி பாதிப்படையும், உணவு அகத்துறிஞ்சல் பாதிப்படையும், வயிறு ஊதல் ஏற்படும் (பானை போன்ற வயிறு காணப்படும்).

ஒருமாத வயதில் பூச்சி மருந்து கொடுத்தல் அவசியமானது. 3, 6, 9, 12 மற்றும் 18 மாதங்களில் அடுத்தடுத்த பூச்சி மருந்து கொடுத்தல் வேண்டும்.

### பால் மறக்கடிக்கும் பருவம்

10 தொடக்கம் 12 வார வயது கன்றின் உடல்நிறையானது பிறப்பு நிறையின் இருமடங்காக அதிகரிக்கும் வேளையில் பால் மறக்கடிக்க செய்தல் வேண்டும்.

நாளொன்றுக்கு 7**Kg** இற்கும் அதிகமான புத்தம் புதிய ஐதுத்தீன் மற்றும் செறிவுத்தீன் வழங்குதல் வேண்டும்.

### கன்றிற்கான மனைவசதியளித்தல்

கன்றின் ஆரம்பப் பருவத்தில் தனித்தனியான அடைப்புக் கூடு வழங்குதல். பின்னர் பொது அடைப்பினில் பராமரித்தல் சிறந்தது.

தொழுவம் சுத்தமானதாகவும், உலர்வானதாகவும், சிறந்த காற்றோட்டம் உள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

வெப்பநிலை **26 – 28 °C**

கூழம் உலர்வாக இருத்தல் வேண்டும்.

### இடவசதி அளவுகள்

பால் குடிக்கும் கன்று **- 75cm X 150cm**

2 ஆம் மாதத்தில் பொது அடைப்பு ஒரு கன்றிற்கு 1.5
(ஓர் அடைப்பினுள் 6 - 8) கன்றுகள்

3 ஆம் மாதத்தில் ஒரு கன்றிற்கு 2.88
(ஓர் அடைப்பினுள் 6 - 8) கன்றுகள்

### முதிர் கன்றுக்கு உணவூட்டல்

* பச்சைப்புல் காய்ந்த புல் வைக்கோல் வளர்தீவனம் தவிடு புண்ணாக்கு வழங்கலாம்.
* **750g – 1Kg** வரை வளர் தீவனம் கொடுக்கலாம்.
* இவற்றுடன் கனியுப்புக் கலவையும் கொடுக்க வேண்டும்.
* 24 மணி நேரமும் தண்ணீர் கொடுக்க வேண்டும்
* குடற்புழுவிற்கான மருந்து உண்ணி, தெள்ளு, ஈ என்பவற்றைக் கட்டுப்படுத்தும் மருந்துகளை கால்நடை வைத்தியரின் ஆலோசனையுடன் வழங்கலாம்.

### வேட்கைக்கு வருதல்

* சிறந்த பராமரிப்பில் வளர்க்கப்படும் கன்றானது 15 - 18 மாதங்களில் முதலாவது வேட்கை அறிகுறியை காட்டும்.
* வேட்கை அறிகுறிகள் தென்பட்டால் செயற்கை முறை சினைப்படுத்தல் உத்தியோகத்தருடன் தொடர்பு கொண்டு பசுவை சினைப்படுத்தல் வேண்டும்.
* வேட்கை ஆரம்பித்து 12 - 18 மணித்தியாலங்களுக்கு இடைப்பட்ட காலப்பகுதியே பசுவை சினைப்படுத்த பொருத்தமான காலமாகும்.
* முறையற்ற பராமரிப்பு நோய், தொற்று, புழுத் தொற்று, போதிய சத்துள்ள உணவின்மை, காலநிலைக்கு ஒவ்வாத இனம் போன்ற பல்வேறு காரணங்களால் வேட்கை அறிகுறியை காட்டாமல் இருக்கலாம்.

ஆகவே கன்றினை முறையாகப் பராமரித்து அதன் மூலமாக உச்சப் பயனைப் பெற்று சிறந்த பண்ணையாளராகுவோம்.



**ஆக்கம்:- சுசீலநாதன் சோபனா**
NVQ6 **மாணவி,**
**யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,**
**மருதனார்மடம்.**

# RADIANT DAWN

A Sunday Supplement in English to Kalaikkathir

We welcome students' articles in word for publication
-Editor-
kalaikkathiredu@gmail.com



# The Grand Opening Ceremony of the Modern Playground for Jaffna Hindu College

The Modern Playground was declared open on Fiday the 12th at 9.30. Senthilmaran, the Principal of the College, Jeyapragash the former president of the London O.B.A, the Mayor of Jaffna V. Minivanan and other dignitaries participated in the grand ceremony.

Playgrounds and swimming pools have now become very vital features of a school's infrastructure. They play an indispensable role in the physical, mental and attitudinal development of the students as well as in the enhancement of their skills in sports and games. They also contribute immensely towards acquiring true knowledge and help them to reform themselves to meet the challenges of the new era. Students achieve an emotional balance through a healthy socialisation and get instilled with leadership qualities.


As far back as February 1938, the Hindu Organ had aptly pointed out that games and sports are cocurricular activities and they can minimise absentism among children. From the 1938 records of the Board of Dierectors of Jaffna Hindu College it is evident that the creation and expansion of the playground has had a long tradition and history over 95 years behind it. However the Hinduites and its well wishers have always lamented the lack of space for the playground.

This shortcoming has , however, been now overcome by acquiring the adjoining lands and the playground is established in a vast plot . The Colombo branch of the Jaffna Hindu O. B..A Trust has played a vital role in the acquisition of the land. The London Branch of the O.B.A has made the initiative and and given its unstinted support spending RS 55 million for this worthy cause. Above all they have obtained the



required technological expertise from professionals and architects . An old boy of Hidu Ostine has designed the Office and he has also lent a traditional aesthetic touch to the pillars he has erected and won the admiration of everyone.

The exquisitely established ground covered with green turf lends a majestic look to it . Establishing Jaffna Hindu has a long tradition and history of collective effort of the general public,contributions from groups and continuous nourishment from the well wishers. In this regard the London O.B.A deserves commendation for its whole hearted involvement in making this phenomenon a reality.



## *ASPIRATIONS OF THE TAMILPEOPLESHOULD BE FUFILLED*

At a meeting with High Commissioner of India Gopal Baglay that lasted two hours from 5.p.m on Thursday the 11th held at the residence of High Commissioner in Colombo, the TNA leader R. Sambanthan and seven Tamil parliamentarians and the leader of the Thamil Arasu Kadchi Mavai Senathirajah insisted on fulfilling the aspirations of the Tamil people.

The discussion centred around the current political situation in the North and the East and the district wise development projects, the rapid development activities , the long term welfare development projects as well as the Indian aided Housing Projects. The interaction between the people of India and Sri Lanka, ferry service to Rameswaram, development of the Palay airport and Kankesanthurai, the proposed drafting of a new constitution for Sri Lanka were matters of importance came up for discussion at the meeting .

It is said that the High Commissioner of India has hinted to R. Sambanthan ,that Sri Lanka has always had a pro Chinese stand and it is evident the Government of Sri Lanka and its Parliament have realised now how important India is.

## Srilanka Budget, 2022



The Sri Lankan government will reduce the budget deficit to around 8.8% of gross domestic product in 2022, finance minister Basil Rajapaksa said in his budget speech on Friday, though it missed its deficit target for 2021. The government will also roll out a goods and services tax announced in the 2021 budget from January 2022, the minister said.

"We are living through history's most challenging period in terms of people's lives, livelihoods, sources of income, and job security," said Rajapaksa. "I strongly believe that, even amidst these challenges, we are equipped with all the necessary strengths to manage the economy and to overcome such challenges." The new projected 11.1% budget deficit for 2021 is higher than the 9.5% target set by the government in June which itself was revised up from 8.9%.

"This budget is a credit positive," Dimantha Mathew, Head of Research for First Capital told the media. "There is a significant amount of taxes coming in and the government is looking to increase revenue by 46% next year while expenditure is expected to rise only by 16%. So the fiscal concerns are being addressed."

However, he warned that there could be some tightening of the economy due to public and capital expenditure cuts that could see consumer spending being hit. Sri Lanka has a large public sector that makes up about 2 million of the 21 million population.

Sri Lanka's central bank announced in October that it would keep its 2021 target of 5% growth unchanged. Growth numbers for next year are yet to be announced by the government and no projections were included in the budget speech.

Fire tests gold; suffering tests brave men - Lucus Annaeus Saneck



## Under 19 Bulls of

# Jaffna Hindu and Colombo Royal Locked Horns









Yesterday a 30 overs cricket match in which the under 19 bulls of Jaffna Hindu and Colombo Royal locked horns was the Inaugral Event at the Modern Playground of Jaffna Hindu declared open on Friday. The Principals, teachers ,old boys and other distinguished guests were among the spectators.

Uvindu of Colombo Royal scoring 67 runs emerged the highest scorer facing 47 balls and was caught and dismissed.Damith scoring 30 runs added valuable score to make the total 228 for the fall of 6 wickets.Facing 27 balls Tharanitharan of Jaffna Hindu scored 60 runs smashing 6 sixers and 5 boundaries. He was declared the man of the match. Thanutan added another 30 runs facing 46 balls to help make the total 152.

Colombo Royal bulls bundled 9 batsmen of Jaffna Hindu for 152 runs winning the match by over 80 runs. The best performers were congratulated and trophies were given away to them by the Principals,members of the O.B.A and the dignitaries turned up for the match. The event concluded with the College Anthem and it was a day of great joy for everyone.













*photo credit visagan*

J.H.C. 06

# Vinisha Umashankar at the COP26 Summit




Earthshot Prize finalist Vinisha Umashankar speaks during the COP26 Summit, in Glasgow, Scotland,

Young people have every reason to be angry with leaders who have failed to deliver, Ms. Umashankar said.

As a child, Vinisha Umashankar, a Class 10 student, used to walk with her mother and a bag full of washed and dried clothes to get them ironed from a couple who ran a mobile ironing cart in her street in Tiruvannamalai town in northern Tamil Nadu. She saw how her clothes were ironed with charcoal-filled cast-iron boxes by the couple, sweating as they worked in the heat. She returned, not just with her ironed clothes, but with an intent to make their lives better and the world around her cleaner.


Years later, as she grew up, Vinisha Umashankar, now 15 years old, found her answers in sunlight. A solar powered ironing cart, which would replace the conventional charcoal ironing box, would power a steam ironing box to do its job. Her innovation brought her laurels from around the world, including the prestigious Children's Climate Prize in November 2021. The prize given by the Sweden-based Children's Climate Foundation is one of the most significant climate-related awards for young innovators.

On Tuesday, Ms. Umashankar, was asked by Prince William, Duke of Cambridge, to speak her mind on clean energy at a meeting that discussed clean technology and innovation as part of the 26th U.N. Climate Change Conference of Parties (COP26) in Glasgow, the U.K. Among her audience were world leaders, including British Prime Minister Boris Johnson, U.S. President Joe Biden, and Prime Minister Narendra Modi. "Young people have every reason to be angry and frustrated at leaders who have made empty promises and failed to deliver. None of what we discuss today is practical for me. We need actions rather than promises to live in a habitable world," she said at the meeting on Tuesday. Her speech received a standing ovation.

Her parents, S. Umashankar, a business consultant, and U. Sangeetha, a school teacher, watched their only child's speech on the world stage at close quarters as they travelled with her to Glasgow. "Vinisha is class topper and her time management between studies and extracurricular activities is excellent.

Ms. Umashankar's mobile ironing cart has solar panels with a roof connected to a 100 Ah battery. A 12 volt 100 Ah battery needs about 1,200 watts of power to be fully charged. The solar panels produce 250 watts of power per hour. It takes five hours of bright sunshine to fully charge the battery, which in turn powers the steam ironing box for six hours.

# Yazhpanam Thedchanamoorthy Pillai



A documentary on Sri Lankan thavil exponent Yazhpanam Thedchinamoorthy Pillai is the lone Tamil non-fiction film to win a National Award in the past 17 years.

Titled Yazhpanam Thedchanamoorthy—Music Beyond Boundaries, the film won the Best Arts/Cultural Film at the 63rd National Film Awards. "A victory for every aspiring Tamil documentary filmmaker", as he calls it, the film's director Amshan Kumar says it was an opportunity to resuscitate the works of a person who facilitated a great cultural exchange between the Tamils of India and Sri Lanka. "I didn't know much about Thedchinamoorthy Pillai when I started making the film, over two years ago. It began with just three photos but I was able to collect 25 photos along with over 24 hours of non-professional recordings from his performances. These will invaluable to a generation of music lovers who would otherwise, have no access to his works," Kumar adds.

While most of the maestro's performances were held in the 1960's across both sides of the Strait, he talks of a period were large crowds used to gather in Thanjavur to listen to his performances. "At times, Indian Tamils project a sense of superiority in our artistic pursuits compared to Sri Lankan Tamil artists. But Thedchinamoorthy dispelled any such doubts because he was easily the best thavil player of the time."

Despite winning the National Award, Kumar says, it is still a struggle to showcase the film in India to a larger audience. "I've been struggling to find a spot on TV to screen my film. Thedchinamoorthy has several ardent fans who remember him and his unique playing style very fondly. Despite having so many 24X7 channels, it's sad that I can't find a single one hour slot to screen a film about a legend."

# New Zealand Beat England To Reach Semi Final



New Zealand Beat England To Reach Maiden Final T20 World Cup 2021 1st Semi Final Chris Woakes struck twice as New Zealand are two down in the chase of 167 vs England.

New Zealand made a remarkable comeback as they defeated England by 5 wickets at the Sheikh Zayed Stadium in Abu Dhabi to reach their maiden T20 World Cup final. Chasing a target of 167, New Zealand got off to the worst start possible, losing Martin Guptill and Kane Williamson as Chris Woakes struck twice inside the first three overs. Daryl Mitchell and Devon Conway steadied New Zealand's ship, adding 82 runs for the third wicket. Liam Livingstone then removed Conway and Glenn Phillips in quick successions, before Mitchell and James Neesham's late surge took New Zealand across the finishing line with an over to spare. Earlier, England had posted a total of 166/4, thanks to a 37-ball 51 from Moeen Ali. Initially, New Zealand had won the toss and skipper Kane Williamson had elected to bowl first.





# Australia defeates Pakistan to reach Semi Final

Pakistan's Shaheen Afridi, right, reacts as Australia's Matthew Wade, left, and Marcus Stoinis celebrate their win during the Cricket Twenty20 World Cup semi-final match between Pakistan and Australia in Dubai, UAE, Thursday, Nov. 11, 2021.

Australia defeated Pakistan by five wickets to enter the final of the ICC T20 World Cup on Thursday. Sent into bat, Mohammad Rizwan and Fakhar Zaman smashed quick fifties as Pakistan posted a challenging 176 for four.

Opening the innings, Rizwan scored 67 off 52 balls during which he hit three boundaries and four sixes, while Zaman remained unbeaten on 55 off 32 balls with the help of three fours and four sixes. Together with skipper Babar Azam (39), Rizwan shared 71 runs for the opening stand before stitching 72 runs with Zaman. For Australia, Mitchell Starc picked up two wickets for 38 runs.

Chasing, David Warner made 49, while Matthew Wade smashed a 17-ball unbeaten 41 and Marcus Stoinis was not out on 40 off 31 deliveries as Australia overhauled the target with an over to spare. Shadab Khan was the best bowler for Pakistan with figures of 4/26.

That's what happens when you go for just a par score. Chasing sides have a huge advantage. Pakistan had a par score, they needed everything to go their way, and finally they made a fielding error in the 19th over. It was all over after that. Matthew Wade hit three successive sixes off Afridi. He loves pace on the ball. Australia into the finals now.

# Thickkam Distilleries Revived





The defunct Thickkam Dis tilleries in Jaffnun, a valuable state isset laid to rest forsev=craldecades, isbeingrcfurbished and revived with mod cm technol-ogy and would be opened in February next year.

Thickkam Distilleries was established in 1984 and due to the 30-year-old conflict Thickkam distilleries gradually withered and was shut down and no sincere efforts were made by successive gov cminents to revive this, thus depriving the Palmyrah tap ping community a much needed livelihood.

However, the modemization und reac-tivation of the Thick kam distilleries which was a long-felt need of the Palm Development Cooperative Socicties is donc under the kupervision of subject Minis Iers Dr Ramesh Pathirana and Arundika Femando and now it is in its final stages," said Chairman Palmyrah Development Board Krishantha Pathi

He did that the revival is done with the collaboration of the private sector as well as several Palm Producer Coop chitive Socialitas and the total investment would be around Rs. 250 million mainly used to install modern machinery.

This factory hopes to convert palmyrah SAP into vine gar, surgical spirit, arrack. wine and later cthanol for local consump-tion and export." He siid that the Thickkam Distilleries in Jalina would also be a game-changer in many ways. "Firstly it will help to create around 250 new tappens to work on around two million untapped palmyrah trees to supply palmyrah toddy to the distillery thus increasing their income-carning opportu nities and sig-nificantly contrib uting to their livelihood devel opment,

Secondly, it will cnsure a free flow of mw material to the distillery helping to gradu

ally increase production and with exports generating FOREX to the country. Etha nol production will also help to save ethanol import expend The opening of the distill cry will give the Palmyrah Development Board a new avenue of income generation thus helping the insti-tution to move away from the depend ency of the Government Treasury and be a profit-mak ing venture. This would be a historic landmark. He also Hiid that the government also removed the 50% tax imposed by the previous regime.

Deputy General Manager Cum Manager (Applied Rescarch & Quality Control). Palmyrah Research Institute. Chavakachcheri, S. Srivijeindran, said that their Chairman Krishantha Pathimaja has also taken sev-eral new initiatives towards the welfare of the toddy tapping community which has camed high praise for them. "For the first time, these tappers would be given an NVO level certificate and a new service type identity card which will help to clev-ate their social standing in socie Also for the first item in history this underprivileged community with a high inci dence of poverty, will be ollered an insurance scheme.

**Courtesy Daily News**



# Okra - A health food for the elderly

Okra is a vegetable with very high nutritional value. In recent years, okra has become a popular and best selling nutrition and health care vegetable. It has become the first choice for athletes in many countries, and it is also a health food for the elderly.

Okra is rich in protein, fat, carbohydrates, vitamin A, B vitamins, and minerals such as calcium, iron, potassium, zinc, and selenium. Okra contains a viscous liquid that contains substances such as hemicellulose, cellulose, lignin, pectin and polysaccharides.

This viscous liquid is an important feature of okra. It can accelerate gastrointestinal motility, enhance metabolism, strengthen the immune system, and avoid the risk of various diseases. Okra is a low-calorie vegetable, 100 grams of okra contains only 30 calories. Eating okra will not make you fat. Regular consumption of okra is very beneficial to health.



# Cautious welcome for US-China climate agreement



COP26: Cautious welcome for unexpected US-China climate agreement The announcement by the two global rivals was made on Wednesday at the COP26 climate summit in Glasgow, which officially ends on Friday.

Protesters around the globe have been demand-ing firmer commitments from world leaders on climate change

Activists and politicians have cautiously welcomed an unexpected US-China declaration that vowed to boost climate co-operation.The EU and UN described the move as encouraging and an important step, but Greenpeace said both countries needed to take concrete action.

The US and China are the world's two biggest CO2 emitters. They said they would work together to achieve the 1.5C temperature goal set out in the 2015 Paris Agreement.

Scientists say that limiting global temperature rises to 1.5C will help humanity avoid the worst climate impacts. This is compared with pre-industrial temperatures.

While the latest pledge is short on detail, analysts say it is a tacit acknowledgement by China that the crisis warrants urgent attention and that it will play a bigger role in confronting the global challenge.

US President Joe Biden and his Chinese counterpart Xi Jinping are now expected to hold a virtual meeting as early as next week.

According to China's climate envoy, the declaration was agreed following some 30 meetings with the US over the past 10 months.

It pledges close co-operation on cutting emissions, while a joint working group will also "meet regu-larly to address the climate crisis" over the next decade.

The reaction to the surprise agreement has been largely positive, but experts and activists have warned that policies must now be enacted to support the promises.

Genevieve Maricle, director of US climate policy action at pressure group WWF, said the announcement offered "new hope" that the 1.5C limit might be achieved.

But she added that "we must also be clear eyed about what is still required if the two countries are to deliver the emission reductions necessary in the next nine years".

Greenpeace International Executive Director Jennifer Morgan warned that China and the US needed to show greater commitment to reaching climate goals.

Former Australian Prime Minister Kevin Rudd, who is president of the Asia Society which works on global climate change agree-ments, told the BBC that the agreement was "not a gamechanger" but was a big step forward.

"The current state of geopolitics between China and the United States is awful, so the fact that you can extract this... agreement between Washington and Beijing right now is [impor-tant]," he said. There were steps agreed on a range of issues including methane emissions, the transition to clean energy and de-carboni-sation.

China's top climate negotiator Xie Zhenhua told reporters that on climate change "there is more agreement between China and US than divergence".

China refused to join an agreement earlier this week to limit methane - a harmful green-house gas, but has instead pledged to develop a "national plan" to address the issue.

China's chief climate negotiator Xie Zhenhua said the US and China had held more than 30 virtual meetings Mr Xie was followed by John Kerry, the US climate envoy, who said that while US and China had many differences, co-operation on climate was vital.

# Carly's Umbrella



Carly has a big umbrella that she likes to use on rainy days. She got the umbrella 3 years ago. Carly's friend, Jill, gave her the umbrella. Carly's umbrella is teal and purple, and the handle is silver. The umbrella is so big that 4 kids can fit under it! When other kids forget their umbrellas, Carly lets them share her umbrella. The other kids think her umbrella is really cool. Before she got her umbrella, Carly did not like to walk home from school on rainy days. She would ask her mom to pick her up from school. Now that she has a big umbrella, Carly loves to walk home from school. Jill usually walks home with Carly. The girls love watching the rain fall down the edges of the umbrella.

## Answer the Questions

1. When did Carly get the umbrella?
   A. 2 years ago
   B. 3 years ago
   C. 3 months ago

2. Who gave the umbrella to Carly?
   A. Jill
   B. Carly's dad
   C. Jill's mom

3. What does Carly's umbrella look like?

______________________________

4. What does Carly do when other kids forget their umbrellas?

______________________________


5. Before she got the umbrella, who picked Carly up from school on rainy days?

______________________________

## Read the story and answer the questions

*A hare was very popular with the other beasts who all claimed to be her friend. But one day she heard the hounds approaching and hoped to escape them with the help of her many friends. "What are friends for," she asked herself, "if not to help out in time of need?" Furthermore, most of her friends were big and brave, so at least one should be able to help. First she went to the horse, and asked him to carry her away from the hounds on his back. But he declined, stating that he had important work to do for his master. " I feel sure," he said, "that all your other friends will come to your assistance." She then applied to the bull, and hoped that he would repel the hounds with his horns. The bull replied: "I am very sorry, but I have an appointment with a lady. However, I feel sure that our friend the goat will do what you want." The goat, however, feared that his back might be harmed if he took her upon it. The ram, he felt sure, was the proper friend to apply to. So she went to the ram and told him the case. The ram replied: "Another time, my dear friend. I do not like to interfere on the present occasion, as hounds have been known to eat sheep as well as hares." The hare then applied, as a last hope, to the calf, who regretted that he was unable to help her. He did not like to take the responsibility upon himself, as so many older persons had declined the task. By this time the hounds were quite near, so the hare had to take to her heels. Luckily, she escaped.*

1. Who did the hare want to escape from?
2. Whose help did she hope to escape with?
3. Why did she hope they would help her?
4. What excuse did her horse friend give?
5. How did she think the bull would repel the approaching animals?
6. What excuse did the bull give?
7. Which if her friends refused to take responsibility?
8. How did the hare escape finally?



## A vocabulary exercise for Grades 6 and 7 children.

***Fill I the blanks with the correct words from the list below.***

**author/ captain / conductor / director /editor / judge / keeper / matron / president / principal**

1.Mr. Dias is the ------------------------ of a school.
2.Sumitha is the -------------------------- of a hospital ward.
3.Justinis the -------------------------------of a ship.
4.Kumar is the ----------------------------of animals in a zoo.
5.Dharan is the----------------------------- of a newspaper.
6. Johan is the------------------------------ of a court of law.
7. Dina is the ----------------------------- of an orchestra.
8. Dr. Kalam is the -----------------------of the Republic of India.
9. Mr. Sena is the -------------------------of a company.
10. R.K .Narayan is the -------------------of many novels.

Answers: .1.principal/ 2.matron/ 3.captain/ 4.keeper/ 5.editor/ 6.judge / 7.conductor/ 8.president / 9.director/ 10. author/

## PENGUIN ANTICS

Name: ______________

Penguins are birds that live in the coldest parts of the world. They are black with white stomachs and have small wings. They move across the ice by waddling slowly on their little feet with their wings out to the side. Surprisingly, Penguins can not fly even though they have wings. They use their wings to balance them as they waddle across the ice. Their bodies are also very good at keeping the penguin warm in the cold weather. Penguins are very good at swimming and use the strength in their bodies to move easily through the water. Penguins need to be good swimmers because they eat mostly fish and sea animals. When they catch their food they swallow it whole! They also need to use their strong bodies to get away from seals and sharks because seals and sharks eat penguins. There are lots of different types of penguins and they come in all different sizes and shapes. We all need to make sure we take good care of our world because oil spills and global warming can destroy the penguin's home.




### ANSWER THE QUESTIONS

1) Where do penguins live?
2) What do penguins look like?
3) Can penguins fly?
4) How do penguins move across the ice?
5) What do penguins eat?
6) What animals eat penguins?
7) Why do we need to take care of the world?
8) Summarise this text using three sentences.
9) What do you like about this text?
10) What do you dislike about this text?

**Grade 8 Reading Comperhension. Answer the questions.**

# Louis Pasteur



**Louis Pasteur was born in 1822, in France in the ancient town of Dole, to a tanner Jean Joseph Pasteur and his wife Jeanne. His father had been a soldier in Napoleon's army. They sent Louis to a school in Arbois when he was six, he enjoyed drawing portraits of his family. After he graduated he went to the Royal College in Besancon where he earned his B.A. and then a Bachelor of Science degree, two years later at the age of twenty. In 1847 he received a doctorate degree and became a professor at age twenty-six. He married Marie Laurent and they had five children. His research led to the process of pasteurization of milk to kill viruses and harmful bacteria. He named the new science bacteriology and suggested a new theory, The Germ Theory of Disease. He believed that diseases were caused by germs attacking the body from the outside. The raising of silkworms was a large industry in France at that time, but in 1849 the worms were hit with a disease and began to die. In 1865 at the request of the government Pasteur performed experiments and at the end of this arduous task he suffered a stroke and paralysis. After two years he began to recover the use of his body. His next task was to try and find the cause of disease in the body. He developed a vaccine for a disease in chickens, fowl cholera, and a disease in animals, splenic fever; Pasteur devoted the rest of his life developing vaccines for the people against such diseases as cholera, diphtheria, tuberculosis and smallpox. As early as 1774 a vaccine for smallpox had been discovered. He is especially remembered for the case in which he vaccinated a nine-year-old boy, Joseph Meister, who had been bitten by a dog that had rabies. The boy recovered after receiving the vaccine from Pasteur. The Pasteur Institute was founded in 1888 in Paris. When he died he was buried there in a fine tomb.**

1. Where was Louis Pasteur born?
2. What was his father?
3.Where did he go to school?
4.What was his first degree?
5. How old was he when he got his second degree?
6.How old was he when he became a professor?
7. What theory did he put forward?
8. What vaccines did he invent for the people?
9. What was the famous vaccine that saved a boy?
10. At age did he die and where was he buried?

# கலைக் கதிர்



## கலைஞர் கனகசூரியம் யோகானந்தன்

நான் அறிந்தவரையில் இந்த ஆளுமை சம்பூரைச் சேர்ந்தவர் ஆனால் ஒரு தடவை அந்த கலைஞனோடு பேசக் கிடைத்தது அவர் தந்தையின் மிக நெருங்கிய நட்புக்களில் ஒருவர் (தேடல் கலை இலக்கிய விழாவிற்காக அவரது தலைமையில் கவியரங்கு நடத்தலாம் என்ற முடிவோடு நிகழ்வில் கலந்து கொள்ள வேண்டி தொலைபேசியில் உரையாடக்கிடைத்தது அப்போது தான் அவரை பற்றி அறிந்து கொண்டேன் இவர் மிக சிறந்த ஆளுமை என்பதையும் இனங்கண்டு



கொண்டேன்.

இனி இக் கலைஞர் பற்றிப் பார்ப்போம்.

திருகோணமலை மாவட்டத்திற்குட்பட்ட சம்பூர் எனும் அழகிய கிராமத்தில் பிறந்தார்.மூதூர் மத்திய கல்லூரியில் பயின்று பேராதனை பல்கலைக்கழகத் திற்கு தேர்வாகி பட்டப்படிப்பை முடித்து ஆசிரியராக வெளியானார். நான்கு பாடசாலைகளில் ஆசிரியராக கடமையாற்றி பின் அதிபராக தரமுயர்த்தப்பட்டு இன்று சீனக்குடா தமிழ் வித்தியாலயத்தில் அதிபராக கடமை யாற்றி வருகிறார். இவர்மூன்று பிள்ளைகளின் தந்தை யுமாவாார்.இது மட்டும் இவரது வரலாறு அல்ல. இதை விட சுவாரஸ்யமான சில இவரது ஆளுமைத்திறனான கவிதையும் அடங்கும்.

கவிதை உலகில் காலடி எடுத்துவைத்த நாள்முதல் இன்றுவரை ஓயாது கலை கலாசாரங்களை பேணி காக்கின்றவகையில் பத்திரிகைகளிலும் தனது திறனை வெளிக்காட்டி நூல்களையும் வெளியிட்டு தனது கவிப் புலமையையும் வெளியுலகிற்கு வெளிச்சம் போட்டு காட்டியுள்ளார்.

**இவரின் நூல்களாவன**

1.உண்மை என்றும் உயிர்பெறும் (சாகித்திய விருது பெற்றது)
2.மழலைக்கோர்பாட்டு
3.என்மனவானில்
4.நதியில்லாத ஓடம் ‘அகில இலங்கை ரீதியில் நடாத்தப்பட்ட போட்டியில் பிரமில் விருது பெற்றது

இதைவிட (கவித்தூதர்)விருதும் (நகர முதல்வா) திருகோணமலை நகராட்சி மன்றத்தால் வழங்கப் பட்டதும் குறிப்பிடத்தக்கது.’

முக்கியமாக திருகோணேஸ்வரத்தை பற்றிய ஒரு பாடல் வரிகளுக்கு சொந்தக்காரர். திருமலை வலய கீதம் அதைவிட பல பாடசாலைக்கீதங்கள் ஏராளமான கல்வெட்டுக்கள் என்பனவும் அடங்கும் உலகத் தமி ழர் கலை மற்றும் பண்பாட்டு பேரவையின் நிர்வாகி ஆவார்.

பல கவியரங்கத்திற்கு தலைமை தாங்கி நடத்தி யவர். கவிதை மட்டுமல்ல இசையிலும் ஆர்வமுள்ள வர். தேடல் கலை இலக்கிய அமைப்பில் கவியரங்க தலைமை வகித்து சிறப்புற நடத்தியமைக்காக கௌர விக்கப்பட்டவர் இளம் மற்றும் வளர்ந்த படைப்பாளி களை ஊக்கப்படுத்தி வருபவர். சமூகத்துக்கான தன் னால் முடியுமான சேவைகளைச் செய்பவர் இப்படி யானவர்கள் இனபாகுபாடு பார்க்காதவர். எல்லா சமூ கமும் விரும்பும் ஒரு மனிதர் இவரோடு இறை துணை இருக்க வேண்டுகிறேன். இப்படிப்பட்ட நல்லுள்ளங் களை நாமும் இனங்காண்போம் உறவுகளே .

**- மோகனா கௌரிதாசன் -**



## திரையின்னும் பயணிக்கும்!!

சுரந்திருந்த கனவுகளை
சுருள்மேகம் சிதைத்ததுவா?
நிறைந்தவொரு நிறைகளிப்பில்
நெடுநீளும் மனக்குளிப்பா?

எதுகூறும் ஏழிசையே
அடிகூறும் அரிச்சுவடி?
செடிகூட சிலிர்த்திடுமோர்
நொடிநீரின் நனைதலிலே

துடிவீழும் தையலர்தம்
அடியாழம் யாரறிவார்?
நெடிதாகும் நிழல்மேகம்
துளிதீர்ந்து துவண்டாலும்

வடிந்தோடும் வரிகளில்நான்
மடிந்தோடி மறைந்தாலும்
கடிவாளம் நலியாது
பிடிவாதம் சலியாது!

புதுமேகம் பொங்கியது
பொழிலுந்தன் புன்னகையா?
நதிவேகம் தாண்டியது
வலிசொல்லும் வன்முறையா?

எதுசொல்லும் ஏலவளே?
கதியில்லை சதியில்லை
தெருநின்று தரையானேன்
நதிநீரில் நுரையானேன்

மதியின்று மரணிக்கும்!
நொதிகூட சரணிக்கும்!
நிரையான நீட்சியிலுன்
‘திரை’யின்னும் பயணிக்கும்!!

- பானு சுதாகரன் -

## மூச்சோடு முடிச்சானாய்

உள்ளம் உவகை கொள்ளுதடி உனைநினைக்க
அள்ளி அணைக்க தோணுகையில் நீயோ
துள்ளித்திரியும் புள்ளி
மானாய் தெரிகிறாயே
வெள்ளி நிலவாய் தூரத்தே செல்லாதே
கள்ளியே காதல்வித்தை என்னுள் விதைத்தவளே
தள்ளி நின்று இரசிக்காமல் வந்துவிடு

அஞ்சுகமே ஆருயிரே எனதருமை காதலியே
பஞ்சிலும் மென்மை
மிருதுவாய் நீ
மஞ்சம் தந்திட வந்திட மாட்டாயோ
நெஞ்சமெல்லாம் நீயே
நிறைந்து விட்டாயடி
கொஞ்சி விளையாடக் காத்திருக்கேன் என்னவளே
தஞ்சமடைந்து தலைசாய்க்க வந்திடுவாய் நீயே

முத்திரை பதித்த முழுநிலவாய் பௌர்ணமியே
நித்திரையில் வருகிறாய் முத்தம் தருகிறாய்
சித்தம் கலங்க வைக்கிறாய் சிங்காரியே
அத்தை மகளே சித்திரையில் பிறந்தவளே
மொத்தத்தில் மூச்சோடு முடிச்சானாய் கண்மணியே
செத்துமடிய முன்பே கரம்பற்ற வந்துவிடு

- சுஜந்தினி யுவராஜா -

## இராவணதேசம்

அயல்நதியின்
ஆலோலத்தில்
பஞ்சவடி பல்லிளிக்கத்
தொடங்கியது!
வெளிச்ச மின்மினிகள்
காற்றில் மிதந்து
கொண்டிருந்தன!

வேகம் வலுத்து
ஆசை புளுத்து
வார்த்துகில் அவிழ்த்து
இரட்டை வாள் புனைந்து
களம் கண்டேன்.. . !

அமித விருட்சங்கள்
சாமரங்கள் வீசத் தொடங்கின!
அடங்காக் காற்று,
சத்தம் காவிக் கழித்தது..!

ம்..
இது இராவண தேசம்,
இங்கு, அரக்கிகளுக்கும்
அந்தரங்கம் இருக்கத்தான்
செய்கிறது...

- நவயுகா -

# கல்விக்கதிர்



# இலங்கையின் தரைத் தோற்றம்

இலங்கை இந்து சமுத்திரத்திலுள்ள ஒரு தீவாகும். இது இந்தியத் துணைக்கண்டத்தின் தெற்கே அமைந்துள்ளதுடன், 65,525 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது. தீவின் நீர்ப்பரப்பு தவிர்ந்த 62, 336 சதுர கிலோ மீற்றர் காணப்படுகிறது. இது வட அகலாங்கு 6 - 10 இடையிலும், கிழக்கு நெட்டாங்கு 80 - 82 இடையிலும் அமைந்துள்ளது. இதன் உயர்ந்த பட்ச நீளமாக தெய்வேந்திரமுனை தொடக்கம் பருத்தித்துறை வரை 432 கிலோ மீற்றரும், அதிகபட்ச அகலமாக கொழும்பிலிருந்து சமணகந்த வரை 224 கிலோ மீற்றர் உயரமாகவும் உள்ளது. தண்ணீர்த்துளி வடிவத்தினையுடைய இலங்கையானது அதன் ஆச்ச ரியமூட்டும் தரைத்தோற்ற அம்சங்களை நிறைந்து கொண்டுள்ளதுடன், உலகிலேயே மிக இயற்கை அழ குள்ள இடமாகவும் மாற்றுகின்றது. துலாம்பரமாக தெரியும் உயர வேறுபாடுகளினால் மத்திய மலைநாடு, சமவெளி, கரையோர நிலம் என்ற மூன்று வலயங்க ளைக் கொண்டுள்ளது.

கரையோர ஒடுங்கிய நிலையமானது தீவைச் சூழ்ந்துள்ளதுடன் மணற்கடற்கரைகளையும், கடனீரேரிகளையும் கொண்டுள்ளது. சிறந்த கடற்கரையோரமாக தென்கரையோரமாகவும், தென்மேற்கு கரையோரமாகவும், கிழக்குகரையோரமாகவும் உள்ளது. வட கிழக்கு மற்றும் தென்மேற்கில் கரையோரமானது பளிங்குப்பாறைகள், செங்குத்துப்பாறைகள், விரிகுடாக்கள் மற்றும் கரைக்கு கிட்டிய தீவுகளின் பல்வேறுபட்ட பிரிவுகளைக் கொண்டுள்ளதுடன், வடகிழக்கு கரையோரத்தில் திருகோணமலையானது உலகத்தில் சிறந்த இயற்கை துறைமுகத்தை உருவாக்குகின்றது.


அத்துடன் தென்மேற்கிலே காலியில் சிறிய பாறைத் துறைமுகமும் உள்ளது. வடமேற்கிலே மன்னார் தீவானது பிரதான நிலத்தை ஒரு பாலம் மூலம் இணைக்கிறது. ஆதாம் பாலாமாக என அழைக்கப்படும் இது சிறு தீவுகளையும், மணற்திட்டிகளையும் கொண்ட நீண்ட சங்கிலித்தொடராக தென்னிந்தியாவுடன் இணைப்பை ஏற்படுத்துகிறது.



இலங்கையின் ஆறுகள் மத்திய மலைநாட்டில் சிவனொளிபாதமலைக்கு அண்மையில் உருவாகி ஒடுங்கிய அகன்ற பள்ளத்தாக்குகள் மற்றும் சமவெளிகளின் ஊடாக பாய்ந்து இறுதியாக திருகோணமலைக்கு அண்மையில் கடலைக் கலந்து மலைச்சரிவு, நீர்வீழ்ச்சி ஆழ பள்ளத்தாக்குகள் போன்ற தரைத்தோற்றங்களை உருவாக்கிச் சென்று கடலைக் கலக்கிறது. அநேகமான ஆறுகள் குறுகியனவாகவும், தொடர்ச்சியற்ற சமவெளிகளால் அடிக்கடி குறுக்கிடப்படுவனவாகவும் உள்ளன.

இலங்கையின் மிக நீளமான நதி மகாவலி கங்கையாகும். இதன் நீளம் 335 கி.மீற்றர். ஆற்றின் மேற்பகுதியானது கடுமையானதாகவும் ஆழம் அகலம் காண முடியாததாகவும் அதன் கீழ்ப்பகுதியானது காலத்திற்கு காலமான வெள்ளங்களை கொண்டு செல்வதாக உள்ளது. இவ்வாறானது இயற்கை மழைவீழ்ச்சி குறைவாக உள்ள வடகிழக்கு பிராந்தியத்தில் நீர்ப்பாசன முறைமைக்கு தேவையான மிக முக்கியமான நீரை வழங்குகின்றது.

# யாழ்ப்பாண மாவட்டம்





யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையின் 25 மாவட்டங்களில் ஒன்று. இது நாட்டின் வடகோடியில் அமைந்துள்ளது. மேற்கில் மன்னார் வளைகுடாவும், வடக்கிலும், கிழக்கிலும் இந்தியப் பெருங்கடலும், தெற்கில் யாழ்ப்பாண கடனீரேரியாலும் சூழப்பட்டுள்ளது. இலங்கையின் தலை போல் அமைந்துள்ள, யாழ்ப்பாண தீபகற்பத்தின் பெரும்பகுதியை இந்த மாவட்டம் உள்ளடக்கியுள்ளதுடன், தெற்கேயுள்ள பல தீவுகளும் இதனுள் அடங்கும். இத் தீபகற்பத்தினுள்ளிருக்கும், தொண்டமானாறு, உப்பாறு போன்ற கடல்நீரேரிகளால், இம் மாவட்டம் மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இப் பிரிவுகள், வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி, தீவுப் பகுதி என அழைக்கப்படுகின்றன. இம் மாவட்டத்தின் தெற்கு எல்லையில், யாழ்மாவட்டத்தின் தெற்குப் பகுதியில் இருந்து 1984 பெப்ரவரியில் பிரிக்கப்பட்ட கிளிநொச்சி மாவட்டம் உள்ளது.

யாழ்ப்பாண மாவட்டம் இலங்கையின் வறண்ட பிரதேசத்தில் அமைந்துள்ளது. வங்களாவிரிகுடாவில் இருந்து வரும் வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்றினால் மழையைப் பெறும் இப்பகுதி ஆண்டு தோறும் 1,231 மிமீ மழைவீழ்ச்சியை பெறுகிறது. ஆகக்கூடிய மாதாந்த சராசரி வெப்பநிலை 29.5 C ஆகவும், குறைந்த வெப்பநிலை 25.2 C ஆகவும் உள்ளது. சராசரி ஈரப்பதன் ஆகும்.

யாழ்ப்பாண மாவட்டத்துக்குச் செல்லும் எவருக்கும், அம் மாவட்டத்தின் தனித்துவமான தன்மையாகத் தெரியும் முதல் விடயம், மைல் கணக்கில் பரந்து கிடக்கும் பனந்தோப்புகளாகும்.

யாழ் மாவட்டம் வறண்டதாகவும், அளவிற் சிறியதாகவும் இருந்தும், இது மிகவும் சனத்தொகைச் செறிவு மிக்கதாகும். ஐந்து மாவட்டங்களையும் 8,848.11 ச.கி.மீ பரப்பளவையும் கொண்ட வடமாகாணத்தில், 10,25.2 ச.கி.மீ அளவுக் குள் அடங்கியுள்ள இம் மாவட்டத்தினுள் 66.6% வீதமான மக்கள் வாழ்ந்தனர் என 1981 ஆம் ஆண் டுக் கணக்கெடுப்புக் காட்டுகிறது. இங்கே தமிழர், முஸ்லிம்கள், சிங்களவர்கள் எனும் மூவினத்தவரும் வாழ்ந்தா லும், யாழ்மாவட்டத்தின் மக்கள் தொகையில் மிகப்பெரும்பான்மையினர் இலங் கைத்தமிழர் ஆவர். சமய அடிப்படையில், இந்துக்கள் பெரும்பான்மையினராக உள்ளனர். கிறிஸ்தவர்கள், முஸ்லிம்கள் சிறுபான்மையாக உள்ளனர். பௌத்தர்கள் மிகக் குறைவே.

இலங்கை அரசாங்கத்தின் சார்பில் இம்மாவட்டத்தை நிர்வகிக்கும் அதிகாரி, மாவட்டச் செயலாளர் (முன்னர் அரசாங்க அதிபர்) என அழைக்கப்படுகிறார். இம் மாவட்டம் 15 பிரதேச செயலாளர் பிரிவுகளாக (முன்னர் உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள்) என அழைக்கப்படும்பல துணைப் பிரிவுகளாக வகுக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், நல்லூர், சங்கானை, சண்டிலிப்பாய், தெல்லிப்பழை, உடுவில், கோப்பாய், கரவெட்டி, மருதங்கேணி, பருத்தித்துறை, சாவகச்சேரி, ஊர்காவற்




துறை, வேலணை, காரைநகர் ஆகிய பிரதேச சபைகள் காணப்படுகின்றன.

ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவும் ஒரு பிரதேச செயலாளரின் கீழ் செயல்படுகின்றது. இந்தத் துணைப் பிரிவுகளும் மேலும் 434 கிராம சேவை அலுவலர்களாக பிரிக்கப்பட்டுள்ளன.



இவற்றைவிட மக்களால் தெரிவு செய்யப்படும் உள்ளூராட்சி நிர்வாக அமைப்பில் அடங்கும், மாநகரசபை, நகரசபை, மற்றும் பிரதேச சபைகளாகவும் யாழ்ப்பாண மாவட்டம் பிரிக்கப்பட்டுள்ளது.

# முறிந்த போதும் விரிந்த சிறகு

அம்மா... அம்மா... தண்ணீர் நிறைஞ்சு போச்சு . மோட்டரை ஓவ் பண்ணுங்கோம்மா என்ற மகளின் குரல் கேட்டு கிருஷ்ணவேணி மோட்டர் ஸ்விச்சை ஓவ் பண்ணினாள். காலை 6.30 மணி ஆகிவிட்டிருந்தது. கொரோனா லொக்டவுனுக்குப் பிறகு நீண்ட நாள்களின் பின் இன்றுதான் பாடசாலைகள் ஆரம்பிக்கின்றன. ஜீவிதன் ஒன்பதாம் வகுப்பில் படித்துக் கொண்டிருக்கிறான். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் எப்படியும் ஏழு பதினைந்து மணிக்கெல்லாம் பள்ளிக் கூடத்தில் இருந்தாகோணும். இல்லையென்றால் ஒழுக் கத்துக்குப் பொறுப்பான கேதீஸ்வரன் வாத்தி நல்ல ஒரு பிரம்பால் பின்பக்கம் பழுக்க பழுக்க நல்லா விளாசிடும் மனுசன். பிந்தி எழும்பிய அவசரத்தில் ஜீவிதன் அவசரம ாக அள்ளித் தலையில் நீரை ஊற்றி னான். கடந்த காலங்களில் பள்ளிக்கூடம் என்கிற பேச் சுக்கே இடமில் லாத நேரத்திலே நல்லா விடிய விடிய நித்திரை கொண்டு எழும்பியதால இப்போ பள்ளிக் கூடங்கள் திறந்ததாலே என்றாலும் நேரத்துக்கு எழும்பா தது பெரிய சிக்கலாகவே இருந்தது. கிருஷ்ணவேணி எப்படி உருட்டி மகனை எழுப்பியபோதும் அவன் புரண்டு புரண்டு படுத்துவிட செல்ல மகனின் அழகிய முகத்தைப் பார்த்துக் கொண்டே அதட்டி எழுப்ப மன மில்லாமல் இருந்து விடுவாள் அவள். அம்மா சாப்பாடு கட்டியாச்சோ. தாங்கோ தாங்கோ நேரம் போயிட்டுது. அந்த மனுசன் அடிச்சே ட்ரவுசரைக் கிழிச்சுப் போடுவார் என்றான். கேற்வரை ஓடிச் சென்று சைக்கிளை எடுத்து ஓடத் தயாரான ம கனிடம் சாப்பாட்டுப் பெட்டியையும் தண்ணீர்ப் போத்தலையும் ஓடிச் சென்று கொடுத்துத் திரும்ப கிருஷ்ணவேணி களைத்தே போய்விட்டாள்.

அவள் உள்ளே திரும்பவும் அப்பா கூப்பிடவும் சரி யாக இருந்தது. பிள்ளை சின்னமகள் அப்பா இப்படித்தான் கூப்பிடுவார். ஓம் அப்பா கொஞ்சம் ஒரு ஐஞ்சு நிமிசம் பொறுங்கோப்பா. தேத்தண்ணி தாறன். தம்பி பள்ளிக் கூடமல்லோ போறான் இண்டைக்கு. அதுதானப்பா பிந்திப் போச்சு என்று தந்தையின் குரலின் தொனியு ணர்ந்து பதிலுரைத்தாள் மகள். கிருஷ்ணவேணி ஹீற்றரின் ஸ்விச்சை ஓன் செய்து கொண்டு மதியச் சமையலுக்கான மற்றைய வேலைகளில் ஈடுபடலானாள். அவளும் அலுவலகம் சென்றாக வேண்டுமல்லவா? அடுப்பில் உலை கொதித்துக் கொண்டிருந்தது. கிருஷ்ண வேணியின் சிந்தனை பின்னோக்கிப் பயணப்பட ஆரம்பித்தது.

இடம்பெயர்ந்து எல்லோரும் பூநகரி நகருக்கு குடி வந்திருந்த நேரம். சகல போக்குவரத்துக்களும் அடை பட்டு வன்னி நிலப்பரப்பில் மட்டும் போய்வரக் கூடியதாக இருந்தது. யாழ்ப்பாணத்துக்கோ கிழக்கு மாகாணத்துக்கோ அல்லது கொழும்பு போன்ற பெருநகரப் பகுதிகளுக் குள்ளோ பிரவேசிக்க முடியாத பெரும் தடை இருந்த காலமது. கல்வியைத் தொடர முடியாமல் வந்த சோகம். ஏமாற்றம் இரண்டும் வாட்ட கிருஷ்ணவேணி மிகவும் உடைந்து போனாள். அப்பா, அம்மா, பெரியக்கா மூன்று பேரும் ஆறுதல்படுத்த கடும் பிரயத்தனம் பட வேண்டியி ருந்தது. ஆனாலும் அவளது மன்றாட்டு வேண்டுதல் தியானம் எல்லாம் பலித்துப் போகத் திரும்ப யாழ்ப்பாணம் சென்று பல்கலைக்கழகம் சென்று திரும்பவும் 2 ஆம் வருடத்தினைக் கற்கும் அந்த சந்தர்ப்பம் வந்தது. 'லங்கா முடித' கப்பலின் வழி வெறும் இரண்டரை மணித்தியால பயணமது. 24 மணித்தியாலமாக மாறிக் கொண்டு போய்ச் சேர்த்தது. அனைவரையும் கல்வியும் தொடர்ந்தது. தனது வெற்றிப் பயணத்தின் ஓர் கல்லை எட்டிப் பிடித்தாள் கிருஷ்ணவேணி.

படிப்பு முடிந்து பட்டத்தையும் எடுத்துக் கொண்டவள் மீள தமது பெற்றோர்கள் இருப்பிடம் திரும்பினாள். இனியென்ன படிப்பு முடிந்தால் மற்ற பெண்பிள்ளைகள் போல திருமணத்தினைக் கட்டி வைத்துவிடவேண்டும் என்கின்ற அவசரத்திலிருந்தார் தந்தை. ஆனால் கிருஷ்ண வேணி சாதிக்க வேண்டும் என்றே துடித்தாள். ஆனாலும் தந்தையின் பிடிவாதம் முந்திவிட பட்டப்படிப்பை முடித்து சில மாதங்களிலேயே பிரியந்தனை வீட்டார் சம்பந்தம் பேசி முடித்து வைத்தனர். மீண்டும் பிள்ளை சின்னம கள் என்கிற குரலைக் கேட்டு திரும்பவும் தன்னிலை திரும்பினாள் கிருஷ்ணவேணி. ஓம் அப்பா வாறன். தேத்தண்ணி போட்டுட்டன் என்று கூறிக் கொண்டவள் தந்தையின் தேநீர் குவளையில் தேநீரை நிரப்பி அவர் முன் வைக்க எடுத்துப் போனாள். அப்பா இந்தாங்கோ குடியுங்கோ. எங்கேனும் வெளிய போய் வரப் போறீ யளோ? போய் வாறதெண்டால் நான் வெளிக்கிட முன்னம் வந்திருங்கோப்பா. இன்றைக்கு நேரத்தோட நான் கோட்டுக்குப் போகவேணும். புதிசாக ஜட்ஜ் வேலை பாரமெடுக்கிறாரல்லோ எண்டாள். ஓம் பிள்ளை கடைக்கு ஒருக்காப் போகவேணும். பேப்பரும் வெத்திலையும் வாங்கி வரவேணும் என்றார் அவள் தந்தை பரம சிவத்தார். ஓம் அப்பா மறக்காமல் காலைக்கதிர் வாங்கி வாங்கோ. நேற்றைக்குத் தான் கனநாளுக்குப் பிறகு பேப்பர் வெளிவிட்டிருக்கிறாங்க. நேற்றைய பேப்பரையும் மறக்காமல் எடுத்துக் கொண்டு வாங்கோப்பா என்றவள் கெதியா வந்துடுங்கோ சரியா எனக் கூறிக் கொண்டு உள்நுழைந்தாள். தாய் பர்வதம்மாள் படுக்கையிலிருந்து இன்னும் எழும்பவில்லை. பர்வதம் பக்கவாதத்தால் பீடிக்கப்பட்டு சில வருடங்களாகின்றன. அக்கா ஜெயவேணி வெளிநாட்டில் தங்கிவிட இளைய வள் கிருஸ்ணவேணி அப்பாவையும் அம்மாவையும் பார்க்க வேண்டிய கடமையைத் தான் வாங்கிக் கொண்டாள். ஒவ்வொரு நாளும் காலை வேலைக்குப் போக முன்னதாக தாய் பர்வதம்மாளின் கடமைகளை நிறைவு செய்வதோடு வீட்டில் சமையல் சாப்பாடு சகலத் தினையும் ஒழுங்கமை த்துவிட்டே அவள் அலுவலகம் புறப்பட்டு விடுவாள். ம கள் ஜீவிதம் பாடசாலை முடிந்து வந்து தனது கடமை படிப்பு என்பவற்றைத் தொடர்ந்து விடுவாள். தந்தையின் கவனிப்பில் தாயை ஒப்படைத்து விட்டு வேலைக்குச் சென்று திரும்பும்வரை பாதி நினைவு வீட்டிலேயே இருக்கும் அவளுக்கு.



கிருஷ்ணவேணி சமையலைக் கவனிக்க ஆரம்பித் தாள். சிந்தனை விட்ட இடத்திலிருந்து மீண்டும் தொடர்ந் தது. கண்ணுக்கு நிறைவான கணவன். அவளைப் போல பட்டப் படிப்பை அவன் நிறைவு செய்யவில்லையே தவிர மற்றப்படி பண்பிலும் பழக்க வழக் கத்திலும் அவன் மேன்மகனே. அரச உத்தியோகத்தில் அவன் நம்பிக்கையற்றவன். வியாபாரம் அவரது பரம் பரைத் தொழிலாக இருந்ததால் ஓர் கட்டடப் பொருள்கள் மற்றும் இரும்பு தளபாடப் பொருள்கள் உள்ள ஓர் கடையை 'வேணி கட்டடப் பொருளகம்' என்கிற பெயரில் கிளிநொச்சி யில் ஆரம்பித்து நடத்தி வந்தான். காதல் மனைவியோடு கருத்தொருமித்து இனிதே வாழ்ந்து வந்தான். கிருஷ்ண வேணியும் கருவுற்றாள்.

பிரியந்தனுக்கோ தலைகால் புரியாத சந்தோசம். மேலும் மேலும் வியாபாரத்தில் ஆக்கமும் ஊக்கமும் காட்டினான். வியாபாரமும் பெருகியது. சில மாதங்களில் நல்ல வருவாயையும் கொடுத்தது. இங்குதான் விதி வலியதாகியது. வியாபாரம் பெருகியதால் கொழும்பு சென்று நேரடியாக பொருள்கள் கொள்வனவு செய்ய உத்தேசித்தான். அதன்படி ஒரு தொகைப் பணத்தினோடு பஸ் ஏறியவன் திரும்பி வரவேயில்லை. ஆனால் செய்தி மட்டும் தான் வந்தது. கிளிநொச்சியிலிருந்து போன பஸ் அநுராதபுரத்தில் வழிமறிக்கப்பட்டு இனந் தெரியாத முகமூடி நபர்களால் இளைஞர்கள் பத்துப்பேர் கண்ணைக் கட்டி ஒரு ட்ரக் வண்டியில் ஏற்றப்பட்டனர் என. ஆனால் இதுவரை என்ன நடந்தது என்று தெரியாமலே போய்விட்டது. காலம் சுழன்றது. அவர்களது வாழ்வின் ஜீவிதமாக அவர்கள் கருதிய கரு மகவாக உதித்தான். பிரியந்தனையே உருவத்தில் உரித்து வைத்திருந்த மகன் சுபாவத்திலும் அவனை ஒத்திருந்தது கிருஷ்ண வேணிக்கு அளவில்லா மகிழ்வையும் பூரிப்பையும் தந்தது. எனவே அவனுக்கு ஜீவிதன் என்று பெயரும் வைத்து விட்டாள். கடந்த காலங்களின் நினைவலைகள் தன்னைச் சுழன்று வர வேணி சமையலை முடித்துத் துப்புரவு வேலைகளையும் முடித்து குளித்துவர தந்தை யும் மறுபடி உள்நுழைந்தார். அப்பா அம்மா கூப்பிடுறா போல. ஒருக்கா என்னென்று பாருங்கோப்பா. நான் வெளிக்கிடுறன் என்றாள். ஓம் பிள்ளை நான் பார்க்கிறன் என்றவர் இஞ்சரப்பா கூப்பிட்டனியே? என்றபடி பர்வதம் மாள் அறைக்குள் நுழைந்தார் தந்தை பரமசிவத்தார்.

கணவனது இந்த திடீர் காணாமல் போதலின் பின் வேணி சும்மா இருந்து விடவில்லை. எங்கெங்கு இது சம்பந்தமாக போக வேண்டி இருந்ததோ அங்கெல்லாம் ஏறி இறங்கினாள். கணவன் மேல் வைத்த பாசம் அவள் கண்ணை மறைத்துவிட கணவனைத் தேடும் படலத் தில் கணக்கில்லாத பணத்தினை கணவனது சேமிப்பிலி ருந்து வாரி இறைத்தாள். ஆனால் இன்றுவரை முடிவு பூச்சியமாகியே போனது. நியாயம் நீதி கேட்கப் போன இடங்களிலெல்லாம் இவள் ஒரு சாமானியப் பெண் என ஓரங்கட்டப்பட்டாள்.

காவல் நிலையத்தில் இவள் கொடுத்த புகார்கள் கணக்கெடுக்காமல் கிடப்பில் போடப்பட்டன. துவண்டு விடவில்லை அவள். இதுபோலத் தானே எத்தனையோ

> **கிருஷ்ணவேணி இன்று யாழ்ப்பாணத்தில் பெயர் சொல் லும்படியான பெண் வக்கீல்களில் ஒருத்தி. அவளது வாதத்தில் இன்று வழக்குகள் நிறையவே நியாயம் பெறுகின்றன.**

பெண்கள் நியாயம் கிடைக்காமல் வாடிக் கொண்டி ருக்கிறார்கள் என்று நினைத்தாள். சமூகத்தில் தனக் கென்று ஓர் அந்தஸ்து வேண்டும். தன்சொல்லை இச் சமூகம் ஏற்க வேண்டும். சீர்திருத்த சிந்தனைகளைச் சமூகத்தில் கொண்டு வர வேண்டுமென்று நினைத்தாள். பதவியும் பணமும் இருந்து சாதிக்க முடியுமென்றால் தான் அவற்றைத் தேடி திட சங்கற்பம் பூண்டாள். அவளது நேர் கொண்ட பார்வை அவளை வீட்டுக்குள் பூட்டி வைக்கவில்லை. கணவனை இழந்து சிறகொடிந்த பறவையாக அவள் இருந்த போதும் புரட்சிகர சிந்தனைகள் அவளைத் தூக்கி நிறுத்தின. மன வைராக்கியமும் சமூக சிந்தனையும் அவளுக்குப் பக்கத் துணையாகி நின்றன. இன்று கிருஷ்ணவேணி ஓர் சமூக அந்தஸ்து மிக்கவளாக மாறித்தான் போனாள். அப்பா... எல்லாம் எடுத்து வைச் சிட்டன். நீங்க ... பார்த்துக் கொண்டு இருங்கோ. நான் 3 மணிக்கெல்லாம் வந்துடுவேன். சரியோ எனக் கூறிக் கொண்டவள் தனது கைப்பையை மாட்டிக் கொண்டு தனது கையில் வைத்திருந்த திறப்பினைக் கொண்டு கார் கதவினைத் திறந்து ஓட்டுனர் இருக்கையில் அமர்ந்து கொண்டு காரை இயக்கினாள்.

அவள் பக்கத்து இருக்கையில் அவளது கறுத்த கோட் டும் பக்கத்தில் ஸ்ரீலங்கன் பீனல் கோட் என்னும் சட்டப் புத்தகமும் கதை பேசிக் கொண்டன. ஆம் கிருஷ்ணவேணி இன்று யாழ்ப்பாணத்தில் பெயர் சொல்லும்படியான பெண் வக்கீல்களில் ஒருத்தி. அவளது வாதத்தில் இன்று வழக்கு கள் நிறையவே நியாயம் பெறுகின்றன. சிறந்த பெண் ணிய வாதியும் ஓர் சீர்திருத்த எழுத்தாளருமாக அவளது சேவை தொடர்கின்றது.

அவளது அல்டோகர் உறுமிக் கொண்டு கேற்றை விட்டுப் புறப்பட்டது. வானொலி வழியே 'மனதில் உறுதி வேண்டும் வாக்கினிலே இனிமை வேண் டும்' என்கிற பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. முறிந்த போதும் விரிந்த சிறகு கொண்ட ஓர் பெண் புறா தீர்க்கமாகப் பறக்கக் கிளம்பியது போலிருந்தது அவளது தோற்றம்.

**யாழ். ஸ்ரீநிலவன்**



ப்ரியமதா பயஸ்

# ஏன் நம்பிக்கையை இழக்கக் கூடாது?

இது ஒரு விஞ்ஞானப் பரீட்சையின் அதி சயிக்கத்தக்க முடிவு ,1950ஆம் ஆண்டு கார்ட் ரிச்டர் என்பவர் எலிகளுக்கு எவ்வளவு நேரம் நீருக்குள் மூழ்கியவாறு உயிரைதக்கவைத்துக் கொள்ள முடியும் என்பதை அறிந்துகொள்ள பயங்கரமானபரிசோதனைஒன்றைமேற்கொண்டார்.

முக்கால்வாசிக்கு நீரால் நிரப்பப்பட்ட சாடிகளில் 12 எலிகளை முற்றாக மூழ்குவதற்கு விட்டுவிட்டார். இதில் இன்னும் பயங்கரம் என்னவென்றால், சாடிகளின் விட்டம் பெரிதாக இருந்ததால், எலிகளால் சாடிச்சுவரைக்கூட பற்றிக்கொண்டு மேலே வந்து தப்பிக்க வழியேதும் இருக்கவில்லை . கிட்டத்தட்ட 15 நிமிடங்கள் வரை அந்த எலிகள் படாதபாடுபட்டு விட்டன. உயிரைக்கையில் பிடித்துக்கொண்டு இதோ பிரிந்துவிடும் அதோ பிரிந்துவிடும் என்றிருந்த நிலையில், அந்த எலிகள் அனைத்தும் சாடிகளிலிருந்து அப்புறப்படுத்தப்பட்டன.

ஒருவாறு பரிசோதனை முடிந்துவிட்டது என்று நினைத்தால் அங்கு தான் ஒரு திருப்பம்,எலிகள் அதே கொடூர பரிசோதனைக்கு மீண்டும் தயார் படுத்தப்பட்டன. பரிசோதனையும் தொடங்கியது. ஆனால் இந்தத்தடவை ஒரு ஆச்சரியம் நிகழ்ந்தது. முன்னர் 15 நிமிடங்கள் தாக்குப்பிடித்த எலிகள், இப்போது 10 நிமிடங்கள் , இல்லை 5 நிமிடங்கள், இல்லவே இல்லை. கிட்டத்தட்ட 60 மணித்தியாலங்கள் வரை அவற்றால் மூழ்கியபடியே உயிரை தக்கவைத்துக்கொண்டிருக்க முடியுமாயிருந்தது. இது முன்னைய சந்தர்ப்பத்தை விட 240 மடங்கு அதிகம். அவற்றில் ஒரு எலி, 81 மணித்தியாலங்கள் நீருக்குள் மூழ்கியபடியே உயிரோடிருந்தது.

இதிலிருந்து, நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பாடத்திற்கு வருவோம். முதல் பரிசோதனையில் 15 நிமிடங்கள் மாத்திரமே தாக்குப்பிடிக்க கூடியதாய் இருந்தமைக்கு காரணம், ஆரம்பத்தில் அந்த எலிகளுக்கு தாம் பிழைப்போம் என்ற நம்பிக்கை துளியளவும் இருக்கவில்லை. எப்படியும் பிழைக் கப்போவதில்லை. இனி உயிரோடிருந்து என்ன பயன் என்ற நம்பிக்கையையே இழந்துவிட்ட தன்மைதான். அதன்பிறகுதான் அவை நீரைவிட்டும் வெளியே அகற்றப்பட்டன. நீரை விட்டும் அகற்றப் பட்டதால், அவைகளுக்கு நாம் எப்படியாவது காப்பாற்றப்பட்டுவிடுவோம், உயிர்வாழும் சந்தர்ப்பம் இன்னும் இருக்கின்றது என்ற நம்பிக்கை ஏற்பட் டது. அந்த நம்பிக்கைதான் இரண்டாவது தடவை, அவை 60 மணித்தியாலங்கள் வரை நீருக்குள்ளேயே மூழ்கியவாறு போராடக்கூடிய சக்தியை வழங்கியது.

ஆகவேதான், ஒருபோதும நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. இந்த எலிகள் உயிராபத்தில் இருந்த போதும் கூட நம்பிக்கையைக்கைவிட வில்லை. அந்த நம்பிக்கை தான், சாத்தியமே இல்லை என்று எண்ணிக்கொண்டிருந்த விடயம், சாத்தியமாக காரணமாய் அமைந்தது. ஆகவேதான் பகுத்தறிவுள்ள மனிதர்கள் நாம், உயர்வான படித்தரங்களை அடைய உதவியாய் இருக்கும் இந்த நம்பிக்கையை இழந்துவிடக்கூடாது. இது நாம் எலியிடமிருந்து கற்றுக்கொண்ட பாடம்.

# மறுக்கமுடியாத உண்மைகள்

3 நாள்களுக்கு மேல் ஒருவர் மீது கோபம் என்பது சாத்தி யமற்றது. ஒருவேளை 3 நாள்களுக்கு மேல் கோபம் நீடித்தால், அது அவர்கள் மீது அன்பு இல்லை என்பதை வெளிக்காட்டும்.

உண்மையான அன்பை ஒருவர் உங்கள் மீது கொண்டிருந்தால், உங்களது வலியை உங்கள் கண்களைக் கொண்டே அறிந்து கொள்வார்கள். என்ன தான் நீங்கள் வெளியே போலி சிரிப்பை மேற்கொண்டாலும் அறிவார்கள்.

ஆண் மூளை, பெண் மூளை என்று இரு வேறு மூளைகள் உள்ளன என்று மூளையைப் பற்றிய கட்டுக்கதை ஒன்று உள்ளது. உண்மையில் அப்படி ஏதும் இல்லை.

சிறு வயதில் ஆண்களை விட பெண்கள் மிகவும் வேக மாக வாக்கியம் அமைத்துப் பேசுவார்கள். அதனால் தான் பெண்கள் அதிகமாக பேசுகிறார்கள்.

முத்தம் கொடுத்தால், வாழைப்பழம் அல்லது சாக்லேட் சாப்பிட்டால் மற்றும் சூயிங்கம் மென்றால் நோயெதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என்பது தெரியுமா? ஆனால் இது உண்மையே. இனிப்புக்களையும், சாக்லேட்டுக்களையும் அதிகம் விரும்பி சாப்பிடுபவர்கள் மகிழ்ச்சியானவர்களாகவும், வெளிப்படையாக பேசும் சுபாவம் உள்ளவர்களாகவும் இருப்பார்கள்.

ஒருவர் தனியாக இருக்கும் போது, சந்தோசமான தம்பதி களையும், காதலில் விழுந்த பின் சந்தோசமான தனிமை யையும் காணக்கூடும் என மனோதத்துவ ஆய்வு ஒன்று கூறுகிறது.



ஒரு சராசரி மனிதன் ஒரு நாளைக்கு 3,000 சிந்தனைக ளைக் கொண்டிருப்பான்.

உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும் மற்றொரு வழி குளிக்கும் போது பாட்டு பாடுவது. உண்மையில் இவ்வாறு செய்யும் போது, மன அழுத்தம், இரத்த அழுத்தம் போன்றவை குறைந்து, மனநிலை மேம்படும்.

# வாழ்க்கை பற்றிய சோகமான உண்மைகள்

1.நமக்கும் வயதாகும்.


2.கை கால்கள் நோகும்.

3.எவ்வளவு பணம் இருந்தாலும் யாரிடமும் வலிகளையோ வேதனை களையோ துளி அளவு கூட மாற்றி விட முடியாது.

4.கஷ்டங்கள் வரும்போது தான் கடவுள் நினைப்பு வரும்.

5.பணநெருக்கடி வரும் போது தான் வீணாக செலவழித்தது ஞாபகம் வரும்

6.மருத்துவமனையில் இருக்கும் போது தான் ஆரோக்கியத்தை பேணா தது புரியும்.



7.அழும்போது தான் ஆறுதல்சொல்லஆள்களை சம்பாதிக்கவில்லை என்பது அறியவரும்.

8.கட்டிலில் முடங்கும் போது தான் பெரிய வீட்டைக் கட்டி உழைப்பை வீணாக் கியது புரியும்.

9.நல்லது செய்தது திரும்ப வராவிட்டாலும் நாம் செய்தகெட்டவைகண்டிப்பாக திரும்பி வந்து அடிக்கும்.

10.மரணம் வந்தே தீரும்.

11. பல ஆயிரம் விலை கொடுத்துவாங்கும்இருசக்கர வாகனங்களும் ,பல லட்சம் கொடுத்து வாங்கும் நான்கு சக்கர வாகனங்களும் சில ரூபா மதிப்புள்ள வால்வு டியூப் இல்லை என்றால் ஓடாது .

12. ஒரு குடம் தண்ணீரை தலையில் தாங்குவது கடி னம் .ஒரு சொம்பு தண் ணீரை சடாரென்று முகத்தில் அடித்தால் வலிக்குமளவுக்கு வலிமை இருக்கும், ஆனால் கொட்டோ கொட்டென்று கொட்டி தீர்த்து ,தண்ணீர் காடாகி ஆறு பெருக்கெடுத்து ஊரையே நாசம் பண்ணி அணையை உடைக்குமளவுக்கு ஆக்ரோஷமான தண்ணீர் காற்று போல மேகம் போல பஞ்சு மிட்டாய் போல மேலே மேகமாக உலவும் பொழுது ஆச்சரியமாகவும் ஏற்றுக்கொள்ளமுடி யாமலும் இருக்கும்.



# உறவுகளுக்குள் உள்ள மனக்கசப்பைத் தீர்த்துக்கொள்வது எப்படி?

சமாதானம் செய்து தொடரும் உறவுகள் என் றென்றும் நிலைப்பதில்லை. அதை உணர்ந்து தொடருவதும் இல்லை .

ஒரு உறவு தொடரவேண்டும் என மனதில் நினைத்துவிட்டால், யார்மீது தவறிருந்தாலும், மன்னிப்பு கேட்டு உறவை தொடருவது சரியானதாக இருக்கும்.

அந்த குற்ற உணர்ச்சியில், நன்றியிலும் அந்த உறவு எம்மைப் புரிந்து அதன் பின் விலகுவ தில்லை தவறிழைப்பதுமில்லை.

முன்சி பஸ்றி




# தமிழர்களின் தற்காப்பே சிலம்பாட்டம்

சிலம்பம் என்பது தமிழர் தற்காப்புக் கலை மற்றும் தமிழர்களின் வீர விளையாட்டு ஆகும். வழக்கில் இந்த விளையாட்டைக் கம்பு சுற்றுதல் என்றும் கூறுவர்.

சிலம்பாட்டத்தில் தடியைக் கையாளும் முறை, கால் அசைவுகள், உடல் அசைவுகள் மூலம் தம்மைப் பாதுகாத்துக் கொள்ளுதல் எனப் பல கூறுகளைக்கொண்ட விரிவான தற்காப்புக் கலை ஆகும்.

சிலம்பாட்டத்தில் எதிராளி வீசும் கம்பைத் தடுத்தல், எதிராளியின் உடலில் சிலம்புக்கம்பினால் தொடுதல் (தொடு புள்ளி) போன்றன அடிப்படையாகக் கொள்ளப்படுகின்றது. சிலம்பாட்டத்தைக் கற்றுக்கொள்ளக் குறைந்தது ஆறு மாத காலம் தேவை.

சிலம்பாட்டம் ஆடுவதற்குக் குறைந்தது இருவர் வேண்டும். நன்கு பயிற்சி பெற்ற ஆட்டக்காரர்களே சிலம்பாட்டப் போட்டிகளில் விளையாடுவர்.

தற்காலத்தில் ஆண்கள், பெண்கள் என்று இருபாலரும் சிலம்பாட்டத்தைக் கற்று விளையாடி வருகின்றனர். திருவிழா, கோயில் விழாக்கள் மற்றும் ஊர்வலங்களில் சிலம்பாட்டம் தவறாது இடம்பெறும்.

இலங்கையை விட இந்தியாவிலேயே இந்தக் கலை அதிக முக்கியத்துவம் பெற்றதாகக் காணப்படுகின்றது. இருப்பினும் இலங்கையிலும் இக்கலை பலர் மத்தியில் காணப்படுகின்றது. மேலும், இதற்கென சிலம்பாட்டக் கழகங்கள் கூட காணப்படுகின்றன.

மக்கள் தம்மை சிங்கம், புலி போன்ற விலங்குகளிடம் இருந்து காத்துக்கொள்ளக் கையாண்ட முறையே சிலம்பம் எனப்படும். தமது கைகளில் எப்போதும் இருக்கக் கூடிய சிறிய ஆயுதங்களான கம்பு (தடி), சிறு கத்தி, கோடரி போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தி விலங்குகளிடம் இருந்து தற்காத்துக்கொள்ள இந்தக் கலையைப் பயன்படுத்தினர் என்று கூறப்படுகின்றது.

தமிழர்கள் ஆயுதம் ஏந்திப் போராட ஆரம்பித்த காலத்தில் முதலில் எடுத்தது கம்பு எனப்படும் ஆயுதமே ஆகும். இதுவே பின்னர் சிலம்புக் கலையாக வளர்ச்சி பெற்றது. ஆதிகாலத்தில் மனிதர்கள் சண்டை செய்ய ஈட்டி, கத்தி, வேல், வாள், கம்பு போன்ற பலவிதமான ஆயுதங்களைப் பயன்படுத்தினர். அவற்றுள் மிகவும் பழைமை வாய்ந்த ஆயுதம் கம்பு எனப்படும் 'சிலம்பு' ஆகும். இது இந்தியாவில் தோற்றம் பெற்றதாகும்.

சிலம்பச் சுவடிகளில் குறிப்பிடப்படும் தொன்மையான சிலம்பச்சுவடு மற்றும் அடி வரிசைகள், தமிழக மூவேந்தர்களின் ஆட்சி முடிவுற்று, தமிழகம் அந்நியர்களுக்கு அடிமைப்பட்ட பின் கால மாற்றத்தால் அதன் பெயர்களும் ஆடும் முறைகளும் சிறு மாற்றமடைந்தன. வடக்கன் களரி, தெக்கன் களரி, சுவடு அடி முறை, சிரமம், சைலாத், நெடுங்கம்பு என்ற பல வகைகள் காணப்படுகின்றன.

சிலம்பக்கலை பற்றிய அகழ்வாய்வுச் சான்றுகள் மிகத் தொன்மையானவை. கி.மு. 2000 இற்கும் முற்பட்ட ஆதிச்ச நல்லூர் அகழ்வாய்வில், 32 வகையான சிலம்ப ஆயுதங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன. இவை சென்னை அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனில் உள்ள அருங்காட்சியகம் ஒன்றில் எகிப்திய போர் வீரர்கள் பயன்படுத்திய நான்கு அடி நீளமுள்ள கம்பு வைக்கப்பட்டுள்ளது. அவர்கள் அந்தக் கம்பைப் பயன்படுத்திய முறை சிலம்பத்தை ஒத்திருப்பதால் தமிழக எகிப்திய கலாசாரப் பரிமாற்றத்தின் ஒரு பகுதியாக சிலம்பக்கலையும் பரவியதாகக் கருதப்படுகின்றது.

சிலம்பம் என்ற பெயர் சிலம்பு என்ற வார்த்தையில் இருந்து உருவானது. சிலம்பு என்பதற்கு ஒலித்தல் என்று பொருள். சிலம்பம் ஆடும்போது உருவாகும் ஒலிகளைக் குறிக்கும் விதமாக சிலம்பம் என்ற பெயர் சூட்டப்பட்டது எனச் சொல்லப்படுகின்றது.

'சிலம்பம்' என்ற சொல் 'சிலம்பல்' என்ற வினையின் அடியாகப் பிறந்தது. மலைப் பகுதிகளில் அருவி விழும் ஓசை, பறவைகளின் கீச்சொலி, மரங்களின் இலைகள் காற்றில் அசையும் ஓசை, விலங்குகளின் இரைச்சல் போன்ற பல ஓசைகள் ஒலித்துக்கொண்டே இருப்பதால் மலைக்குச் 'சிலம்பம்' என்ற மற்றொரு பெயரும் உண்டு. எனவே, மலை நிலக் (குறிஞ்சி) கடவுளான முருகனுக்கும் 'சிலம்பன்' என்ற பெயருண்டு.



கம்பு சுழலும்போது ஏற்படும் ஓசை மற்றும் ஆயுதங்கள் ஒன்றோடொன்று மோதும் ஓசை போன்று இருப்பதால், தமிழரின் தற்காப்புக் கலைக்கு 'சிலம்பம்' என்ற பெயர் ஏற்பட்டது.

சிலம்பம் சுமார் 5,000 ஆண்டுகள் பழைமையானதாகக் கருதப்படுகின்றது. 2,500 ஆண்டுகளுக்கு முன்வாழ்ந்த அகத்திய முனிவர் 64 கலைகளில் ஒன்றாகச் சிலம்பத்தைக் குறிப்பிடுகின்றார். சிலம்பம் பற்றி தமிழ் இலக்கியத்தில், குறிப்பாக சிலப்பதிகாரத்தில் சிலம்பம் ஆடுவதற்கான கம்பு, கத்தி போன்றவை ஒரு கடையில் விற்கப்படுகின்றன எனவும், அவற்றை வெளிநாட்டினர் மிக ஆர்வமுடன் வாங்கிச் செல்கின்றனர் எனவும் குறிப்புகள் உள்ளன.

திருக்குறளில் 'கோல்' என்ற பெயரிலும், கலிங்கத்துப்பரணியில், 'வீசு தண்டிடை கூர்மழு ஒக்குமே' என்ற வரிகள் மூலம், 'தண்டு' என்ற பெயரிலும் கம்பு குறிப்பிடப்பட்டுள்ளது. திருவிளையாடல் புராணத்திலும், சிலம்ப விளையாட்டு பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

கி.பி. 15ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த 'பதார்த்த குண சிந்தாமணி' என்ற நூலில் சிலம்பம் விளையாடுவதால் வாதம், பித்தம், கபம் ஆகியவை நீங்கும் எனக் கூறப்பட்டுள்ளது. இவைகளைத் தவிர கம்பு சூத்திரம், குறுந்தடி சிலம்பம், நடசாரி போன்ற ஓலைச்சுவடிகளும் உள்ளன.

இந்தச் சுவடிகளில் உள்ள பாடல்கள் அகத்திய முனிவர் சிலம்பம் பயின்ற பின்னரே யோகக் கலை, மருத்துவம் போன்ற கலைகளைப் பயின்றார் எனத் தெரிவிக்கின்றன.



சிலம்பத்தில் ஒத்தைச் சுவடு, பிரிவுச் சுவடு, இரெட்டை வீச்சு, பூட்டுப் பிரிவு, மடு சிரமம், எடுத்தெறிதல், நெடுங்கம்படி, கோபட்டா, வாள் வீச்சு, பீச்சுவா, சுருள்பட்டா, லேசம், செண்டாயுதம், வளரி, இடிகட்டை, கட்டாரி, கண்டக்கோடாரி, வீச்சரிவாள், வெட்டரிவாள், கல்துணி போன்ற ஆயுதப்பிரிவுகளும் உள்ளன.


இலங்கை, இந்தியா, மலேசியா, பிரான்ஸ், கனடா போன்ற நாடுகளிலும் சிலம்பம் பயிற்றுவிக்கப்படுகின்றது.

காலைக்கதிர் Kalaikkathir

# 2023 இல் வத்திக்கானில் நடைபெறவிருக்கும் 16ஆவது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றம்

## கத்தோலிக்கத் திருச்சபையில் மாற்றத்தைக் கொண்டு வரும் என எதிர்பார்ப்பு
## உலகின் சகல மறைமாவட்டங்களிலும் முதனிலை தயாரிப்புப் பணி மும்மரம்

**- கலாநிதி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் -**
**(ஊடக வருகை விரிவுரையாளர் - இலங்கை திறந்த பல்கலைக்கழகம், ஓய்வு நிலை ஊடக வருகை விரிவுரையாளர்- யாழ் பல்கலைக்கழகம்; இயக்குநர் - பிசப் சவுந்தரம் மீடியா சென்ரர்)**



2023 ஆண்டு வத்திக்கானில் நடைபெறவிருக்கும் 16ஆவது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றத்தின் தனிச் சிறப்பும் சிறப்பு அம்சங்களும் என்ற தலைப்பில் இந்தியா தமிழ் நாட்டைச் சோந்த தந்தை தஞ்சை டோமி அவர்கள் தயாரித்த மாமன்றத் தயாரிப்புக் கையேட்டுச் சுருக்கம் என்ற ஆக்கத்தைத் ஆதாரமாகக் கொண்டு இவ்வாக்கம் எழுதப்பட்டது.

**ஒருங்கிணைந்த பயணம் - ஒன்றிப்பு - பங்கேற்பு - நற்செய்தி அறிவிப்பு**

2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் வத்திக்கானில் நடைபெறவிருக்கும் உலக ஆயர்கள் சாதாரண மாமன்றத்திற்கான ஆயத்த ஏற்பாடாக உலகின் அனைத்து மறைமாவட்டங்களிலும் 2021 ஒக்ரோபர் மாதம் 17 ஆம் திகதியிலிருந்து முதல் நிலை தயாரிப்புப் பணிகள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

இந்த 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றத்தின் தலைப்பு, இம்மாமன்றம் எந்த இலக்குடன், எப்படி தயாரிக்கப்பட்டு 2023ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்தில் நிறைவுபெற உள்ளது, இம்மாமன்றத்தின் தனிச் சிறப்புக்கள் எவை என்பன பற்றி இங்கு நோக்குவோம்.

'இணைந்து பயணிக்கும் திருச்சபை - ஒன்றிப்பு - பங்கேற்பு - நற்செய்தி அறிவிப்பு' என்ற மையக் கருத்துடன் இந்த 16ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெறவுள்ளது.

இந்த உலக ஆயர்கள் மாமன்றம் (01) கனவுகளை விதைத்தல் (02) இணைந்து பயணித்தல் ஆகிய இரண்டு அடித்தளங்களைக் கொண்டு நடைபெறவுள்ளது.

**(01) கனவுகளை விதைத்தல்**

கனவுகளை விதைத்தல் என்பது மக்களுடைய உள்ளங்களில் - இளைஞர், யுவதிகளின் - உள்ளங்களில் ஆழமான எதிர்காலக் கனவுகளை விதைத்து அவர்களின் உள்ளங்களில் விசுவாசத்தைப் பதித்தல் என்று புரிந்து கொள்ளலாம்.

**(02) இணைந்து பயணித்தல்**

இணைந்து பயணித்தலை அருள் நிலையினர் என அழைக்கப்படும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவிகள் ஆகியோரும் பொது நிலையினர் என அழைக்கப்படும் குழந்தைகள், இளையோர், முதியோர், ஏழை - பணக்காரர்கள், மாற்றுத்திறனாளிகள், புறந்தள்ளப்பட்டோர், அகதிகள் என்று உலகிலுள்ள அனைத்துத் தரப்பினர்களுடனும் ஏன் பிற சமயத்தினர், பிற சபையினர் அனைவருடனும் இணைந்து இயேசுவின் இறையாட்சிப் பாதையில் பயணித்தல், கனவுகளை விதைத்தல், விசுவாசத்தை ஆழப்படுத்துதல் என்று புரிந்து கொள்ளலாம். இந்த அடித்தளத்தில்தான் 16 ஆவது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றம் நடைபெறப்போகிறது.

**இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் பற்றிய அறிவு**

உலக ஆயர்கள் மாமன்றம் பற்றி புரிந்து கொள்ள இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் பற்றிய அறிவு தேவை. கத்தோலிக்கத் திருச்சபை வரலாற்றில் ஒரு மாபெரும் திருப்பத்தை - பெரிய மாற்றத்தை - புதிய பார்வையை,புதிய சிந்தனையை - புதிய வழிமுறைகளை - வகுத்துத் தந்தது இரண்டாம் வத்திக்கான் சங்கம்.

இந்த இரண்டாம் வத்திக்கான் சங்கம் 1962இல் தொடங்கி 1965 வரை நீடை காலம் நடைபெற்ற ஒரு மாபெரும் திருச்சங்கமாகும்.

இரண்டாம் வத்திக்கான் சங்கத்தில் கலந்து கொண்டவர்கள் இச்சங்கத்தின் தீர்மானங்கள், வரைவு, முடிவுகள் நடைமுறைப்படுத்தப்பட இது போன்ற மாமன்றங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டும் என்று உணர்ந்தனர். இரண்டாம் வத்திக்கான் சங்கத்தைப் போல அடிக்கடி ஒரு பெரிய சங்கத்தை கூட்டுவது இயலாத காரியம் என்பதால் உலக ஆயர்களின் பிரதிநிதிகள் அவ்வப்போது கூடி விவாதிப்பதற்கான அரங்கம் வேண்டும், அது ஒரு நிரந்தரத்தன்மை கொண்டதாக இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறையாவது உலக ஆயர்கள் மாமன்றத்தைக் கூட்டவேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டது. அந்த அடிப்படையில்தான் ஆயர்கள் மாமன்றங்கள் நடைபெறுகின்றன.


**இந்த ஆயர்கள் மாமன்றத்தின் நோக்கங்கள் என்ன?**

முதலாவது - இறை நம்பிக்கையை வளர்த்தல். இறைமக்களிடையே இறை நம்பிக்கையை வளர்த்து ஆழப்படுத்துவது. விசுவாசிகளை இறையச்சம், இறையுணர்வு, இறைநம்பிக்கை மிக்கவர்களாக உருவாக்குவது. அதைப் பற்றி விவாதிக்கவும், சிந்திக்கவும், அதற்கான வழிமுறைகளை வரைந்து வழங்கவும், வகுத்து வழங்கவும் முனைவது.

இரண்டாவது - அறநெறிகளை , ஒழுக்க நெறிகளை பாதுகாத்தல், காலத்திற்கேற்ப அவைகளைப் புதுப்பித்து மேம்படுத்துதல்.

மூன்றாவது - திருச்சபையின் ஒழுங்குகள், சட்ட திட்டங்களின் விதிமுறைகளை பாதுகாத்தல், காலங்களுக்குகேற்ப அவைகளை புதுப்பித்தல்.

நான்காவது - உலகிற்கு செவிமடுத்தல். குறிப்பாக காலத்தின் அறிகுறிகளை துளாவியறிதல், அதற்கேற்ப திருச்சபை தன்னைப் புதுப்பித்துக் கொள்வதும், உலகிற்கும் வழிகாட்டுவதும் ஆகும்.




இந்த நான்கு நோக்கங்களுடன் உலக ஆயர் கள் மாமன்றங்கள் நடைபெற்று வருகின்றன.

இந்த உலக ஆயர்கள் மாமன்றங்களில் மூன்று வகைகள் உள்ளன.

01. சாதாரண ஆயர்கள் மாமன்றம். இதுவரை இரண்டாம் வத்திக்கான் சங்கத்திற்குப்பின் 15 ஆயர்கள் மாமன்றங்கள் நடைபெற்றுள்ளன.

02.தேவைக்கேற்ப அசாதாரண ஆயர்கள் மாமன்றம் நடைபெறும். இதுவரை மூன்று அசாதாரண ஆயர்கள் மாமன்றங்கள் நடைபெற்றுள்ளன.

03.சிறப்பு ஆயர்களின் மாமன்றம். இது கண்டத்தின் அளவில் பிரதேச அளவில் நடைபெறுகின்றன. அண்மையில் அன்புடன் அமேசான் என்ற மடலுக்குத் துணையாக இருந்து இலத்தீன் - அமெரிக்க நாடுகளின் ஆயர்கள் மாமன்றம் நடைபெற்றது. இதுவரை இதுபோன்ற கண்டம் அல்லது பிரதேச அளவிலான 11 ஆயர்கள் மாமன்றம் நடைபெற்றுள்ளன.

**திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் பணிக்காலத்தில்**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2013இல் திருத்தந்தையாக தேர்வு செய்யப்பட்டார். இவரது வரவு திருச்சபையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது என்றால் அது மிகையல்ல.

இவரது காலத்தில் மக்கள் திருச்சபையாக, ஏழைகளின் திருச்சபையாக, ஒதுக்கப்பட்டவர்களின் திருச்சபையாக, திருச்சபை இன்றும் மலர்ந்துள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் இந்த இறையாட்சிப் பாதையில் பயணிக்க பல சுற்றுமடல்கள், அப்போஸ்தலிக்க திருமடல்கள் எழுதி வெளியிட்டு திருச்சபையை வழி நடத்தி வருகின்றார்.

திருத்தந்தை அன்பானவராக, இரக்கமிக்கவராக, பரிவு மிக்கவராக, மக்கள் மீது தனிக்கரிசனை கொண்டவராக, அனைவரையும் ஒருங்கிணைத்து வழி நடத்துகின்றவராக, தன்னை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றார்.

இவரது பணிக்காலத்தில் மிக முக்கியமான ஆயர்கள் மாமன்றங்கள் நடந்துள்ளன. குறிப்பாக சாதாரண ஆயர்கள் மாமன்றங்கள் நடந்துள்ளன. குடும்பம் பற்றிய ஆயர்கள் மாமன்றம், இளையோர் பற்றிய ஆயர்கள் மாமன்றம் என்பன நடந்துள்ளன.

அதேபோல் ஓர் அசாதாரண ஆயர்கள் மாமன்றத்தையும் நடத்தியுள்ளார். குடும்பத்தைப் பற்றிய அசாதாரண ஆயர்கள் மாமன்றம் நடந்துள்ளது. சிறப்பு ஆயர்கள் மாமன்றம் - அமேசான் பகுதியில் பணி புரியும் ஆயர்கள் மாமன்றமும் நடந்தது.

அதன் தொடர்ச்சியாக திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சிந்தனையில் உருவான சாதாரண ஆயர்கள் மாமன்றம்தான் நடைபெறவுள்ள இந்த 16 ஆவது உலக ஆயர்கள் சாதாரண மாமன்றமாகும்.

2021 ஒக்ரோபரில் தொடங்கியுள்ள இந்த உலக ஆயர்கள் மாமன்றம் 2023 ஒக்ரோபர் மாதத்தில் நிறைவடையும்.

இம்மாமன்றத்திற்கான மையச் சிந்தனையாக இணைந்து பயணிக்கும் திருச்சபையாக ஒன்றிப்பு - பங்கேற்பு - நற்செய்தி அறிவிப்பு என்பன சேர்ந்து ஒருங்கிணைந்து நன்றாக, தோழமையுடன், நட்புறவுடன் பயணிக்கும் திருச்சபையாக நம் கத்தோலிக்க திருச்சபை மலரவேண்டும், வளரவேண்டும் என்பது அமைந்துள்ளது.

அப்படிப்பட்ட திருச்சபையில் ஒன்றிப்பு, பங்கேற்பு, தொடர்ச்சியாக நற்செய்தி அறிவிப்பு நிகழ வேண்டும். அதாவது இறையாட்சி பற்றிய செய்தியை சிந்தனையை எல்லோருக்கும் அறிவிப்பதும், வாழ்வதும் ஆகும். இந்த மையச் சிந்தனையோடும் பார்வையோடும் இந்த 16 ஆவது உலக ஆயர்கள் மாமன்றம் நடைபெற உள்ளது. மறைமாவட்ட அளவில் இம்மாமன்றங்கள் தொடங்கி நடைபெற்று வருகின்றன.

காலைக்கதிர் Kalaikkathir
கிறிஸ்தவ செய்தி இதழ்



(அடுத்த வாரம் தொடரும்)

காலைக்கதிர் Kalaikkathir

# தமது மக்களுக்காகப் பணியாற்றிய வேதநாயகனின் பணி நயப்பு இன்று

**ந.லோகதயாளன்**



யாழ். மாவட்டத்தின் முன்னாள் அரசஅதிபர்நாகலிங்கம்வேதநாயகனின் பணி நயப்பும் மணி விழா மலர் வெளியீடும் இன்று ஞாயிற்றுக்கிழமை அளவெட்டியில் இடம்பெறவுள்ளது.

வேதநாயகனின் சொந்த ஊரான அளவெட்டியில் உள்ள மகாஜன சபையின் பொ.கைலாசபதி அரங்கில் வை.சுப்பிரமணியம் தலைமையில் இந்த மலர் வெளியீட்டு விழா நடைபெறவுள்ளது.

29 ஆண்டுகால அரச சேவை நாயகனாக திகழ்ந்த - யாழ்ப்பாணம், அளவெட்டியைச் சேர்ந்த - நா.வேதநாயகன் ஆற்றிய அரச பணிக்காலம் என்பது ஆரம்பம் முதல் இறுதிவரையுமே போர்க்களத்தில் பணியாற்றிய நிலைமைதான். ஆட்சித் தரப்புடன் ஒத்துச் செயற்படாததால் தற்போதைய அரசினால் தூக்கியெறியப்பட்டார்.

தனது ஆரம்பக் கல்வியை அளவெட்டி சாந்த வித்தியாலத்தில் ஆரம்பித்தார் சிறுவன் வேதநாயகன். தரம் 3 வரையும் அங்கும், அதன்பின்னர் தரம் 8 வரையில் அருணோதயாக் கல்லூரியிலும் கற்றமையோடு, 9 முதல் க.பொ.த. உயர்தரம் வரையில் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரியிலும் கற்று பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானார்.

பல்கலைக் கழகத்தில் உயிரியல் விஞ்ஞான பட்டப்படிப்பினை 1984இல் நிறைவு செய்த நிலையில் 1985ஆம் ஆண்டு பட்டம் பெற்றார். பட்டம் பெற்ற பின் 1985 முதல் 1986 வரை பல்கலைக்கழகத்தில் பணியாற்றிய சமயம், 1986 இல் ஆசிரிய சேவையில் இணைந்து 1991ஆம் ஆண்டு வரையில் மல்லாவி மத்திய கல்லூரியில் ஆசிரியராகப் பணியாற்றினார். அதுதான் ஈழத்தில் இந்தியப் படையினர் நிலைகொண்டு போர் இடம்பெற்ற காலம்.

1991ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி அரச நிர்வாகத்தில் பணியில் இணைந்து 1991ஆம் ஆண்டு மே மாதம் 03ம் திகதிவரையில் பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சில் பயிற்சியினை நிறைவு செய்தார். இக்காலப் பகுதியில் பொது முகாமைத்துவம் மற்றும் பொது நிர்வாகம் முதுமாணி ஆகிய பட்டங்களையும் பெற்றார்.

இவ்வாறுஅவர் பயிற்சிக் காலத்தை நிறைவு செய்து வெளியேறிய அச்சமயம் 2 ஆம் கட்ட ஈழப் போர் உச்சம் பெற்றிருந்த வேளை. நெடுந்தீவு பிரதேச செயலகத்திற்கு 1991.05.04முதல் நியமிக்கப்பட்டார். அந்தக் காலத்தில் மண்டைதீவு பாலம், யாழ் கோட்டை மீதான தாக்குதல் காரணமாக முழுமையாக தகர்க்கப்பட்டிருந்தது. அதன் ஊடே பயணிக்க இரு பனை மரங்கள் மட்டுமே இணைப்பாகப் பயன்படுத்தப்பட்ட நிலையில், துவிச்சக்கர வண்டியில் சென்று குமுதினிப் படகின் மூலம் நெடுந்தீவிற்கு பயணிக்க வேண்டும். அப்போதும் ஊர்காவற்றுறையில் படையினர் நிலைகொண்டிருந்தனர்.

குறிகட்டுவானில் புலிகள், நயினாதீவில் கடற்படையினரிடம் என இரு தரப்புச் சோதனையை தாண்டியே நெடுந்தீவு பயணிக்க வேண்டும்.

இத்தனை நெருக்கடியின் ஊடாக பயணித்து நெடுந்தீவில் 5 மாதங்கள் பணியாற்றிய நிலையில் மீண்டும் தீவகம் முழுமையாக படையினரின் கட்டுப்பாட்டில் வந்தபோது சாவகச்சேரி பிரதேச செயலகத்திற்கு அவர் இடமாற்றப்பட்டார்.

பின்னர் ஊர்காவற்றுறை பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டார். 1993ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டு ஓகஸ்ட் வரையில் தெல்லிப்பழை பிரதேச செயலாளராகவும் பணியாற்றினார். இதன் பின்னர் 1996 முதல் 2002 .12.31 வரையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகப் பணியாற்றிய போதே 2003.01.01 முதல் கிளிநொச்சி மாவட்ட மேலதிக மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

அவ்வாறு மேலதிக செயலாளராக பணியாற்றிய காலத்தில் அப்போதைய அரசாங்க அதிபர் இராசநாயகம் 2007-ஆம் ஆண்டு மே மாதம் ஓய்வு பெற்றுச் சென்ற நிலையில் மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

2007முதல் கிளிநொச்சி மாவட்டச் செயலாளராகப் பணியாற்றிய காலத்தில் - இறுதி யுத்தம் காரணமாக பல நெருக்கடிகள், இடர்பாடுகள், உயிர் ஆபத்துக்களை கடந்து பணியாற்ற வேண்டியிருந்தது.

அதில் இருந்து தப்பி வவுனியா சென்றும் பணியாற்றியபோது, 2009ஆம் ஆண்டு ஜூலை மாதம் வரையில் பணியாற்றியபோதே இறுதி யுத்த காலத்தில் ஆற்றிய சேவைகள் தொடர்பான விசாரணையின் பெயரில் 2009.07.29 அன்று கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டு போதிய விசாரணையோ எந்தவிதமான குற்றச் சாட்டுகளோ இல்லாது தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 2010 ஜனவரி 19ல் விடுவிக்கப்பட்டு 2010.01.20 தொடக்கம் திரும்பவும் அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்டார். அவ்வாறு அமைச்சில் பணிக்கு அமர்த்தப்பட்ட நிலையில் 2010ஆம் ஆண்டு ஜூலை மாதம் மிகவும் நெருக்கடியான காலத்தில் முல்லைத்தீவு மாவட்டச் செயலாளராக நியமிக்கப்பட்டார். பின்னர் 2011 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மன்னார் மாவட்டத்திற்கு மாற்றப்பட்டார். அதே ஆண்டு நவம்பர் மாதம் மீளவும் முல்லைத்தீவிற்கே இடமாற்றப்படுகின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்தில் பணியாற்றிய காலத்திலேயே 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி பலரின் போட்டியின் மத்தியிலும் யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு - அதாவது தனது சொந்த மாவட்டத்துக்கு - செயலாளராகத் தெரிவாகி பதவியேற்றார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கு நியமிக்கப்பட்டமை முதல் மாவட்டத்தின் மூலை முடுக்கெல்லாம் என்ன தேவை என்பதனை நன்கு அறிந்து அதே சிந்தனையாக இருந்தார். உறங்கும் நேரம் தவிர்ந்து ஏனைய நேரம் முழுமையாக சதா மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பில் சிந்தித்த ஒருவர் என்ற பட்டியலில் இவரிடம் பிடித்தார்.

யாழ் மாவட்டத்தில் பணியாற்றிய சமயம் அரசியல் கட்சிகளை மட்டுமல்ல, சக பணியாளர்களில் கூட ஒரு சிலரை பகைக்க வேண்டி நேரும் எனத் தெரிந்தும் பொதுமக்கள் கோரும் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு முன்னுரிமை அளித்தமையினால் சிலர் பகையை எதிர் கொண்டார். அவர் நினைத்திருந்தால் அதிகாரிகளையும் அரசியல்வாதிகளையும் பகைக்காது சென்றிருக்கலாம். லஞ்சம் கோரியோரை இடமாற்றாதிருந்திருந்தால் , வேண்டுமென்றே மறுத்த வீட்டுத் திட்டத்தை நேரில் தலையிட்டு வழங்காதிருந்திருந்தால், அரசியல்வாதிகளைத் திருப்திப்படுத்த பொருத்தமற்ற திட்டத்தை நடைமுறைப்படுத்த தலையாட்டியிருந்திருந்தால், எஞ்சிய 3 மாதங்களும் பதவியில் நீடித்திருக்கவும் முடியும். சக உத்தியோகத்தர்களிடமும் நன்றிபாராட்டியிருக்கவும் முடியும்.

இதற்கும் அப்பால். எந்த மக்களும், எப்பவும் மாவட்டச் செயலாளரை சந்திக்க முடியும் என்ற நிலைமையும் அதிகம் உருவானது இவரின் காலத்தில்தான். இதே நேரம் சில அரசியல் கட்சிகள், அல்லது எதிர்பார்ப்பில் இருந்தோர், தமக்கு இவர் இசையவில்லை என்பதனால் இவர் மீது அரசியல் முத்திரையினையும் குத்தத் தவறவில்லை. இத்தனைக்கும் தாக்குப் பிடித்த நிலையிலேயே மாவட்டச் செயலாளர் பதவியில் இருந்து விடைபெற்றார்.

இவரது சேவைக் காலத்தில் அரச சேவை மட்டுமன்றி உதவி என நாடி வந்தவர்களிற்கு வாரி வழங்கிய இவரின் தனிப்பட்ட உதவிகள் இன்றும் தொடர்கின்றன. இதில் க.பொ.த. உயர்தர மாணவர்கள் 15 பேருக்கான மாதாந்தம் தலா 3 ஆயிரம் ரூபா உதவி, அதேபோன்று பல்கலைக் கழகத்திற்கு தேர்வான 150 மாணவர்களிற்கு உதவி ஏற்பாடு என்பன குறிப்பிடக்கூடியவையாகும்.

இவ்வாறு சேவையாற்றிய நிர்வாக அதிகாரி அரசியல் ரீதியில் பழிவாங்கப்பட்டு, ஓய்வு பெறுவதற்கு மூன்று மாதங்களே இருக்கும் நிலையில், தற்போதைய அரசினால் பதவியிலிருந்து தூக்கியெறியப்பட்டமை அப்பட்ட மான அரசியல் ஆதிக்க வெளிப்பாடாகும்.

ஆனால் அவர் சேவையாற்றிய மக்கள் அவரை மறக்கவில்லை என்பதுதான் உண்மை.

# மீண்டும் முடக்கப்படுமா நாடு? மக்கள் கைகளிலேயே முடிவு

## சுகாதார அமைச்சர் கெஹலிய தெரிவிப்பு

கொரோனா நோயைக் கட்டுப் படுத்த அரசு அனைத்து நடவடிக் கைகளையும் எடுத்துள்ளது. அத னைத் தொடர்ந்தும் முடிந்தவரை முன்னெடுப்போம் என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக் வெல தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா நோயைக் கட்டுப்படுத்த அரசு மிக உயர்ந்த நடவடிக்கைகளை எடுக்கும்போது மக்கள் தங்களின் உரிய பங்க ளிப்பை வழங்க வேண்டும். அவர் கள் வழங்குகின்ற பங்களிப்புக் கமைய கொரோனாத் தொற்று பரவல் கட்டுப்ப டுத்தப்படும்.

கொரோனா கட்டுப்பாட்டுக்கு மக்கள் வழங்கும் பங்களிப்பைப் பொறுத்தே பய ணக் கட்டுப்பாடுகள் அல்லது நாடு முடக் கம் குறித்து தீர்மானிக்கப்படும்.

மக்கள் அதற்கு எதிர்மறையாக நடந்து



கொண்டால், மீண்டும் பயணக் கட்டுப் பாடு அல்லது நாட்டை முடக்குதல் போன்றதொரு சூழலை எதிர்கொள்ள நேரிடலாம்.

அத்துடன், இதுவரை வெற்றிகரமாக தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டிருந்தாலும், சுகாதார வழி காட்டல்களுக்கு ஏற்ப மக்கள் வாழும் சூழலை தயார் செய்ய வேண்டும் - என்றார்.

# வவுனியாவில் ஓட்டோ சாரதி மீது இராணுவத்தினர் கடும் தாக்குதல்

## பொதுமக்கள் முற்றுகையால் பதற்றம்



(வவுனியா நிருபர்)

வவுனியாவில் ஓட்டோ சாரதி ஒருவர் மீது இராணுவத்தினர் கடும் தாக்குதல் மேற்கொண்டனர் எனத் தெரிவித்து இரா ணுவ வாகனம் பொது மக்களால் முற்று கையிடப்பட்டது. வவுனியா, பண்டாரிக் குளம் பகுதியில் வெள்ளி இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, ரயில் நிலைய வீதியூடாக ஒட்டோ ஒன்று பயணித்தபோது இரா ணுவ கப் ரக வாகனம் ஒன்றை குறித்த ஓட்டோ முந்திச் செல்ல முற்பட்டபோது இராணுவ வாகனத்தின் சாரதிக்கும், ஓட்டோ சாரதிக்கும் இடையில் வாய்த் தர்க்கம் ஏற்பட்டுள்ளதுடன், ஓட்டோ இரா ணுவ வாகனத்தை முந்திச் சென்றுள் ளது.

இதையடுத்து வவுனியா - பண்டாரிக் குளம் வீதியில் திரும்பிய ஓட்டோவை வழிமறித்த குறித்த இராணுவகப் ரக வாகனத்தில் இருந்த இராணுவத்தினர் ஓட்டோ சாரதி மீது கடும் தாக்குதல் நடத்தி யுள்ளனர். அதன் பின்னர் இராணுவ வாகனத்தைப் பின் தொடர்ந்து சென்ற ஓட்டோ சாரதி பண்டாரிக்குளம் பகுதியில் இராணுவ வாகனத்தை வழிமறித்து தன் மீது தாக்குதல் நடத்தியமைக்கான கார ணத்தைக் கேட்டார். இதன்போது அப் பகுதியில் பொதுமக்கள் குவிந்ததுடன், இராணுவ வாகனத்தைச் செல்ல விடாது வழிமறித்தனர்.

அதையடுத்து அவ்விடத்துக்கு வருகை தந்த வவுனியா பொலிஸார் இரா ணுவ வாகனத்தைப் பொலிஸ் நிலையத் துக்கு அழைத்துச் சென்றனர். சிறிது நேரத்தின் பின்னர் இராணுவ வாகனத் தைப் பொலிஸார் விடுவித்திருந்தனர்.

இராணுவத்தினரின் தாக்குதலுக் குள்ளாகிய ஓட்டோ சாரதி வவுனியா வைத்தி யசாலையில் சேர்க்கப்பட்டுள்ளமையுடன், மேலதிக விசாரணைகளை வவுனியாப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

# யாழ்.தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு புதிய பொறுப்பதிகாரி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியாக தலைமைப் பொலிஸ் பரிசோதகர் பி.எம். சி.ஜே.பி. பளிகேன நியமிக்கப்பட்டுள்ளார்.

அவர் நாளை திங்கட்கிழமை கடமை களைப் பொறுப்பேற்பார் என்று தெரிவிக் கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் தலைமையகப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் பிரசாத் பெர்னாண்டோ, உதவிப் பொலிஸ் அத்தி யட்சகராகப் பதவி உயர்வு பெற்றார்.

அந்த வெற்றிடத்துக்கு யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரி வின் பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் பதில் கடமைக்கு அமர்த்தப்பட்டார்.

இந்நிலையில், அரசில் அங்கம் வகிக்கும் யாழ்ப்பாணம் மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினரும் கடற்தொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா வின் பரிந்துரையில் புதிய பொலிஸ் பொறுப்பதிகாரியாக தலைமை பொலிஸ் பரிசோதகர் பி.எம்.சி.ஜே.பி. பளிகேன நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கை பொலிஸ் திணைக்களத்



தால் ஒரே நேரத்தில் பல பொலிஸ் அதிகா ரிகள் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அவற்றில் வரலாற்றில் முதன்முறை யாக பொலிஸ் மருத்துவ சேவைப் பிரி வுக்கு மருத்துவர் ஒருவர் நியமிக்கப் பட்டார்.

நான்கு மூத்த பொலிஸ் அத்தியட்சகர் களும், 10 தலைமைப் பொலிஸ் பரிசோத கர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ள னர் என்று பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

அத்துடன், 15 தலைமைப் பொலிஸ் பரிசோதகர்கள் உதவிப் பொலிஸ் அத்தி யட்சகர்களாக பதவி உயர்வு பெற்றுள் ளனர்.

### அரசின் திட்டத்தை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரச பங்காளிக் கட்சிகள், அரசின் இந்தத் திட்டத்தை முறியடிப்பதற்கான முயற்சியி லும் தீவிரமாக இறங்கியுள்ளன.

கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலை யம் அரசு வசமே இருக்க வேண்டும் என வும், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்கப்படக்கூடாது எனவும் வலியுறுத்தி பங்காளிக் கட்சிகளால் அண்மையில் 'மக் கள் சபை' எனும் தலைப்பின்கீழ் கூட்டம் நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்தை நாடு முழுவதும் நடத்துவதற்கு தற்போது தீர்மானிக்கப்பட் டுள்ளது.

வலுசக்தி அமைச்சர் உதய கம்மன் பிலவின் வீட்டில் நடைபெற்ற இரகசிய சந்திப்பொன்றின்போதே பங்காளிக் கட்சி கள் இந்த முடிவை எடுத்துள்ளன என்று அரசியல் வட்டாரங்களில் இருந்து அறிய முடிகின்றது.

### மன்னார் பழைய நீர்த்தாங்கி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்படுத்தும் நோக்கில் அப் பகுதிக்கான நீர் விநியோகத்துக்காகவென துறைமுகங் கள் அதிகார சபையால் துறைமுகங்கள் கூட்டுத்தாபனம் மூலம் 1985ஆம் ஆண்டு இந்த நீர்த் தாங்கி கட்டப்பட்டது.

இவ்வாறு கட்டப்பட்ட தாங்கியில் இருந்து எந்தவொரு நீர் விநியோகமும் மேற் கொள்ளாத காரணத்தால் நீர்த்தாங்கி முழுமையாகப் பழுதடைந்து விட்டது. இதேநேரம் அதனைச் சூழவுள்ள பிரதே சங்களிலும் மக்கள் குடியிருப்புக்கள் அதி கரித்துவிட்டன. இதனால் பழுதடைந்த நீர்த்தாங்கி இடிந்து விழும் நிலையில் காணப்படுவதால் ஆபத்து ஏற்படும் எனக் கருதி இந்த நீர்த் தாங்கியை இடித்து அழிக்கத் திட்டமிடப்பட்டது. அதற்கமைய சகல அனுமதிகளின் பெயரில் அழிக்கப் படவுள்ளது.

குறித்த நீர்த்தாங்கி நாளை காலை 8.30 மணியளவில் இராணுவத்தின் பொறியியல் பிரிவின் உதவியுடன் குண்டு வைத்து தகர்க்கப்படவுள்ளது.

### வவுனியாவில் 47 பேருக்கு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்புகளைப் பேணியோர், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டோர், தாமாக முன்வந்து பரி சோதனை செய்தோர் மற்றும் தனிமைப் படுத்தப்பட்டோர் ஆகியோரிடம் மேற் கொள்ளப்பட்ட பி.சி.ஆர். மற்றும் அன்டி ஜன் பரிசோதனையின் முடிவுகளின் ஒரு தொகுதி நேற்றிரவு 9 மணிக்கு வெளியா கின.

அதில் வவுனியாவில் 17 மாணவர்கள் உட்பட 47 பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

மறவன்குளம், தோணிக்கல், பூந்தோட் டம், சிறிராமபுரம், சிதம்பரபுரம், வன்னிக் கோட்டம், பூவரசன்குளம், அம்பலாங் கொடவல உள்ளிட்ட பகுதிகளிலேயே மாணவர்கள் தொற்றுக்கு உள்ளாகியுள் ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளது.

மேலும், ஒரு வயது, இரண்டரை வயது, 5 வயது குழந்தைகளும் தொற்றுக்கு உள்ளாகியுள்ளமை உறுதிப்படுத்தப்பட் டுள்ளது.

இந்நிலையில், தொற்றாளர்களைச் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தவும், அவர்களுடன் தொடர்புடையவர்களைச் சுய தனிமைப்படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, வவுனியாவில் மீண்டும் கொரோனாத் தொற்றாளர்களின் எண் ணிக்கை அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி செயற்படுமாறும் சுகாதாரப் பிரிவினர் கோரியுள்ளனர். (100)

### 2 வருடங்களுக்குப் பின்னர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலில் களத்தடுப்பை மேற்கொள்ளத் தீர்மானித் தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப் பட்ட கொழும்பு றோயல் கல்லூரி அணி. 30 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 228 ஓட்டங்களைப் பெற்றுக்கொண் டது.

பதிலளித்துத் துடுப்பெடுத்தாடிய யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி அணி 30 ஓவர் களில் 9 விக்கெட்களை இழந்து 152 ஓட் டங்களை மாத்திரமே பெற்றுத் தோல்விய டைந்தது.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக உமுது வீரசேகரவும், வளர்ந்து வரும் வீரராக மல்லவராய்ச்சியும் கொழும்பு றோயல் கல்லூரியில் இருந்து தெரிவாகி னர்.

போட்டியின் சிறந்த துடுப்பாட்ட வீரராக 27 பந்துகளில் 60 ஓட்டங்களைப் பெற்ற தரணிதரனும் சிறந்த பந்துவீச்சாளராக கஜானாத்தும் சிறந்த களத்தடுப்பாளராக கோமைந்தனும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இருந்து தெரிவுசெய்யப்பட் டனர். நவீன வசதிகளுடன் புதிதாக மேம் படுத்தப்பட்டு நேற்றுமுன்தினம் உத்தியோக பூர்வமாகத் திறந்துவைக்கப்பட்ட யாழ்ப் பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் இந்தப் போட்டி நேற்று இடம்பெற்றிருந் தமை குறிப்பிடத்தக்கது.

# வவுனியாவில் 10 மாணவர்கள் கொரோனாவுடன் அடையாளம்

(வவுனியா நிருபர்)

வவுனியா வடக்கு வலய பாடசாலை ஒன்றில் 10 மாணவர்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிசெய்யப் பட்டுள் ளது எனச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித் துள்ளனர்.

வவுனியா வடக்கு வலயத்துக்குட்பட்ட மறவன்குளம் பாரதி வித்தியாலயத்தில் கல்வி பயிலும் தரம் 5 மாணவனுக்கு காய்ச்சல் ஏற்பட்ட நிலையில் குறித்த மாணவனுக்கு நேற்று முன்னெடுக்கப் பட்ட அன்டிஜன் பரிசோதனையில் கொரோ னாத் தொற்று உறுதி செய்யப் பட்டது.

இதையடுத்து குறித்த மாணவனுடன் தொடர்புடைய ஏனைய மாணவர்க ளுக்கு நேற்று துரித அன்டிஜன் பரி சோதனை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பரிசோதனையில் அந்தப் பாட சாலையைச் சேர்ந்த தரம் 5 மாண வர் கள் 7 பேருக்கும், தரம் 11 மாணவர்கள் இருவருக்கும் கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

தொற்றுக்குள்ளான மாணவர்கள் சிகிச்சைக்காகத் தனிமைப்படுத்தப்பட் டுள்ளதுடன், அவர்களுடன் தொடர்புடைய வர்களைத் தனிமைப்படுத்த சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

(பின்னிய செய்திகள் 01ஆம் பக்கத்தில்...)

# முன்னாள் நகர சபைத் தலைவர் கொரோனாத் தொற்றால் சாவு!

சாவகச்சேரி நகராட்சி மன்றத்தின் முன்னாள் தவிசாளர் இ.தேவசகாயம் பிள்ளை கொரோனாத் தொற்றால் உயி ரிழந்துள்ளார்.

தேவசகாயம்பிள்ளை, 2011ஆம் ஆண்டு இடம்பெற்ற உள்ளூராட்சிசபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பில் சாவகச்சேரி நகர சபைக்குப் போட்டி யிட்டு அதிகூடிய விருப்பு வாக்குகளால் வெற்றி பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ச்சியாக 4 ஆண் டுகள் சபையின் தலைவராக இருந்து பல் வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்களை அவர் முன்னெடுத்தார்.

கொரோனாத் தொற்றால் பாதிக்கப் பட்ட சிகிச்சை பெற்று வந்த நிலையி லேயே சாவகச்சேரி வைத்தியசாலையில் அவர் உயிரிழந்துள்ளார்.

# வரவு-செலவுத் திட்டம் சுதந்திரக் கட்சி திருப்தி

## அக்கட்சியின் பொதுச் செயலாளர் தெரிவிப்பு

2022 வரவு செலவுத் திட்டம் தொடர்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எவ்வித முறைப்பாடுகளும் இல்லை என அக்கட்சியின் பொதுச் செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த அவர்

உள்ளூர் உற்பத்தியில் செய்யப்படும் முதலீடுகள் அந்நியச்செலாவணியைக் கொண்டுவரும் என கூறினார்.

துணிகள் போன்ற பொருள்களின் உள்ளூர் உற்பத்திக்காகச் செய்யப்படும் முதலீடுகள் பொருளாதாரத்தை வலுப்படுத்தும் என தான் நம்புகிறேன் எனவும் தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.

ஏறாவூர் போன்ற கைத்தொழில் வலயங்களில் முதலீடு செய்வது பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப உதவுவதோடு மேலதிக அந்நிய செலாவணி கிடைக்கக் கூடிய வாய்ப்பு கிடைக்கும் என்றும் தெரிவித்தார்.

தனது அமைச்சுக்காக வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகமாக 100 கோடி ரூபா ஒதுக்கப்பட்டமை தொடர்பாகமகிழ்ச்சியடைகிறேன் என தயாசிறி ஜயசேகர குறிப்பிட்டார்.





கனடாவில் வாழும் 34 வயது உத்தரட்டாதி நட்சத்திர பள்ளர்குல மணமகனுக்கு கொழும்பை அண்மித்த பகுதியில் மணமகள் தேவை.

40 வயது மூல நட்சத்திர லக்கினத்து செவ்வாய் வெள்ளாளர் குல, விவாகரத்து மணமகனுக்கு மணமகளையும் தேடுகின்றோம்.

தொடர்புகளுக்கு
00141 6666 1855,
021 222 1515,
077 650 5097

**இறைச்சிக் கோழி விற்பனை**

புறோய்லர், கல்பேட்ஸ், பேரன்ஸ் இறைச்சிக் கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் சுத்தம் செய்து மிகக் குறைந்த விலையில் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.



U.S.A பாம்
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.
077 868 9500

*Jaffna College Institute of Technology*
*Calls for the following courses*

Computer Certificate Courses *( 3 – 4 months Part time)*

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.


அளவெட்டி மண்ணின் மைந்தன்,
ஓய்வுநிலை மாவட்ட அரச அதிபர்
உயர்திரு நாகலிங்கம் வேதநாயகன் அவர்களின்


**பணி நயப்பும் மணிவிழா மலர் வெளியீடும்**

**அழைப்பிதழ்**

தலைமை
திரு. வை. சுப்பிரமணியம் ஜே.பி
(தலைவர், அளவெட்டி மகாஜன சபை)

இடம் : அளவெட்டி மகாஜன சபை
மௌனதவமுனி பொ. கைலாசபதி அரங்கம்

காலம் : 14.11.2021 ஞாயிற்றுக்கிழமை
காலை மணி 09.30



இவ் இனிய வேளையில், சேவை ஒன்றினையே முழுமுதல் பணியாய்க் கொண்டு நிருவாகசேவையில் மிளிர்ந்த எம் மண்ணின் பெருமகனின் சேவையை கௌரவித்து அளவையூர் மக்கள் எடுக்கும் இப் பெருவிழாவில் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கின்றோம்.
நிகழ்வுகள் தொற்றுநோய்த் தடுப்புக்கான சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய நடைபெறும்.

அளவெட்டி
01.11.2021

இங்ஙனம்
அளவெட்டி மகாஜன சபை
மணிவிழாக்குழு, மலர்க்குழு

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 14.11.2021 இல் வெளியிடப்பெற்றது.

# குயில் கூடு

பாகம் 04

அலெக்ஸினது கார் ஆஸ்பத்திரிக்கு முன்பாக நிற்கவும் நேரம் 12 மணி என்பதை இலங்கை வானொலி அறிவிக்கவும் சரியாக இருந்தது. முன் இருக்கையில் அமர்ந்திருந்த நிர்மலாவுக்கு இருப்புக் கொள்ளவில்லை. எப்படா உள்ளே போகலாம். என் ஆருயிர்த் தோழியும் தனது உறவினருமான யூலியற்றைப் பர்க்கலாம் என்கிற மிதமிஞ்சிய ஆவலினால் அவள் கண்களும் முகமும் பூரிப்பினால் சிவந்திருந்தன. கால்கள் காருக்குள் இருக்காமல் பரபரத்துக் கொண்டிருந்தன. கைகள் அவள் சர்வாரின் துப்பட்டாவைத் திருகிக் கொண்டிருந்தன. மொத்தத்தில் அன்பு மனைவியின் ஆனந்தமும் தவிப்பும் அலெக்ஸீக்கு மனதில் குறும்புத் தனத்தையும் அவள் மேல் காதலையும் அதிகப்படுத்தியது. ஏய் நிம்மி அடியே நீ என்னை முதல் முதல் பார்க்க வந்தபோது கூட இந்தளவுபரபரப்பு இல்லை. இந்தளவு எதிர்பார்ப்பு இல்லை. இவள் உன்ர சினேகிதிதானே. இல்லை. லவ்வரோடி எனக் கண்களால் சிரித்தபடியே வாய்விட்டுக் கேட்டான் அலெக்ஸ். ஓம் அப்பா நீங்க என்னோடு இப்பத்தான் வந்து சேர்ந்தனியள். அவள் அப்படியா நாங்கள் நினைவு தெரிஞ்ச நாளில் இருந்து சினேகிதிகள் தெரியுமோ? அவள் என்ர உயிர்ச் சினேகிதி தெரியுமல்லோ என்றாள். சரி கதையை விடுங்கோ. நேரம் போகுது. அவளுக்காக வாங்கின அந்தப் பழுப்பையை எடுங்கோப்பா. இறங்குங்கோ கெதியா போவம். ஆக்கள் நிறைஞ்சு போச்சு வாசலில என்று கணவனைத் துரிதப்படுத்தினாள் நிர்மலா. சரி சரிடி வாறன் பொறு. பறக்காத. ரெண்டுகாலாலதான் நான் நடக்க வேணும் என்றவன் இறங்கி நடக்க ஆரம்பித்தான். அவளோ ஓட்டங்கலந்த நடையோடு வீதியைக் கடந்து பார்வையாளர் வாசலை நோக்கி நடந்தாள். உள் நுழைந்து யூலியற் அனுமதிக்கப்பட்டிருக்கும்ward வாசலை ஏகினர் நிர்மலாவும் அலெக்சும். இவர்களது வரவினை விழிமூடாமல் ஆவலோடு எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருந்தாள் யூலியற். நிர்மலாவினைக் கண்டதும் அவள் வைத்தியர் எழும்பக் கூடாது என்று சொன்னதையும் மீறி எழும்ப எத்தனித்தவளை இரண்டு எட்டில் பாய்ந்து தாங்கிப் பிடித்துக் கொண்டவள். ஏண்டி எழும்பினனீ? டாக்டர் சொன்னது தெரியாதா? எனச் செல்ல மிரட்டல் மிரட்டியவள் அவளை அணைத்து நெற்றியிலும் கன்னத்திலும் முத்தமிட்டாள். என்னடி இப்படிச் செய்துட்டாய். ஏண்டி விழுந்தனீ? அடி பலமாகப் பட்டதோ? என அவளது வயிற்றைத் தடவியவள். கவனமடி. சும்மா தேவையில்லாமல் அங்க இஞ்ச போகாத. பேசாமல் என்னோடு வந்து இரன் குழந்தை பிறக்கும்வரை என்றாள். லூசாடி நீ? பிள்ளைகளை யார் பார்க்கிறது? இவர் உன்ர கொண்ணாவை யார் கொன்றோள் பண்ணுறதாம் என்றாள். சரி சரி கதையை விடு. வா கொஞ்சநேரம் நாம் கதைப்போம் என்றாள்.



சரி சரி விசிற்றஸ் நேரம் முடிஞ்சுபோச்சு. ஐயாமார், அம்மாமார் வெளிக்கிடுங்கோ என்று செக்கியூரிட்டி வரவும் இருவரும் தம் நிலை உணரவும் சரியாக இருந்தது. அதுசரி. அலெக்ஸ் அண்ணா எங்க என்று வினாவிய யூலியற்றிடம் இப்பதாண்டி நானும் அந்த மனுசனை யோசிக்கிறன் என்றதும் இருவரும் 'கொல்' என்று சிரித்து முடித்தனர். சரிடி நேரமாச்சு. நான் பின்னேரமும் வருவன். நீ யோசிக்காத. மாமி வெளியால இவரோட நிற்பாபோல. நீ எழும்பி கட்டிலில படு. நான் வாறன் அப்போ என்றவள் மறுபடியும் அவளை அணைத்து முத்தமிட்டாள். வெளி வராண்டாவை அடைந்தவள் அங்கு சின்னமாமி திரேசம்மாவும்கணவன் அலெக்சும் அந்த வாங்கில் அமர்ந்திருந்து அளவலாவிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றாள். ஓம் மாமி. நீங்க இஞ்சையோ இருக்கிறீங்க? என்றவளைத் திரேசம்மாவும் ஓம் பிள்ளை என்னைத் தெரியுமோ உமக்கு? நான் நினைச்சன் தெரியாதோ என்று. எனக் கிண்டலடித்ததோடு நிற்காமல் யூலியற்றைக் கண்டால் உனக்கு எங்கள் யாரோட நினைவும் உனக்கு வாறதே இல்லை. அப்படித்தானே எனப் பகிடி பண்ணினார். இல்லை மாமி. அவளோட கதைக்கவே நேரம் போயிட்டுது. பிறகு நான் உங்களோடு என்னத்த கதைக்கிறது என்றாள். கணவன் அலெக்சும் இவளது கதைக்குக் கண்ணடித்துச் சிரித்துக் கொண்டான்.

சரி சின்னம்மா நாங்கள் வாறம். அப்போ பின்னேரம் வேற இவளைக் கூட்டிக் கொண்டு வர வேணும். திரும்ப இவள் விடமாட்டாளல்லோ என்று கூறிக் கொண்டு திரும்பியவளின் கை பட்டு எதிரே வந்த நபரினது கையிலிருந்து ஏதோ ஓர் பொருள் கீழே விழுந்தது. சுதாகரித்த அலெக்ஸ் Sorry எனக் கூறியவன் அவரை நிமிர்ந்து பார்க்காமலே கீழே விழுந்த பொருளைக் குனிந்து எடுத்தான். அது ஓர் ஆங்கில மருத்துவப் புத்தகம். குனிந்தவன் நிமிர்ந்து அவனை நோக்கினான். எங்கோ பார்த்தது போல ஓர் நினைவு. அந்தக் கண்களைக் கண்டவன் ஓ.. நீங்க ரகுராம் அல்லவா என அவனது பெயரை உச்சரித்தான். ஓம். ஓம் நீங்க என அந்த நபர் கூறமுன்னரே. ஓம் நான்... அலெக்ஸ் நீங்க என்னோட படிச்ச ரகுராம் தானே. நீங்கள் ஸ்கூல் மாறினபிறகு நான் உங்களைச் சந்திக்கவே இல்லை. உங்களை O/L படிக்கும்போது தானே பார்த்தது. இந்தக் கண்ணடியில கல்லடிபட்ட அடையாளம் வைச்சுத்தான் நான் அடையாளம் பிடிச்சன். எப்படி நீங்க இருக்குறியள் என நல விசாரிப்புக்களோடு இருவரும் உரையாட ஆரம்பித்தனர். நிர்மலாவும் மரியாதைக்கு ஹலோ சொல்லி புன்னகைத்துக் கொண்டாள். ஓம் நான் கொழும்பு பெரியாஸ்பத்திரியிலதான் வேலை செய்யுறன். கைனோகோலொஜிற் ஆக தனது பெண் நோயியல் நிபுணர் என்பதை ரகுராம் ஆங்கிலத்தில் கூறினான். சிறிய நேர உரையாடலின் பின் அலெக்ஸ் அவளிடம் கேட்டான். ரகுராம் if you don't mind. willyou please can . I talk with you within this week of you are free? என்றான். Yes. Sure எனக் கூறியவன் தனது விசிட்டிங் காட்டினையும் எடுத்து அலெக்ஸிடம் கொடுத்து If you free will you contact அலெக்ஸ் என்றான். மனைவியை அறிமுகம் செய்தவன் இவ என்ர Wife ரகுராம். இவட விடயமாகத்தான் உங்களைச் சந்திப்பம் என்று யோசித்திருக்கிறன். அதுதான் நேரம் கேட்டன் என்றான். பிரச்சினைஇல்லை வாங்கோ. விஞ்ஞானம் நிறையவே முன்னேறிட்டுது. எதுக்கு யோசிக்குறீங்க. இரண்டு பேரும் வாங்கோ பார்ப்போம் என்று கூறிக் கொண்டு பரஸ்பரம் ஓர் சிறிய அணைப்பினை நட்பின் நிமித்தம் ஏற்படுத்திக் கொண்டு இருவரும் பிரிந்து எதிர் எதிர் திசையில் நடக்க ஆரம்பித்தனர். நடக் கும் போதே அலெக்ஸ் மனைவியிடம் கூறிக் கொண்டான் இவர் என்ர கிளாஸ் மேட். இப்போ பேம்ஸ் கைனோ கோலொஜின்ற். நாம இரண்டுபேரும் இந்தக் கிழமைக்க சந்திப்பம் என்ன?என்றான். ஓமப்பா. சந்திப்பம். சந்திப்பம்... நல்லது நடந்தால் சந்தோஷம் தானே எனக் கூறிக் கொண்டவள் அந்த Dr. ரகுராமை எப்போது சந்திக்கப் போகிறோம் என்ற கனவுடன் காரின் கதவைத் திறந்தாள். தொடரும்....

மதிவதனி இராஜசேகரன்
(B.A, IHD in Law)

# இலக்கிய நயம்

பழந்தமிழ் இலக்கியங்களில் மட்டுமல்ல சங்ககாலம் முதற்கொண்டு தமிழ் நாட்டில் வாழ்ந்த நற்றிசைப் புலவர்களுள் மெல்லியலார் பலர் உண்டென்றாலும் அவர்களில் தலை சிறந்தவராகக் கருதிப் போற்றப் படுபவர் ஔவையார் ஆவார். ஔவை வாக்கைத் தெய்வ வாக்கிலும் மேலாக போற்றிப் பாதுகாத்தனர் தமிழ்நாட்டு மக்கள். ஔவை தமிழ் நாட்டில் திருவேங்கடம் முதல் தென்குமரி ஈறாகவுள்ள பிரதேசங்களைத் தன் நடையினால் அளந்து வைத்துள்ள பெருமாட்டி சேர,சோழ, பாண்டியர்கள் ஈறாக நன்மதிப்பு மிக்க ஓர் பெண்பாற் புலவராக காணப்பட்டார். அவர் தன் காலத்தில் காணப்பட்ட சேர,சோழ, பாண்டிய நாட்டின் சிறப்பியல்புகளைத் தனது பாடல்கள் மூலம் உணர்த்தி நிற்பவர். அவ்விதமே இப்பாடலும் இங்கே சொல்லப்படுகின்றது.



**‘ வேழமுடைத்து மலைநாடு-மேதக்க**
**சோழவழநாடு சோறுடைத்து -**
**பூமியர் கோன்**
**தென்னாடு முத்துடைத்து தெண்ணீர்**
**வயல் தொண்டை**
**நன்னாடு சான்றோருடைத்து’**

வேழமுடைத்து மலைநாடு என்று சேர நாட்டின் பெருமையை எடுத்துரைத்தார். அவரது வாக்கின் திறத்தால் சேரநாட்டில் அன்றிருந்த யானைச் செல்வம் இன்றும் காணக் கூடியதாகவுள்ளது. அழிவின்றி பெருகிக் கொண்டு போகின்றது என்றும் சொல்லலாம்.

சோழநாடு நீர்வளமும் மருத நிலவளமும் நிறையப் பெற்றது. எனவேதான் விவசாயம் சிறந்து விளங்கியது. நெல்வளம் நிறையப் பெற்று பசி என்று வந்தவர்க்கு உணவளித்து மகிழ்ந்தது. எனவேதான் சோற்றுப் பஞ்சம் இல்லாத அந்த நாட்டினை ‘சோழ நாடு சோறுடைத்து என்று பாடினார். பாண்டியருக்கு மீனே கொடி. அவர்களது சொத்தே தென்கடலே. அங்கே முத்துச் செல்வமே அவர்களைச் சிறப்பானவர்களாக்கியது. அத்தகைய முத்து வளத்தைக் கண்டு மெத்த மகிழ்ச்சியுற்ற அம்மையார் ‘தென்னாடு முத்துடைத்து’ என்றார். இவ்விதம் வில், புலி, மீன் ஆகிய வற்றைக் கொடியாகக் கொண்டு வாழ்ந்த சேர, சோழ பாண்டியர்களான மூவேந்தர் ஆண்ட நாட்டின் நலன்களைத் திறம்படக் கூறியபின் தமிழகத்தின் சென்னியாய்த் திகழும் ‘தொண்டை நன்னாடு சான்றோர் உடைத்து’ என்று சீராட்டினார்.

இவ்விதம் ஔவைப் பிராட்டி சுருங்கச் சொல்லி விளக்கிய இச்சிறப்பியல்புகளை பழந்தமிழ் இலக்கியங்கள் சில பரந்தூட்டி விளக்கவும் காணலாம். அவைகள் பற்றி இன்னொரு நயத்தில் நாம் சுவைத்து மகிழலாம்.

குந்தவி நாச்சியார்.

காலைக்கதிர் Kalaikkathir

# 55 ஆவது அகவையில் தடம் பதிக்கின்றது கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி மத்திய நிலையம்

- சிவா.இராஜஜோதி -
(உபதலைவர், கொழும்பு சாயி மத்திய நிலையம்)

கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் அமையப் பெற்று இந்த (2021ஆம்) ஆண்டுடன் 55 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. 1966ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் மருத்துவ கலாநிதி (செல்வி) கணேசாள் அருணாசலம்பிள்ளை அவர்களால், கொழும்பு - கொட்டாஞ்சேனை இராஜேஸ்வரி கல்வி நிலையத்தில் ஒரு பஜனை மன்றமாக இந்த சாயி அமைப்பு உருவாகியது.

பின்னாளில் கொழும்பு விவேகானந்த வித்தியாலய போதனாசிரியர் திரு.வி.நாராயணதாஸ், இசை ஆசிரியை (செல்வி) கே.வி.பராசக்தி, அரச நில அளவை திணைக்களத்தின் (ஓய்வு நிலை) அத்தியட்சகர்.திரு. எஸ் செல்லத்துரை ஆகியோரின் பங்களிப்புடன் இந்த சாயி பஜனை மன்றமானது சாயி சத்சங்கம் எனப் பரிணமித்தது.

இந்த இராஜேஸ்வரி கல்வி நிலையத்தில்தான் வாராந்த சாயி பூஜை வழிபாடு, சாயி பஜனைக் கூட்டுப்பிரார்த்தனை என்பன வியாழன் தோறும் நடைபெற்று வந்தன. காலப்போக்கில், இந்த கல்வி நிலைய சுற்றுவட்டாரத்தில் சாயி வழிபாட்டுக்கு எதிர்ப்புக் கிளம் பியதால், இந்த சமய அனுஷ்டானங்களை வேறு இடத்துக்கு நகர்த்த வேண்டியதாயிற்று. அதன் பிரகா ரம் இந்த சாயி சத்சங்கம், வர்த்தகப் பிரமுகரான திரு.டி.ஏ.கதிரேசு அவர்களின் அனுசரணையுடன் கொழும்பு மகா வித்தியாலய மாவத்தையில் இலக்கம் 109இல் அமையப் பெற்ற சாயி இல்லத்தில் 1967 ஆம் ஆண்டின் முற்பகுதியில் நிலைகொண்டு இயங்க ஆரம்பித்தது.

இந்த சாயி சத்சங்கத்தின் ஏற்பாட்டில் கொழும்பு கமலா மோடி மண்டபத்தில் 1967ஆம் ஆண்டு மார்ச் மாதம் அனுஷ்டிக்கப்பட்ட மகா சிவராத்திரி விழாவுக்கு வாழ்த்து தெரிவித்து, பகவான் பாபாவின் திருக்கரத்தால் எழுதப்பட்ட தந்தி மடல் கிடைக்கப்பெற்றமை, இந்த சாயி சத்சங்கத்துக்குக் கிடைத்த ஓர் அங்கீகாரமாகும். இந்தத் தந்தி மடல் எமது ஆவணக் கோவையில் ஒரு பொக்கிஷமாக பாதுகாக்கப்பட்டு வரு கிறது.


சுமார் 20 வருடகாலம் சாயி இல்லத்தில் நிலைகொண்டு இயங்கி வந்த இந்த சாயி சத்சங்கம், 1988ஆம் ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் சுமார் ஒரு வருட காலம் கொழும்பு - கொட்டாஞ்சேனை தமிழ் மகா வித்தியாலயத்தின் (தற்போது இந்து மகா வித்தியாலயம்) மேல் மாடியிலும், 1989 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை ஏறத்தாழ 15 வருடங்கள், கொழும்பு கமலா மோடி மண்டபத்திலும் நிலைகொண்டு, தனது சாயி சேவைகளை ஆற்றிவந்தது.

இந்த சாயி அமைப்பு 1966 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் சாயி சத்சங்கம் என்ற நாமத்துடன் பரிணமித்து இயங்கி வந்த நிலையில், இதனை சாயி சமித்தி என்ற பூரணத்துவம் மிக்க அந்தஸ்துக்கு உயர்த்துவது என 1971ஆம் ஆண்டில் இதன் நிர்வாக சபை தீர்மானித்தது.

எனினும் 1975 ஆம் ஆண்டின் முற்பகுதியில் இந்தியாவின் புட்டபர்த்தி நகரில், பிரசாந்தி நிலையத்தில் நடைபெற்ற உலகசாயி அமைப்புகளின் இரண்டாவது மாநாட்டில், இந்த சாயி சமித்தியின் விசேட பிரதிநிதியா கக் கலந்து கொண்ட பிரபல பத்திரிகை ஆசிரியர் திரு. எஸ்.டி.சிவநாயகம் ஐயா மேற்கொண்ட முயற்சியின் பயனாகவே, பகவானின் ஆசியுடன் இந்த சாயி சமித்திக்கான உத்தியோக ரீதியான அங்கீகாரம் கிடைக்கப்பெற்றது.

அதன் பிரகாரம் இந்த சாயி சமித்தி கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் எனப் பெயரிடப்பட்டது. இதன் ஸ்தாபக தலைவராக திரு.எஸ்.டி.சிவநாயகம் ஐயா ஏகமனதாகத் தெரிவானார். இதன் உருவாக்கத்துக்கு பின்னணியில் இருந்து செயற்பட்ட திரு.கே.இராஜகோபால் ஸ்தாபக செயலாளராக நியமனம் பெற்றார். இலங்கையில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட இந்து கலாசார அமைச்சின் அப்போதைய கபினற் அமைச்சராகத் திகழ்ந்த கௌரவ செல்லையா இராஜதுரை யின் ஆதரவுடன் இந்த சாயி மத்திய நிலையம் பிரஸ்தாப அமைச்சில் பதிவுசெய்யப்பட்டது.

திரு.சிவநாயகம் ஐயா இந்த சாயி மத்திய நிலையத்தின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்ட பின்னர், பகவான் பாபாவை நேரில் தரிக்கும் பாக்கியம் 1978 ஆம் ஆண்டில் மீண்டும் அவருக்கு கிடைக்கப் பெற் றது. இந்த சந்திப்பின் போது, பகவான் பாபா, திரு. சிவநாயகம் ஐயாவுக்கு மோதிரம் அணிவித்து ஆசிர் வதித்தமை, சாயி மத்திய நிலையத்துக்குக் கிடைத்த அங்கீகாரம் ஆயிற்று.





எஸ்.என்.உதயநாயகன்

அதனையடுத்து, 1979ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட கல்குடா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவும், அப்போதைய அரசின் நீதியமைச்சராகவும் திகழ்ந்த கௌரவ கே.டபிள்யூ. தேவநாயகத்தின் உதவியுடன் நாடாளுமன்ற சட்டமூலத்தின் ஊடாக, சத்யசாயி பாபா(ஸ்ரீ லங்கா) அறக்கட்டளையகம் எனும் அமைப்பையும் திரு.சிவநாயகம் ஐயா உருவாக்கினார். பகவான் பாபாவின் ஆசியுடன் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட முதலாவது சாயி அறக்கட்டளை நிறுவனம் இதுவே என்பது குறிப்பிடத்தக்கது.

1966ஆம் ஆண்டில், இந்த சாயி சத்சங்கம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து, 1974ஆம் ஆண்டு வரை 8 ஆண்டுகள் திரு செல்லத்துரை ஐயா இதன் தலைவராகப் பணியாற்றினார். 1975 ஆம் ஆண்டில் இந்த சத்சங்கம் மத்திய நிலையமாக உருவாகியதைத் தொடர்ந்து 2000 ஆம் ஆண்டு வரை 25 வருடங்கள் திரு.சிவநாயகம் ஐயா இதன் தலைவராகப் பணிபுரிந்தார். திரு. சிவநாயகம் ஐயா (2000 ஆம் ஆண்டு ஏப்ரலில்) அமரத்துவம் எய்திய பின்னர் பிரதித் தலைவராக இருந்த திரு. எஸ்.என்.உதயநாயகம் இந்த சாயி மத்திய நிலையத்தின் தலைவராக ஏகமனதாகத் தெரிவானார்.

பகவானின் ஆசீர்வாதத்துடன் திரு.உதயநாயகன் அவர்கள் மேற்கொண்ட பெருமுயற்சியின் பயனாக, தற்போது இங்கிலாந்தில் வசித்து வரும் (இலங்கையரான) திருமதி ஞானலோஜினி நாகரட்ணம் மற்றும் கொழும்பின் பிரபல தொழிலதிபர்களான திருவாளர்கள் கே.பி.பாலநாயகம், சிவா செல்வரட்ணம் ஆகியோரின் பங்களிப்புடன், கொழும்பு - புதுச்செட்டித் தெருவில் வசதியான இடம் கொள்வனவு செய்யப்பட்டு, அங்கு பகவான் சத்ய சாயி பாபாவுக்கும், மகான் சீரடி சாயி பாபாவுக்கும் தனித்தனி சந்நிதானங்களுடன் ஆலயம் அமையப் பெற்றமை பெரும் பாக்கியமாகும்.

இந்த சாயி வணக்கஸ்தலத்தை நிர்மாணிக்கவென ஸ்தாபக தலைவர் உதயநாயகத்தின் வேண்டுகோளுக்கிணங்க கட்டடக் கலைஞர் திருமதி சுபாஷினி கௌசிகன் வடிவமைத்த வரைபடத்தை எமது சாயி மத்திய நிலையத்தின் பிரதிநிதியாக திரு.கே.கணேசானந்தன் அவர்கள் புட்டபர்த்திக்கு எடுத்துச் சென்று, பகவான் ஸ்ரீ சத்யசாயி பாபாவிடம் நேரில் சமர்ப்பித்து ஆசீர்வாதம் பெற்றமை, எமது இந்த சாயி வணக்கஸ்தலத்துக்கு கிடைத்த அங்கீகாரம் எனலாம்.

மேலும் இந்த சாயி ஆலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கும் பகவான் ஸ்ரீ சத்ய சாயி பாபாவினதும், மகான் சீரடி சாயி பாபாவினதும் வெண்பளிங்குத் திருவுருச் சிலைகள் மற்றும் ஐம் பொன்னினாலான எழுந்தருளி மூர்த்தங்களும் இந்தியாவில் இருந்து தருவிக்கப்பட்டமைக்கு திரு.உதயநாயகன் அவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சிகளும், பகவான் கிருபையால் நிறைவேறியமை சிறப்பம்சமாகும்

ஆலய வெளிவீதி ரதோற்சவங்களுக்கான சித்திரத்தேரும், உள்வீதி ஊர்வலத்துக்கான பல்லக்கும் மிக அவசியமாக உருவாக்கப்பட வேண்டும் என்ற தலைவர் உதயநாயகத்தின் விடாமுயற்சியும், மற்றும் சீரடி சாயி சந்நிதானத்தில் பிரார்த்தனை மண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்ற அவரது எண்ணக்கருவும், எமது ஆலய அறங்காவலர் திரு. கே.பி பாலநாயகத்தின் அனுசரணையுடன் கைகூடியமை பாபாவின் சங்கல்பமே.

தலைவர் உதயநாயகத்தின் மற்றுமொரு கைங்கர்யமாக, கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தின் ஓர் இணைந்த நிறுவனமாக சீரடி சாயி(ஸ்ரீ லங்கா) மத்திய நிலையம் எனும் சாயி அமைப்பு 2014 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் உருவாக்கப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எமது நாட்டின் ஜனாதிபதியாகத் திகழ்ந்த மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2015 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பிற்பகுதியில், இந்த சீரடி சாயி பிரார்த்தனை மண்டபத்துக்கு அத்திவாரக்கல் பிரதிஷ்டை செய்து வைத்தமையும், இதே ஜனாதிபதி, 2017ஆம் ஆண்டு நவம்பர் மாதம் நடுப்பகுதியில் இந்த மண்டபத்தை வைபவரீதியாக திறந்து வைத்தமையும் எமது சாயி நிலைய வரலாற்றில் பதியப்பட வேண்டிய முக்கிய குறிப்புகள் எனலாம்.

இந்த சாயி மத்திய நிலையம் தனது 55ஆவது ஆண்டில் தடம் பதிக்கும் இவ் வேளையில், சீரடி சாயி ஆலயத்துக்கு இலங்கையிலேயே மிக உயரமான இராஜகோபுரம் அமைப்பதற்கான அடிக்கல் பிரதிஷ்டை செய்யும் நிகழ்வில், ஜனாதிபதி செயலணியின் தலைவர் கௌரவ பஸில் ராஜபக்ஷவின் (தற்போதைய நிதி அமைச்சர்) பாரியார் சிரேஷ்ட சட்டத்தரணி புஷ்பா ராஜபக்ஷ பங்கேற்று, அடிக்கல்லை பிரதிஷ்டை செய்து வைத்தமை ஒரு விசேட அம்சமாகும்.

பருத்தித்துறை பகவான் சத்யசாயி சேவா நிலையத்தில் மகான் சீரடி பாபாவின் திருவுருவச் சிலை பிரதிஷ்டை நிகழ்விலும், திருக்கோவில் மற்றும் திருகோணமலை பிரதேசங்களில் சீரடி பாபா ஆலயங்களுக்கு அத்திவாரக்கல் பிரதிஷ்டை செய்யும் நிகழ்விலும், எமது சாயி நிலையப் பிரதிநிதியாக தலைவர் உதயநாயகன் அவர்கள் பங்கேற்று முன்னிலை வகித்தமை எமது சாயி ஸ்தாபனத்திற்கு கிடைத்த பெரும்பேறாகும். சர்வமத அனுஷ்டானங்களையும் அனுசரித்து நடக்க வேண்டும் என்ற பகவான் பாபாவின் கொள்கை யின் பிரகாரம், எமது சாயி நிலையத்தில் வெசாக், கிறிஸ்மஸ், இப்தரர் முதலான சமய அனுஷ்டானங்கள் நடைபெற்று வருகின்றமை மற்றுமொரு சிறப்பம்சமா கும்.

எமது சாயி மத்திய நிலையத்தால் மேற்கொள்ளப்பட்டு வரும் சேவைகளில், தேசிய கண் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோருக்கு செயற்கை கண் விழிகள் வழங்குதல், மஹரகம ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்களுக்கு கஞ்சி வழங்குதல், ஹெந்தல தொழுநோயாளர் ஆஸ்பத்திரியில் உள்ள நோயாளர்க ளுக்கு அத்தியாவசிய சுகாதாரப் பொருள்கள் வழங் குதல், ஹெந்தல பிரீதிபுர சிறுவர் மற்றும் முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்டு வருவோருக்கு உலர் உணவுப் பொருள்கள் வழங்குதல், விசேட தேவையுடைய பயனாளிகளுக்கு சக்கர நாற்காலிகள் வழங்குதல், சாயி நிலையத்தில் ஞாயிறு தினங்களில் நடை பெற்றுவரும் மருத்துவ முகாமில் மருத்துவ ஆலோசனையுடன் மருந்தும் வழங்குதல், இரத்ததானம் வழங்குதல், மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்குதல் என்பனவும் மற்றும் கந்தானை அரச வைத்தியசாலைக்கு சத்திர சிகிச்சை நாற்காலி வழங்கியமை,சுனாமியி னால் பாதிக்கப்பட்டோருக்கு பலதரப்பட்ட உதவிகள் வழங்கியமை, கொவிட் - 19 தொற்றுக் காலத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுப் பொதிகள் வழங்கியமை என்பனவும் குறிப்பிடத்தக்கவையாகும்.

இந்த சாயி மத்திய நிலையம் அமையப் பெற்று 55 ஆண்டுகள் நிறைவுபெறும் இந்தச் சந்தர்ப்பத்தில், சாயி நிலையத்தின் வளர்ச்சிக்கு கடந்த காலங்களில் பின்னணியில் இருந்து உதவிபுரிந்த அனுசரணையாளர்களை நாம் மறந்துவிட முடியாது. அவர்களில் திரு. சந்திரகாந்த் மோடி, திரு.ஆர்.இரட்ணசபாபதி (மெய்கண்டான்), திரு.எஸ்.நடராஜா, திரு.ஜி.டி.சிறிசேன, திரு.வி.ஏ.ராஜா, திரு.எஸ்.சரவணபவன், இலங்கையின் முதலாவது இந்து கலாசார அமைச்சராகத் திகழ்ந்த கௌரவ செல்லையா இராஜதுரை ஆகியோரும் உள்ளடங்குவர்.



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.


## அங்கம் - 191

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**482. ரெலோ நண்பரின் கருத்து என்ன?**

தனக்கு வந்திருந்த குறுஞ்செய்தியை நண்பர் எனது பார்வைக்கு அனுப்பியிருந்தார். அதனை அப்படியே தருகிறேன்.

“இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் வரைவிற்கும் (Draft) அன்றைய தமிழர் விடுதலைக் கூட்டணிக்கும் எதுவித சம்பந்தமுமில்லை. இதை பெங்களூரில் இருந்து விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர்கள் மற்றும் தமிழர் விடுதலைக்



கூட்டணி தலைவர்கள், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ்., புளொட் தலைவர்களுக்கு இந்திய அரசால் வழுங்கப்பட்டது. வாசித்து இரண்டு நாள்களில் முடிவு கூறும்படி. இதற்கு தமிழ் மக்களின் சார்பில் கையெழுத்து வைத்தது இந்தியாவே. ஏனெனில் விடுதலைப் புலிகள் இந்தியாவிற்கு கூறிவிட்டார்கள் - அமிர்தலிங்கம் கையெழுத்து வைக்க தம்மால் சம்மதிக்க முடியாது என்று. அந்தக் காலகட்டத்தில் எந்த அரசியல் கட்சியும் இயங்க புலிகள் அனுமதிக்கவில்லை. ஆக ஈரோஸ் மட்டும் தான் விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் இயங்கினார்கள். ஆகவே வரலாற்றை திரித்து எழுத வேண்டாம்.”

- வரலாற்றின் ஆழமோ, விஸ்தீரணமோ அறிந்து கொள்ளாமல் நுனிப்புல் மேய்ந்தவரின் ஒரு கருத்தை ஏதோ சொல்லிவிட வேண்டும் எனப் பதிந்ததாகவே இது எனக்குத் தோன்றியது.

முதலாவது - என்னால் பதியப்பட்ட குறிப்பு, இலங்கை - இந்திய ஒப்பந்தம் வந்ததின் பின் ஆக்கப்பட்ட 13 ஆம் திருத்த வரைவு பற்றியது. ஒப்பந்த வரைவு பற்றியதல்ல.

இரண்டாவது - திம்பு பேச்சுவார்த்தைகள், அதில் விடுதலைக் குழுக்கள் எடுத்த நிலைப்பாடு, தமிழர் விடுதலை கூட்டணிகள் பங்கு. ஜே.ஆரின் அரசோடு நடந்த சர்வ கட்சிக் கூட்டங்கள், பின்னர் இந்திரா காந்தி அமிர்தலிங்கத்துடன் கலந்துரையாடியவை என்பவற்றிலிருந்துஒப்பந்தம்கைச்சாத்திடப்பட்டதையும், பின்னர் நடந்தவை பற்றியும் இந்த பத்திரிகையிலேயே முன்னர் “இலங்கை - இந்திய ஒப்பந்தம்: ஒருதிசைநோக்குஎன்ற தலைப்பில் பதிந்திருந்தேன்.

மூன்றாவது – எந்த அரசியல் சார்பாகவும் வரலாற்றை திரிவுபடுத்தி, நியாயப்படுத்த வேண்டிய தேவையோ நிர்ப்பந்தமோ எனக்குக் கிடையாது. எனது கருத்துக்கள், அனுபவங்களின் ஊடாக அந்த கால கட்டங்களில் நேரடியாக பயணத்தின் விளைவாக தமிழ் மக்களுடைய நிலையிலிருந்து அவர்களுக்காகச் சொல்லப்படுவன்வேயொழிய, அதில் அரசியல் செய்பவர்களுக்காக அல்ல. ஒப்பந்தம் பற்றிய கருத்து தெரிவிக்கப்பட்டமையால் நான் அறிந்திருந்த ஓரிரண்டு மேலதிக தகவல்களையும் வரலாற்றின் விளக்கத்திற்காக தருகிறேன்.

**483. அவைகள் என்ன?**

ஒப்பந்தத்தின் நகல் (Draft) புதுடெல்லியில் வைத்தே எல்லோருக்கும் கையளிக்கப்பட்டது. அதனை ஒட்டி இரண்டு நாள்களில் அப்பிராயங்கள் தரும்படியும் கேட்கப்பட்டது. தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் மற்ற ஆயுதக் குழுக்களின் தலைவர்களும் ஒரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்தனர். இவர்கள் எல்லோரையுமே தமிழர் தாயகத்தில் அரசியல் செய்ய விடுதலைப் புலிகள் தடை செய்திருந்ததால் பிரபாகரன் பிறிதொரு ஹோட்டலில் தங்க வைக்கப்பட்டிருந்தார்.

திம்பு பேச்சுவார்த்தைகளின் நாள்களிலிருந்தே தமிழர் விடுதலைக் கூட்டணியினர் - முக்கியமாக அமிர்தலிங்கம், சிவசிதம்பரம் போன்றோர் மட்டுமல்லர் - எல்லா விடுதலைப் போராளிக் குழுக்களும் தமிழ் அகதிகள் புனர்வாழ்வு கழகத்தின் (TRRO) அனுசரணையில் லண்டனில் இயங்கிக் கொண்டிருந்த தமிழர் தகவல் நிலையத்துடன் (Tamil Information Center - TIC யுடன்) ஆவணங்களுக்காகவும் தகவல்களுக்காகவும் தொடர்பிலிருந்தனர். அப்பொழுது ஸ்ரீலங்காவின் வெளியுறவு சேவையில் பணியாற்றிக் கொண்டிருந்த லஷ்மி நாகநாதன் (தமிழரசின் இரும்பு மனிதன் நாகநாதனின் மகள் தற்பொழுது அமெரிக்கா செல்ல சம்பந்தன் நியமித்திருக்கும் நிர்மலா சந்தரஹாசனின் சகோதரி) புதுடெல்லியில் இருந்தார். அதேபோல் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருந்த காசிலிங்கம் விக்னேஸ்வரனும் தான் நாட்டில் எதிர்கொண்ட வன்முறைகளால் 1983 இல்



புதுடெல்லியிலிருந்து TIC இற்கு அனுசரனையாக அங்கிருந்து இயங்கிக் கொண்டிருந்தார். இவர்கள் இருவரும் புதுடெல்லி அதிகார மட்டத்தில் இருந்து அவற்றைப் பற்றி கூட்டணியினருடன் தொடர்பிலும் இருந்தனர். கூட்டணியினருக்கும் மற்றைய தலைவர்களுக்கும் ஹோட்டலில் நகல் தரப்பட்டபோது கூடவிருந்தனர். பின் நடந்தவற்றையும் பிரபாகரனோடு இருந்த பேச்சுக்கள் பற்றியும் அறிந்திருந்தனர். விக்னேஸ்வரன் பின்னாளில் முதலாவதாக அமைந்த இணைந்த மாகாண அரசின் பிரதம செயலாளராக முதல்வர் வரதராஜப்பெருமாளுடன் இயங்கிப் பின்னர் அது கலைக்கப்பட்டபோது இந்தியா சென்று தங்கியிருந்து, பின் நாட்டுக்குத் திரும்பியவர். அவரைப் போன்று அத்தருணம் புது டெல்லியில் இருந்தோர்களில் பலரது கூற்றில் ஒப்பந்தத்தின் நகல் தமிழ் தரப்புக்கள் எல்லோரிடமும் தரப்பட்டு ஜே.ஆரோடு இப்படியாவது ஒரு தடத்தைத் தான் பதித்து அதிலிருந்து முன்னேற வேண்டும் என்ற அறிவுரைகள் தரப்பட்டன.

இந்தியா இப்படி ஒப்பந்தத்தை எழுதியிருக்கலாம், அப்படி செய்ய வேண்டும், ஜே.ஆரோடு நாட்டை தான் பிரித்திருக்க வேண்டும் என்ற அபிப்பிராயங்கள் வெளிப்படுத்தப்பட்டன. ஆனால் அவை பின்னால் பிலாக்களில் வார்க்கப்பட்ட



கள்ளு மாதிரி, தமிழ்ப் பகுதிகளுக்கு ஒன்றுமே தெரிவிக்காமல் - அவர்களின் உடன்பாடில்லாமல் - ராஜீவ் காந்தி, ஜே.ஆருடன் ஒன்றை எழுதி, அதைத் தன் கோர்ட் பொக்கற்றில் கொண்டு வந்து, கையெழுத்துப் போட்டு, ஒரு பிரதியை ஜே.ஆருக்குக் கொடுத்துவிட்டு மற்றையதைத் தான் கொண்டு சென்று அமுல்படுத்த நின்றார், அதிலிருந்த ஒன்றுமே தமிழ் தலைவர்களுக்குத் தெரியாது, ஒருவரும் ஒத்துக் கொள்ளவில்லை, பிரபாகரனைச் சிறைபிடித்த மாதிரி ஹோட்டலுக்கு வெளியே விடாமல் காவலில் வைத்திருந்தார்கள் – போன்று ஊறுகாய், கருவாட்டுப் பொரியலுடன் அந்த காலங்களில் சுவையாக அந்த கள்ளுடன் ஏறின.

பிரபாகரனுக்கும் ஆதங்கங்கள் கூட்டணியினர், மற்ற தலைவர்கள் போல் இருந்தன. ஆனால் அவர்கள் ஆஹா, ஓஹோ என்று தனி நாடு கிடைத்தது போல் ஆரவாரப்படாமலிருந்தாலும் ஒருவராவது அதை எதிர்க்கவில்லை. பிரபாகரன் கூட எம்.ஜி.ஆரின் ஏற்பாட்டில் ராஜீவை அ.தி.மு.கவின் மத்தியில் அரசு மந்திரி பண்ருட்டி இராமச்சந்திரனுடன் சந்தித்தார். அந்தச் சந்திப்பில் கூட பிரபகாரன் ஒப்பந்தத்தை எதிர்க்கவில்லை. மாறாக, அதனைத் தன் பக்கத்திலிருந்து நடைமுறைப்படுத்த தனது போராளிகளைப் பொதுத்தளத்திற்குத் திருப்பி வாழ்வாதாரம் மேற்கொள்ளப் பண உதவி கோரினார். முதல் கட்டத் தொகையாக இந்திய ரூபா ஐம்பது கோடி பொருந்தி அதுவும் தரப்பட்டது. பின் நாள்களில் அது பிரபாகரன், தாம் வைக்கப்பட்டிருந்த சிறைப் பொறியிலிருந்து வெளியேறப் பாவித்த தந்திரம் என்று பேசப்பட்டது. ஆனால், அது தமிழ் மக்கள் எல்லோருக்குமே அவதந்திரமாகத் தான் முடிந்தது.

தங்களது அரசியலுக்காக இந்தியா மீது தவறுகளையும் குற்றங்களையும் சுமத்தி, தங்களை சுயவிமர்சனம் செய்ய ஒத்துக்கொள்வதில்லை. இன்று கூட இந்தியா இப்படித்தான் செய்ய வேண்டும், இந்த அடிப்படையில்தான் தீர்வைத் தருவதாக முன்னதாகவே ஒத்துக் கொண்டால்தான் பேச்சுவார்த்தைகளுக்கு வருவோம் என்ற அதிகாரத் தோரணைகளும் கட்டளைகளும் தொடர்கின்றன. அது மட்டுமல்ல, நாங்கள் எதுவும் செய்வோம், என்ன குத்துக்கரணங்களும் அடிப்போம், ஆனால் அதையெல்லாம் பொருட்படுத்தாது இந்தியா தமிழ் மக்களுக்கு அவர்கள் சொல்கிற நேரத்தில் அவர்கள் சொற்படி நடந்தால் அதுதான் தொப்புள் கொடி உறவின் விரைவிலக்கணங்கள் என்ற அனுமானங்களில் தமிழ் மக்கள் வாழ்கிறார்கள்.

**484. தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் ஆதங்கங்கள் எவையாக இருந்தன?**

முக்கியமாக வடக்கு - கிழக்கு இணைப்பு. அது இடைக்காலத்திற்குதான், அது நிரந்தரமானது இல்லை என்பது. ஒப்பந்தத்துக்கு நாட்டிலிருந்த எதிர்ப்பால், இணைந்த மாகாணத்தை மக்கள் ஏற்றுக்கொள்ள – தான் அவர்களை அதனை ஏற்கும்படி பதப்படுத்த – சிறிது கால அவகாசம் கேட்கிறார் என ராஜீவ், அமிர்தலிங்கத்துக்கு விளங்கப்படுத்தினார். அது மட்டுமன்றி, இணைப்பு நிரந்தரமாகவே அமையும், அதைத் தன்னிடம் விட்டு விடுங்கள் என உறுதியும் தந்தார்.

அடுத்து கிழக்கு மாகாணத்தைத் துண்டாடியே இணைப்பதற்கு ஜே.ஆர். திட்டம் தயாரித்தார். அம்பாறையைப் பொலன்னறுவையுடன் இணைப்பது, பொத்துவிலில் சில பிரதேசங்களை அயல் மாகாணத்துடன் இணைப்பது போன்ற அவரின் எண்ணங்களை அறிந்திருந்த அமிர்தலிங்கம், அப்படி அன்று தமிழ் மக்களின் பாரம்பரிய பிரதேசங்களாக 1948 இல் இருந்த வடக்கு - கிழக்குப் பகுதிகள் அடக்கப்பட வேண்டும் என்று கேட்டார். எவ்வாறாயினும் தாங்கள் ஏற்றுக்கொண்ட மாவட்ட சபைகளின் எல்லைகளில் எதுவும் விட்டுக் கொடுக்கப்படக் கூடாது என்றும் தெரிவித்தார். அவற்றுக்கு கூட ராஜீவ், அமிர்தலிங்கத்துக்கு உத்தரவாதம் அளித்து, அவற்றை அமுல்படுத்தி நடைமுறைக்கு கொண்டுவர அவர்கள் தேர்தலை ஏற்றுப் பதவியைப் பொறுப்பேற்க வேண்டும் என தெளிவுபடுத்தினார்.

(வளரும் .....)



காலைக்கதிர்
Kalaikkathir

# ‘என் எண்ண ஓட்டத்தில்...’ ஆக்கம் தாங்கிய நூல் சிவஜோதி வைத்தீஸ்வரன்’ நினைவு வெளியீடு

‘என் எண்ண ஓட்டத்தில்...’ என்ற தலைப்பில் அமரர் சிவஜோதி வைத்தீஸ்வரனின் ஆக்கங்களின் தொகுப்பு வெளியீடு எதிர்வரும் 18 ஆம் திகதி கிளிநொச்சி லிற்றில் எய்ட் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

லிற்றில் எய்ட் திறன் விருத்தி மையத்தின் இணைப்பாளராகப் பணியாற்றி குறுகிய காலத்தில் அந்த மண்ணின் மைந்தனான சிவஜோதியின் 50 ஆவது பிறந்ததினத்தையொட்டி இந்நூல் வெளியீடு ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சிவஜோதியின் பிறந்த தினமான நவம்பர் 18 இலேயே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சிவஜோதி எழுதிய கட்டுரைகள், மேற்கொண்ட நேர்காணல்கள், நூல் விமர்சனங்கள், ஆகியவற்றின் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்படுகின்றது. தேசம் வெளியீடாக வரும் இந்நூலை திருமதி ஹம்சகௌரி சிவஜோதி தொகுத்துள்ளார். நாடகக் கலை, நாடகக் கலைஞர்களுடனான நேர்காணல், பேராசிரியர் கா.சிவத்தம்பி மற்றும் பேராசிரியர் வசந்தி அரசரட்ணம் ஆகிய கல்வியியலாளர்களின் நேர்காணல்கள் என பல்வேறு வகையான ஆக்கங்களையும் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது.

சிவஜோதியை ஆண்டுதோறும் நினைவு கூருகின்ற வகையில் சிவஜோதி நினைவுப் பரிசு ஒன்றை வழங்கவும் சிவஜோதி நினைவுக்குழு தீர்மானித்துள்ளது. மேலும் சிவஜோதி ஒரு நாடகக் கலைஞர் என்பதாலும் நாடகக் கலையில் தீவிர ஆர்வத்தைக் கொண்டிருந்தாலும் நாடகக் கலைக்காகத் தங்களை அர்ப்பணித்த ஒரு கலைஞருக்கு அல்லது நாடகக் கலைக்கு சேவையாற்றுகின்ற அமைப்பு ஒன்றுக்கு ஒரு லட்சம் ரூபா சன்மானம் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி சன்மானத்தை பெறுகின்றவருக்கு அல்லது அமைப்புக்கு அந்நிகழ்வில் ஹம்சகௌரி சிவஜோதி ஒரு லட்சம் ரூபாவுக்கான காசோலையை வழங்குவார்.

இந்நிகழ்வில் சிவஜோதி நினைவாக லிற்றில் எய்ட் இல் கற்கும் மாணவ மாணவியருக்கு யாழ் விக்ரோறியாக் கல்லூரி பழைய மாணவர்கள், அவர்களுக்கு வேண்டிய பாடசாலை சீருடைகளை வழங்க உள்ளனர். சிவஜோதி யாழ் சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவஜோதியின் நினைவு நிகழ்வுகளை ஆண்டுதோறும் மேற்கொள்ளவும், நாடகக் கலைக்கு உழைக்கின்றவர்களையும் அமைப்புகளையும் கௌரவிக்கும் வகையிலும் ஆண்டுதோறும் சிவஜோதி நினைவுப்பரிசை வழங்கவும் சிவஜோதி நினைவுக்குழு தீர்மானித்து உள்ளது. அதற்காக சிவஜோதி ஞாபகார்த்த நிதியம் ஒன்று லிற்றில் எய்ட் இல் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. சிவஜோதி நேசித்த நாடகக் கலைக்கு ஊக்கமும் ஆக்கமும் அளிக்க முன்வருபவர்கள் இந்த நிதியத்திற்கு நிதி வழங்குவதன் மூலம் அதனைச் செய்ய முடியும்.

சிவஜோதி ஞாபகார்த்த நிதியத்துக்கு நிதி வழங்க விரும்புபவர்கள் கீழுள்ள வங்கிக் கணக்கிற்கு தங்கள் நிதியை வழங்க முடியும்.

வங்கி: HNB

கணக்கின் பெயர்: Little Aid Skill Development Centre (Gurantee) Limited

வங்கிக் கணக்கு இலக்கம்: 146020176746

இவ்வாண்டுக்கான சிவஜோதி நினைவுப் பரிசைப் பெறும் நாடகக் கலைஞர் அல்லது நாடக்குழு நவம்பர் 18 அன்று அறிவிக்கப்படும்.

இந்த நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு சிவஜோதி ஞாபகார்த்த குழு அழைப்புவிடுத்துள்ளது. இந்நிகழ்வை சிவஜோதி முன்நிலை உறுப்பினராக இருந்து இயக்கிய மக்கள் சிந்தனைக் கழகம் மற்றும் லிற்றில் எய்ட் அமைப்பு என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ளன.

# இலங்கையை சோமாலியாவாக மாற்றும் வரவு - செலவுத் திட்டம்!

## சஜித் காட்டம்

2022 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டம் இலங்கையை சோமாலியாவாக மாற்றும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார். எதிர்க் கட்சித் தலைவர் அலுவலகத்தில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரி வித்த அவர் -

மக்களின் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்தவும் வாழ்வாதா ரத்தை மேம்படுத்தவும் திட்டங்கள் அதில் இல்லை எனக் குற்றம் சாட்டினார். பொருளாதாரத்தைக் கட்டியெழுப் புவதற்கான தெளிவான வேலைத் திட்டம் மற்றும் குறுகிய அல்லது நீண்ட கால செயற்திட்டங்கள் அறிவிக்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டார்.

தற்போதைய குழப்பத்தில் இருந்து நாட்டை மீட்டெடுப்பதற்குப் பதிலாகப் பேரழிவுப் பாதைக்கு கொண்டு செல்லும் வகையில் வரவு செலவுத் திட்ட முன்மொழிவுகள் வகுக்கப்பட்டுள்ளன என சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

வரவு செலவுத் திட்டத்தினூடாக கடன் சுமைக்குத் தீர்வு வழங்கப்படவில்லை எனவும் அதே வேளை வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் கையிருப்புகளை அதிகரிப்பதற்கான திட்டங்களும் இல்லை என்றும் அவர் சுட்டிக்காட்டினார். அத்தோடு விவசாயிகள் எதிர்கொள்ளும் நெருக் கடி தொடர்பாக வரவு செலவுத் திட்டத்தில் தெளிவான அறிவிப்புக்கள் இல்லை என்பதால் இது உணவு பற்றாக் குறைக்கு வழிவகுக்கும் என்றும் சஜித் பிரேமதாஸ குறிப்பிட்டார்.

# புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி கதையாடல்

புத்தாக்க அரங்க இயக்கம் நடத்தும் மெய்நிகர் இணையவழி பன்னாட்டு அரங்க கதையாடல் 07 நிகழ்வு கார்த்திகை மாதம் 15,16, 17,18 ஆகிய திகதிகளில் இரவு 7 மணிக்கு புத்தாக்க அரங்க இயக்கத்தின் பணிப்பாளர் எஸ்.ரி.குமரன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் நாளை (திங்கட்கிழமை) முதுநிலை விரிவுரையாளர் நுண்கலைத்துறை கிழக்குப் பல்கலைக்கழகம் மட்டக்களப்பு (இலங்கை) கலாநிதி சி.ஜெயசங்கர் சமகால உலக நாடக அரங்கில் பன்முக ஆளுமையாக குழந்தை ம.சண்முகலிங்கம், 16.11.2021 செவ்வாய்க்கிழமை கறுப்பி சுமதி, கவிதை சிறுகதை திரைப்பட எழுத்தாளர் இயக்குநர் நடிகர் (கனடா) கனேடிய தமிழ் கலைஞர்களின் அரங்கியல் செயற்பாடு’, 17.11.2021 புதன்கிழமை மு.வெ.ஆடலரசு வழக்கறிஞர்,மக்க ளிசை ஆய்வாளர்,நிகழ்த்து கலைஞர்,ஒருங்கிணைப்பாளர் ஆதித் தமிழர் கலை பண்பாட்டு மையம். ஆதித்தமிழர் கலைக் குழு. சென்னை (தமிழ்நாடு, இந்தியா) நாட்டார் கலை வடிவம் பாடல்கள்,18.11.2021 வியாழக்கிழமை முனைவர் ஜெ.முனுசாமி (யாழினி முனுசாமி) உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, எஸ்ஆர்எம் கலை அறிவியல் கல்லூரி, காட்டாங்குளத்தூர் (தமிழ்நாடு. இந்தியா) இன்குலாபின் ‘யாது எம் ஊர்?’: தேசம் தொலைத்தவர்களின் தீராக் கேள்வி ஆகிய விடயங்களில் கதையாடவுள்ளார். நிறைவுரையினை புத்தாக்க அரங்க இயக்கத்தின் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.ரி.அருள்குமரன் வழங்கவுள்ளார்.

இந்த் இணையவழி அரங்க கதையாடல் நிகழ்வில் ஆர்வமுடையவர்களை சூம் செயலி இலக்கம் 647334 8261கடவுச் சொல் ITM ஊடாக இணைந்து கொள்ளுமாறு புத்தாக்க அரங்க இயக்கத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

# தப்புடன் இனிப்பை உண்டால் தலையிடி வந்தே தீரும்!

(இன்று நவம்பர் 14. சர்வதேச நீரிழிவு நாள். அதனையொட்டி இக்கவிதை பிரசுரமாகின்றது.)

**- மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா - (மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், ஆஸ்திரேலியா)**

**சர்க்கரை வியாதி வந்தால்
சந்தோசம் பறந்தே போகும்
சாப்பாட்டைக் கண்டு விட்டால்
சலனமே மனதில் தோன்றும்**

**எப்பவும் இனிப்பை எண்ணும்
எதையுமே உண்ணப் பார்க்கும்
அப்படி உண்டே விட்டால்
அதுதொல்லை ஆகி நிற்கும்**

**திருமண வீடு சென்றால்
தித்திப்பு நிறைந்தே நிற்கும்
வகைவகை உணவை அங்கே
வரிசையாய் கண்கள் காணும்**

**அவையெலாம் உண்ணும் ஆசை
அளவிலா மனத்தை ஆளும்
நினைவெலாம் உணவாய் நிற்கும்
நிம்மதி பறந்தே போகும்**

**கொண்டாட்டம் வந்து விட்டால்
குதூகலம் நிறைந்தே நிற்கும்
குலோப்ஜான் லட்டு எல்லாம்
குறைவின்றி இருக்குமங்கே**

**நாக்கிலே நீரும் ஊறும்
நரம்பிலே முறுக்கும் ஏறும்
ஆர்க்குமே தெரியா வண்ணம்
அனைத்தையும் தின்னத் தோணும்**

**விரைந்தோடி நிற்கும் வெட்கம்
விரும்பிமனம் உண்ண நிற்கும்
வேண்டியதை உண்டு விட்டு
விழி பிதுங்கி நிற்போமே**

**இனிப்புகள் உள்ளே சென்று
இரத்தத்தில் கலந்து நின்று
முறைத்துமே எம்மைப் பார்க்க
முகமெலாம் கலங்கி நிற்போம்**

**மனைவியும் மகளும் சேர்ந்து
மங்களம் பாடித் தீர்ப்பார்
மளமள என்று சென்று
மருந்தினை விழுங்கி நிற்பேன்**

**விளம்பரம் ஒன்றைப் பார்த்து
விரைவுடன் படித்து நின்றேன்
விருப்பமாய் செய்தி அங்கே
விந்தையாய் இருந்ததங்கே**

**சர்க்கரை உள்ளோர் எல்லாம்
சங்கடம் கொள்ள வேண்டாம்
சரியான உணவு எல்லாம்
சந்தையில் இருக்கு இப்போ**

**செயற்கையாய் இனிப்புச் சேர்த்து
தின்பண்டம் இருக்கு இப்போ
வருத்தமே படவே வேண்டாம்
வந்துமே வாங்கித் தின்பீர்**

**அளவுடன் உண்ண வேண்டும்
அதைநிதம் பேண வேண்டும்
அனைவரும் மனதில் கொண்டால்
ஆனந்தம் வருமே நாளும்**

**தினமுமே நடந்து சென்றால்
தீராத நோயும் தீரும்
நடவுங்கள் எந்த நாளும்
நன்மைகள் உம்மைச் சேரும்**

**சர்க்கரை வியாதி கண்டு
சஞ்சலம் கொள்ள வேண்டாம்
சாப்பாடு எடுக்கும் போது
சமமாக எடுக்க வேணும்**

**உடற் பயிற்சி செய்திடுங்கள்
உணவு எலாம் மாற்றிடுங்கள்
மனத்தினிலே உறுதி கொண்டு
மாற்றிடுங்கள் பழக்கம் எலாம்**

**சோம்பல் நிலை மாற்றிடுங்கள்
சுறுசுறுப்பை ஏற்றிடுங்கள்
நாங்கள் வாழ வேண்டுமென்று
நாளும் எண்ணி நின்றிடுங்கள்**

**சர்க்கரை வியாதி தன்னை
சலிப்புடன் நோக்க வேண்டாம்
எப்பவும் உங்கள் வாழ்வில்
இனிப்புகள் தேவை அன்றோ**

**தப்புடன் இனிப்பை உண்டால்
தலையிடி வந்தே தீரும்
எப்பவும் அளவாய் உண்டால்
எவர்க்குமே விளைவு நன்றே**

**மருந்தினை விருந்தாய் உண்போம்
விருந்தினை மருந்தாய் உண்போம்
வருந்திநாம் நிற்க வேண்டாம்
வாழ்வெலாம் இன்பம் காண்போம்**

**வெளிச்சத்தை கொண்டு வந்த
விளம்பரச் செய்தி தன்னால்
சர்க்கரை வியாதி பற்றி
சங்கடம் அகன்றே போச்சு**

# 2022 வரவு–செலவுத் திட்டம் மக்களை ஏமாற்றியுள்ளது

## ஐ.தே.க. வேதனை

சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத் திட்டம் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநீதியை நியாயப்படுத்த மாத்திரமே பயன்படுத்த முடியும் என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

இம்முறை சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் தொடர்பாக கருத்து வெளியிடும்போதே அந்தக் கட்சியின் துணைத் தலைவர் அகிலவிராஜ் காரியவசம் இதனைத் தெரிவித்தார்.

கொரோனாத் தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மக்கள் சுமைக்கு ஆளாகியுள்ளனர்.

இருப்பினும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த மக்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது என அகிலவிராஜ் காரியவசம் குறிப்பிட்டார்.

காலைக்கதிர் Kalaikkathir

# படுகொலை செய்த அரசிடமே நாம் தீர்வைக் கேட்கிறோம்!

## முன்னாள் போராளி அரவிந்தன் வேதனை

இந்த அரசாங்கத்தால் தான் இனப் படுகொலைக்கு உள்ளானோம். ஆகவே, இந்த அரசாங்கத்திடமே எங்களுக்கு நடந்த அநீதிகளுக்குத் தீர்வைத் தர வேண்டும் என்று கேட்கின்றோம் என முன்னாள் போராளி அரவிந்தன் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்– வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலிருந்து முன்னாள் போராளிகள் அனைவர் சார்பாகவும் மாவட்ட ரீதியாக ஒவ்வொருவராக நாங்கள் தென் இலங்கையிலே உள்ள அரசியல் தலைவர்கள் மற்றும் முக்கியஸ்தர்களைச் சந்திப்பதற்கான ஒரு பயணத்தை மேற்கொண்டிருந்தோம்.

அந்த சந்தர்ப்பத்திலே, போராளிகளுடைய அன்றாட தற்போது இருக்கக் கூடிய பிரச்சினைகள், அடக்குமுறைகள், விசாரணைகள், தொடர்ந்து வரும் வழக்குகள், அரசியல் கைதிகளுடைய பிரச்சினை, காணாமல் போனவர்களுடைய பிரச்சினை, காணி அபகரிப்பு, தொல்பொருள் திணைக்களத்தினுடைய ஆக்கிரமிப்பு மற்றும் பெண் போராளிகளுடைய, அதிமுக்கியமான பிரச்சினைகள் தொடர்பாகப் பேசி இருந்தோம்.

மிக முக்கியமாக எதிர்வரும் நவம்பர் 27 ஆம் திகதி, அனுஷ்டிக்கப்பட இருக்கின்ற மாவீரர் தினம் தொடர்பாகப் பேசி இருந்தோம். காரணம் எங்களுக்கு மாவீரர் தினம் தொடர்பிலே, விதிக்கப்படுகின்றதடைகள், நீதிமன்ற உத்தரவுகள் தொடர்பாக அவர்களுக்குச் சுட்டிக்காட்டிய விடயம், இலங்கையிலே இரண்டு தரப்புகள் யுத்தத்திலே ஈடுபட்டிருந்த நிலையிலே ஒரு தரப்பை அவர்கள் ஒதுக்கி விட்டிருக்கக் கூடியதாகத் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்பட்டு இருக்கிறார்கள். அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றன.

இங்கே இறந்தவர்களை நினைவு கூருவது என்பது விடுதலைப் புலிகள் என்பது அறவே இல்லாத நிலையிலே, விடுதலைப் புலிகளிலிருந்த தங்களுடைய குடும்ப உறவுகளை நினைவு கூறுகின்ற ஒரு நிகழ்வே நடைபெற்று வருகின்றது.

ஆகவே அவர்களைப் புதைத்த இடத்திலே நாங்கள் வழிபாடுகளைச் செய்வதற்கு எங்களுக்கு அனுமதி வழங்க வேண்டும் என்பது தொடர்பாகக் கலந்துரையாடல்களை நாங்கள் செய்திருந்தோம். வடக்கு கிழக்கிலே, இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு, இராணுவ ஆட்சி நடைபெறுகின்ற ஒரு நிலை காணப்படுகிறது.

வடக்கு, கிழக்குப் பகுதி எங்குமே இராணுவக் காவலரண்கள் அல்லது தடைமுகாம்கள் காணப்படுகின்ற நிலைமை இருக்கின்றது. பொலிஸாருடைய அல்லது சிவில் சமூகத்தினுடைய வாழ்க்கையை இராணுவம் கொண்டு நடத்துகின்ற ஒரு நிலைமை இங்கே காணப்படுகின்றது.

இது தொடர்பாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் ஐயா, ஜே.வி.பி. யினுடைய சார்பிலே அவர்களுடைய தலைமைச் செயலகத்திலே நலிந்த ஜெயதீஸ மற்றும் கமநல அமைச்சராக இருக்கும் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சர் இராதாகிருஷ்ணன், யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வீடு உட்கட்டமைப்பு அபிவிருத்திக்குரிய ஜீவன் தொண்டமான் ஆகியோரை நாங்கள் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

ஜனாதிபதியையும் பிரதமரையும் சந்திப்பதற்கான முயற்சிகளை நாங்கள் மேற்கொண்டிருந்தோம். எங்களுக்கான நேரங்களை எடுத்துக் கொள்ள முடியாத, ஒரு நிலைமை காணப்பட்டது.

ஒவ்வொரு நாளும், நாங்கள் நினைவஞ்சலிகளைச் செய்வது அல்லது கடையடைப்பு என்று கூறினால் எங்களுக்கு 365 நாளும் போதாத ஒரு நிலைமை காணப்படும். ஒரு நாளை நாங்கள் மாவீரர் தினத்திலே போரிலே ஈடுபட்டு இறந்த போராளிகளை நினைவு கூறுவதற்கும், முள்ளிவாய்க்கால் 18 ஐ ஒட்டு மொத்த பொதுமக்களுக்குமான நினைவேந்தலுக்கான நிகழ்வாக, நாங்கள் அனுசரிக்கிறோம். அதை அனுமதிக்க வேண்டும்.

நாங்கள் சந்தித்துக் கதைத்த போது முன்னாள் போராளிகளுக்கு அவர்கள் முன்னுரிமை அடிப்படையிலே உதவிகளை வழங்குவதற்கு விரும்புகின்றனர் எனத் தெரிவித்திருந்தனர். இங்கே சில விடயங்களிலே ஜனாதிபதி கூறுகின்றமை போன்று மரண சான்றிதழ் பத்திரங்களை வழங்குவது என்பது, ஒருவருக்கு இருக்கக்கூடிய நோயை அறியாது அவருக்கு மருந்தை வைத்தியர் கொடுப்பதற்குச் சமமானது.

தமிழ் மக்களுக்கான தீர்வை, இந்த அரசாங்கத்தால் தான் இனப்படு கொலைக்கு உள்ளானோம். இந்த அரசாங்கத்திடமே நாங்கள் கேட்கின்றோம். எங்களுக்கு நடந்த அநீதிகளுக்கு ஒரு தீர்வைத் தரக் கேட்கின்றோம். தமிழ் மக்கள் தேசிய இனமாக சுய நிர்ணய உரிமையோடு சமத்துவமாகச் சிங்கள மக்களோடு வாழ்வதற்காக நாங்கள் மிகுந்த பிரயாசையோடு விரும்புகின்றோம்.

இனி ஒரு போரையோ அல்லது எதிர்கால சந்ததி ஒரு போருக்குள் செல்வதை நாங்கள் மறுதலிக்கின்றோம் அல்லது நாங்கள் அதை விரும்பவில்லை. அதனால்தான் நாங்கள் தென் இலங்கைக்குச் சென்று இது சம்பந்தமாகப் பேச விரும்புகின்றோம்.

இதனைவிட முன்னாள் போராளிகளுக்கு வீடுகள் இல்லை, காணிகள் வழங்கப்படவில்லை, மின்சாரம் இல்லை, மிக இக்கட்டான நிலைமையிலே வாழ்கின்றோம், 12 வருடமாக அரசு கூறிய எந்த விடயங்களையுமே, இங்கு முன்னெடுக்கவில்லை அல்லது ஒரு லட்சம் ரூபா நிதியிலே கடன் வழங்குகின்ற நிலை கூட இல்லை.

அந்த நிலையிலே, எங்களுக்கு, விசேடமாக ஜனாதிபதியினுடைய செயலணியால் நியமிக்கப்பட்ட மனித உரிமை ஆணைக்குழு, நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையிலே சாட்சியம் அளிக்கக்கூடிய ஓர் ஏற்பாட்டைச் செய்திருந்தார்கள். அந்த இடத்திலே சாட்சியம் அளித்திருந்தோம்.


போரிலே என்ன நடந்தது? என்பதை மிக அறுதியாகக் கூறியிருந்தோம். போராளிகள் தற்போது என்ன நிலைமையிலே இருக்கிறார்கள்? எங்களுக்கு இங்கே இவ்வளவு அடக்கு முறைகள், நாங்கள் எந்த நிலைமையிலே, விசாரணைகளை எதிர்கொண்டிருக்கின்றோம்.

அரசியல் கைதிகள் இத்தனை வருடமாகச் சிறைகளிலே வாடிக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விடுதலையாவதற்கு எந்த வழிவகையும் இல்லாமல் இருக்கின்றது என்பதை நாங்கள் கண்ணீர் மல்க தெரிவித்திருந்தோம். புலம்பெயர் தமிழர்களை இங்கே முதலீடுகளைச் செய்யுமாறு ஜனாதிபதி கேட்டிருக்கிறார்.

புலம்பெயர் தமிழர்களைத் தடை செய்து வைத்துக் கொண்டு ஜனாதிபதி அழைப்பது என்பது மிக ஏற்புடைய ஒரு காரணமாக எங்களுக்குத் தெரியவில்லை. விடுதலைப் புலிகளினுடைய தடையை நீக்க வேண்டும். ஏனென்று கேட்டால் விடுதலைப் புலிகளைத் தடை நீக்கி, ஜே.வி.பி. போல் நாங்கள் ஜனநாயக நீரோட்டத்திலே ஓர் அரசியலிலே பங்கு கொண்டு சிங்கள மக்களோடு, இணக்கமாக வாழக்கூடிய ஒரு நிலைமையை ஏற்படுத்த வேண்டும். போராளிகளைப் பின் தொடர்ந்து அவர்களை அடக்கு முறைக்குள் வைத்துக் கொள்ளாமல் திருப்பியும் அவர்களைப் பயங்கரவாதிகளாகவே சித்திரிக்காமல், நாங்கள் இப்போது சமூகத்துக்குள், சமூகமயப்படுத்தி இருக்கிறோம். நாங்கள் இப்போது பொதுமக்களாகவே இருக்கிறோம். ஆகவே எங்களுக்கான நிவாரணத்திட்டங்களைச் செய்து தர வேண்டியது இந்த அரசினுடைய கடமையே என்பதை அந்த ஆணைக் குழுவிலே பதிவு செய்திருக்கிறோம் என மேலும் தெரிவித்துள்ளார்.

# ஜனாதிபதி கோட்டாவுக்கு தலையில் கோளாறுள்ளது!

## தேரர் காட்டம்



விவசாயிகளின் கழுத்தைப் பிடிக்க முடியும் என ஜனாதிபதி கூறுகின்றார், அவருடைய தலையில் ஒரு கோளாறு உள்ளதை போன்று தெரிகிறது என தேவால்ஹிந்த அஜித தேரர் காட்டமாக தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஆட்சிக்கு வரும் போது விவசாயிகளுக்கு இலவசமாக பசளை வழங்குவோம் என சத்தமாக கூறி வந்தார்கள். இதனை நம்பி விவசாயிகள் அனைவரும் வரிசையில் சென்று வாக்களித்தார்கள். ஆனால் தற்போது இந்த அரசாங்கம் அந்த விவசாயிகளின் கழுத்தை பிடிப்போம் எனச் சொல்கிறது. இயற்கை பசளையை உபயோகிக்காவிட்டால் இராணுவத்தினரை கொண்டு விவசாயிகளின் கழுத்தை பிடித்து செய்ய வைக்க முடியும் என்று கூறுகின்றனர்.

இந்த கதைகளை கேட்டால் சிரிப்பு தான் வருகின்றது. சமூக வலைத்தளங்களில் சிறுவர்கள் கூட ஜனாதிபதியின் அந்தக் கருத்தை வைத்து நகைச்சுவையாகப் பதிவுகளை இட்டுள்ளார்கள்.

அர்ஜுன மகேந்திரன், அதே போல் மக்கள் பணத்தை, சொத்தை களவாடியவர்கள் நிறைய பேர் உள்ளனர். அவர்கள், பாரிய மோசடிகளில் ஈடுபட்டவர்கள். குற்றம் செய்தவர்கள் என கழுத்தைப் பிடித்து உள்ளே அனுப்ப வேண்டிய நிறைய பேர் உள்ளனர்.

அவர்களின் கழுத்தை தான் பிடிக்க வேண்டும். அதை விட்டுவிட்டு விவசாயிகளின் கழுத்தை பிடிக்க முடியும் என ஜனாதிபதி கூறுகின்றார். அவருடைய தலையில் ஒரு கோளாறு உள்ளதை போன்று தெரிகிறது.

விளக்கு அணையும் முன்னர் பெரிய பிரகாசத்தை கொடுக்கும் அதைப்போன்று தான் ஜனாதிபதியின் செயற்பாடுகளும், மக்களுக்கு எதிரான பேச்சுக்களும் காணப்படுகின்றன. விவசாயிகளின் பிரச்சினைகளை இணங்கண்டு விரைவாக அவற்றுக்கு ஒரு தீர்வை வழங்க வேண்டும் என குறிப்பிட்டுள்ளார்.

# ஆடையகத்துக்குள் புகுந்தது டிப்பர்!



கிளிநொச்சியில் வேகக்கட்டுப்பாட்டை இழந்த டிப்பர் வாகனம் ஒன்று ஆடையகம் ஒன்றுக்குள் புகுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்த டிப்பர் வாகனம் ஒன்றே இவ்வாறு விபத்துக்கு உள்ளாகி உள்ளது.

குறித்த கடையில் பணியாளர்கள் மற்றும் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக சென்ற மக்கள் என பலர் இருந்த போதும் எவருக்கும் எந்த விதமான காயங்களுமின்றி தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# பொது அறிவு பரீட்சை முடிவுகள்

## 07.11.2021ஆம் திகதி பிரசுரமான பொது அறிவு வினாக்களுக்கான விடைகள்

1. நியூட்டன்
2. 17 நாள்கள்
3. டிசெம்பர் - 3
4. கன்னியாகுமாரி
5. விற்றமின் K
6. ஹசரங்க
7. கிளாஸ்கோ
8. திருக்குறள்
9. 6ஆவது ஆண்டில்
10. 47, 68

## சரியான பதிலளித்தவர்கள் விவரம் -

| | | |
|---|---|---|
| 1. ஜெ. வினோஜன் | குடத்தனை | 10 |
| 2. கே.ஶ்ரீதரன் | கொழும்பு | 09 |
| 3. வி.வினோத்குமார் | மட்டக்களப்பு | 08 |
| 4. வி. வினோதினி | மட்டக்களப்பு | 08 |
| 5 எஸ்.சதுர்ஜினி | அல்வாய் | 08 |
| 6. எஸ். கருணாநிதி | யாழ்ப்பாணம் | 08 |

**26.05.2021 தொடக்கம் 07.11.2021 வரை நடைபெற்ற 67 பொதுஅறிவு தொடர் பரீட்சையில் 100 இற்கும் மேற்பட்டவர்கள் மிகவும் ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தார்கள். அவர்களுக்கு காலைக்கதிர் குடும்பம் சார்பாக மனமார்ந்த வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றோம்.**

இவ் 67 போட்டித் தொடரிலும் மொத்தமாகப் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் பரிசில் பெறும் விவரங்கள்.

முதலாமிடம் ஐ. கார்த்திகன் – யாழ்ப்பாணம்
இரண்டாமிடம் ஜெ. வினோஜன் – குடத்தனை
மூன்றாமிடம் கே.அனுஷன் – ஏழாலை
நான்காமிடம் ஏ.துஷான் – நீர்வேலி
ஐந்தாமிடம் எஸ். சதுர்ஜினி – அல்வாய்

போட்டிகளில் அதிக தடவை பங்குபற்றி பரிசில் பெறுபவர்– கே. ஶ்ரீதரன் – கொழும்பு

பரிசில் பெற்றவர்கள் தங்களுடைய பெயர் விவரங்கள், தொலைபேசி இலக்கம் போன்றவற்றை kalaikkathiredu@gmail.com அனுப்பிவைக்கவும்.

அடுத்தவாரம் முதல் இப்போட்டித் தொடரானது புதுப்பொலிவுடன் வித்தியாசமான துணுக்குகளுடன் உங்களுக்காக வரக் காத்திருக்கின்றது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

# பாழடைந்த வீடு ஒன்றிலிருந்து 14 வயது மாணவி சடலமாக மீட்பு

## சந்தேக நபரை கைதுசெய்ய பொது மக்களிடம் உதவி கோரும் பொலிஸ்

ஏழு வயது சிறுமி ஒருவருக்கு பாடம் சொல்லிக் கொடுக்கச் சென்று காணாமல் போனார் எனக் கூறப்படும் 14 வயதான பாடசாலை மாணவி தம்புள்ளை - கலோகஹ எல பகுதியில் பாலடைந்த வீடொன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட நிலையில், அந்தக் கொலை தொடர்பிலான பிரதான சந்தேக நபர் தொடர்ந்தும் தலைமறைவாகி உள்ளார்.

கடந்த ஒக்ரோபர் 6 ஆம் திகதி நடந்த இந்தச் சம்பவத்தில், பிரதான சந்தேக நபராகக் கருதப்படும் விக்ரமசிங்க ஆரச்சிலாகே சுமேத வசந்த அல்லது பஹன் எனும் நபரே பிரதான சந்தேக நபராக அடையாளம் காணப்பட்டுள்ளார்.

குருணாகல், மங்குலாகம, தொரட்டியா கெதர பகுதியைச் சேர்ந்த சந்தேக நபர், 35 வயதானவர் எனவும் 862495098 V எனும் தேசிய அடையாள அட்டையைக் கொண்டவர் எனவும் குறிப்பிடும் பொலிஸ் தலைமையகம், அவரின் படத்தையும் வெளியிட்டு அவரைக் கைது செய்ய உதவுமாறு பொது மக்களை கோரியுள்ளது.

அதன்படி சந்தேக நபர் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் தம்புள்ளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியின் 0718591091 எனும் இலக்கத்துக்கோ தம்புள்ளை குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரியின் 0718593103 எனும் இலக்கத்துக்கோ அழைத்து தகவல் வழங்குமாறு பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தம்புள்ளை - கண்டளம டி.எஸ். சேனநாயக்க பாடசாலையில் 9 ஆம் தரத்தில் கல்வி பயிலும், தம்புள்ளை - அத்துபாரயாய பகுதியைச் சேர்ந்த புத்தினி பியுமாலி எனும் மாணவி கடந்த ஒக்ரோபர் 10 ஆம் திகதி சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

பொலிஸ் தகவல்கள் பிரகாரம் -

சடலமாக மீட்கப்பட்டுள்ள குறித்த மாணவி, கடந்த 6 ஆம் திகதி தம்புள்ளை - ஹல்மில்லேவ, ஹபரத்தாவல பகுதியைச் சேர்ந்த நன்கு பரீட்சயமான குடும்பம் ஒன்றின் 7 வயது சிறுமிக்கு பாடம் சொல்லிக் கொடுக்கவென அழைத்து செல்லப்பட்டுள்ளார். குறித்த சிறுமியும், அவரது சிறிய தந்தை என அறியப்படுபவருமான நபரும் மோட்டார் சைக்கிளில் வந்து இவ்வாறு குறித்த மாணவியை அழைத்துச் சென்றுள்ளார் எனத் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.

பாடம் சொல்லிக் கொடுக்க சென்ற தனது மகள் மீள வீடு வந்து சேராதமையால், அது தொடர்பில் தேடிப்பார்த்த போது எந்தத் தகவலும் கிடைக்காததால், எச்.ஏ. சந்ரா ஜயசேகர எனும் தாய் தனது மகளை காணவில்லை என தம்புள்ளை பொலிஸ் நிலையத்தில் கடந்த 8 ஆம் திகதி முறைப்பாடளித்துள்ளார்.

இந்த முறைப்பாடு தொடர்பில் தம்புள்ளை பதில் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் எச்.எம்.எஸ். கருணாதிலக உள்ளிட்ட குழு விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

இந்நிலையிலேயே, தம்புள்ளை - கலோகஹ எல பகுதியில் பாழடைந்த வீடொன்றிலிருந்து துர்வாடை வீசுவதாக தம்புள்ளை பொலிஸாருக்கு பொது மக்கள் தகவல் கொடுத்துள்ளனர்.

பொலிஸார் அங்கு சென்று பார்த்த போது, யாரோ ஒருவரின் சடலம் கட்டில் மேல் கிடப்பது தெரியவரவே, அது தொடர்பில் தம்புள்ளை நீதிவான் நீதிமன்றுக்கு அறிக்கை சமர்ப்பித்து, நீதிமன்றின் உத்தரவுக்கு அமைய வீட்டின் கதவை உடைத்து உள்ளே சென்று பொலிஸார் சோதனை செய்துள்ளனர்.

இதன்போது தம்புள்ளை நீதிவான் எம்.ஏ. அமானுல்லாஹ் அந்த இடத்துக்கு சென்று பரிசோதனைகளை முன்னெடுத்துள்ளதுடன், குறித்த பாழடைந்த வீட்டின் கட்டில் மேல் துணிகளால் சுற்றப்பட்டிருந்த 14 வயது மாணவியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சடலத்தின் ஆடைகள் அனைத்தும் கலையப்பட்டிருந்தன எனப் பொலிஸார் இதன்போது அவதானித்துள்ளனர்.

இந் நிலையில், குறித்த சிறுமியை அழைத்து சென்ற நபரை பொலிஸார் தேடிப் பார்த்த போதும் அவரும் அவர் மனைவியும், மகளும் பிரதேசத்திலிருந்து தலைமறைவாகியுள்ளமை தெரியவந்துள்ளது.

இவ்வாறான நிலையிலேயே பிரதான சந்தேக நபரைக் கைதுசெய்ய தற்போது பொது மக்களின் உதவியும் கோரப்பட்டுள்ளது.

# சுன்னாகம், உரும்பிராய் லயன்ஸ்களால் குழந்தைகளுக்கு பால் மா விநியோகம்





சுன்னாகம், உரும்பிராய் லயன்ஸ் கழகங்களால் வலி.தெற்குப் பிரதேசத்தில் உள்ள 01 - 05 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு உடுவில் கலாசார மத்திய நிலையத்தில் வைத்து கடந்த வியாழக்கிழமை பால் மா விநியோகிக்கப்பட்டது.

உடுவில் கலாசார மத்திய நிலைய பொறுப்பு உத்தியோகத்தரும் சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினருமாகிய லயன் பத்மதேவமலர் மரியதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஆளுநர் சபையின் பிரதிப் பொருளாளரும் உரும்பிராய் லயன்ஸ்கழகசெயலாளருமாகியலயன்ம.மயூரதன் நிகழ்வை ஒழுங்கமைத்து நடத்தினார்.

இந்த நிகழ்வில் ஆளுநர் சபையின் மாவட்ட பிரதம இணைப்பாளரும் சுன்னாகம் லயன்ஸ் கழக செயலாளருமான லயன் சி.ஹரிகரன், ஆளுநர் சபை வலயத் தலைவர் லயன் பா.மரியதாஸ், சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செல்வராகினி, சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர்களான லயன் பொ.சிவகுமார், லயன் விசாலினி சிவகுமார், லயன் தினேஸ்குமார், லயன் விஜிதரன் ஆகியோர் பங்குபற்றினர்.

# மோதலைத் தடுக்கச் சென்ற 71 வயது பெண் பரிதாப சாவு

மொரட்டுவை - ஏகொடஉயண பொலிஸ் பிரிவில் தர்மபந்து மாவத்தை பிரதேசத்தில் இரு தரப்பினருக்கிடையில் ஏற்பட்ட தனிப்பட்ட முரண்பாட்டின்போது நபரொருவரால் தள்ளப்பட்டு கீழே விழுந்து 71 வயதுடைய பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

முரண்பாடு மோதலாக தீவிரமடைந்த போது அதனை விலக்குவதற்கு குறித்த பெண் முயற்சித்துள்ளார்.

இதன்போது சந்தேகநபரால் தள்ளிவிடப்பட்டு அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் ஏகொடஉயண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர் என பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.